897

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு - 67 பரல் - 8 10

ஏப்ரல் - 1993

ஜூன் 1993

DIGITIZED

031 m 211, N27 c.
1993
164895

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு

முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

உள்ளுறை

	பக்கம்
சிந்துவெளி நாகரிகம்	௨௮௧
தமிழ் நாவல்களில் காந்தீயச் சிந்தனைகள்	௨௮௬
பக்தி இலக்கியக்கொள்கை - வளர்ச்சி நிலைகள்	௨௯௨
காட்சியியல்	௨௯௮
திறனாய்வு - நோக்கில் அருணகிரிநாதர்	௩௦௩
தமிழ் வாழ்த்து	௩௦௬
ஏரகப் பொருப்பில் பூத்த பெருமாள்	௩௦௭
திருமந்திரக் காப்புச் செய்யுள்	௩௧௦
சித்திரைக் க(ன்)னி	௩௧௭
இலக்கியத் திறனாய்வும் இந்திய மொழிகள் இலக்கியங்களும்	௩௧௮

முருகவேள் பன்னிரு திருமுறை

— டாக்டர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராய பிள்ளை 940 00

முருகனின் பத்தித் திறத்தாலே இவ்வையம் முழுதும் உய்யும் எனப் பரவிய அடியார்களும், அவனடியைப் பரவிய வ.சு.செ. அவர்களும் யாரும் மறக்க முடியாத-வர்கள். ஞானத்தின் திருவிளக்காய் அமைந்த அந் நூல்களின் உள்ளக்கிடக்கையைப் பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் உரைவகுத்த வ. சு. செங்கல்வ ராயரின் தெய்வீகப்பணி நினைந்து, நினைந்து இன்புறத் தக்கதாம்; படித்துப், படித்துப் பரவசம் கொள்ளத் தகுந்ததாம் என்பதை இந் நூலுரை உணர்த்தாமல் உணர்த்துகின்றது.

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு ௨௦௨௪ - பங்குனி
ஏப்பிரல் - 1993
சிலம்பு-௯௭, பரல்-௮

சிந்துவெளி நாகரிகம்

பழம்பெரும் நாகரிகங்களுள் ஒன்றான சிந்துவெளி நாகரிகம் யாருடையது என்று இன்னும் யாராலும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. பெரும்பாலான வரலாற்றாசிரியர்களும் அகழ்வாய்வாளர்களும் திராவிடப் பண்பாடு என்ற ஒன்று இருந்தது என்று அறியாத காரணத்தால் சிந்துவெளிப் பண்பாடு ஆரியருடையதே என்று கூறிச் சென்றனர். இந் நிலையில் அது திராவிடப் பண்பாடே என்பதை முதன்முதல் எடுத்துக் கூறியவர் மேனாட்டுப் பாதிரியாரான தவத்திரு டாக்டர் எச். ஈராசு (Dr. H. Heras) அவர்களே.

அவருக்குப் பின் சிந்துவெளி முத்திரைகளில் பொறிக்கப் பெற்றுள்ள எழுத்துக்களைக் கொண்டு அது யாருடைய மொழி என்ற ஆய்வு தொடங்கியது. இதிலும் பெரும்பாலான அறிஞர்கள் அது சமக்கிருத மொழி என்றே கூறலாயினர். ஈராசு பாதிரியார் தொடங்கி ருசிய, பின்னிசு அறிஞர்கள் முதலானோர் அது திராவிட மொழிதான் என்று கூறி வருகின்றனர். தமிழக அரசுப் பாவாணர் அகர முதலித் திட்ட இயக்குநர் டாக்டர் இரா. மதிவாணன் அவர்கள், அவை தமிழ் எழுத்துக்களே என்று முடிவு செய்து நிறுவ முயலுகின்றார். இதை இன்னும் அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளத் தயங்கி வரும் நிலை. மூவாயிரத்துக்கு மேற்பட்ட முத்திரைகளில் தமிழ்ப் பெயர்களே இருக்கின்றன என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இது இவ்வாறிருக்க ஆரிய வேதங்களுள் பழமையானதான ரிக் வேதத்தை ஆழமாகப் பயின்று அதில் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு சிந்துவெளிப் பண்பாடு தமிழர் பண்பாடே, அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பதை நிலைநாட்ட முற்பட்டுள்ளவர் ஆய்வறிஞர் திரு. குருவிக்கரம்பை வேலு அவர்கள்.

அரப்பா எனும் பழமையான நகர் ரிக் வேதத்தில் 'அரியூப்பியா' என்று குறிப்பிடப் பெற்றிருக்கின்றது என்றும்

வேதம் காட்டும் அரப்பாவைப் பற்றி 'அரப்பாவில் தமிழர் ஆட்சி' என்ற நூலின் வழி புதிய கருத்தை நிலைநாட்டினார் இந் நூலாசிரியர் திரு வேலு.

குழப்பத்தைத் தவிர்க்க ஒரு முனை கிடைத்த சூழலில் அவர் தொடர்ந்து ரிக் வேதத்தையே நன்கு வரிக்குவரி படித்து அதில் கூறப்பட்டிருக்கும் மன்னர்கள் தமிழர்களே என்ற முடிவுக்கு வந்து 'சிந்துவெளித் தமிழர்கள்' என்ற புதிய ஆய்வு நூலைப் படைத்துள்ளார்.

சிந்துவெளியில் வாழ்ந்தவர்கள் யார் என்பதற்குப் பலர் பலவாறாகப் பதிலளிக்கையில் அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்று வேலு முடிவு செய்துள்ளார். அந்த நகரம் அழிவுற்றதற்குப் பல காரணங்கள் கூறி வருகையில் அதற்குக் காரணம் ஆரியர்கள் பெரிய அணைகளை உடைத்து வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தி அதில் நகரங்களையும் மக்களையும் மூழ்கச் செய்தனர் என்பதை ரிக் வேதச் சான்று களைக் கொண்டே நிறுவியுள்ளார்.

முதலில் அரியூப்பா நாட்டில் தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தனர் என்பதை ரிக் வேதத்தைக் கொண்டே நிறுவுகிறார்: நாடோடிகளான ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் வந்த காலத்தில் தமிழர்கள் சிந்துவெளியில் பல நகரங்களை அமைத்து மிகச் சிறப்பாக வாழ்ந்து வந்தனர்;

அங்கே மன்னராட்சியே நடைபெற்று வந்தது. மன்னர்கள் பெரும்பெரும் கோட்டைகளை அமைத்து அதில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர்; கோட்டைகளைச் சுற்றி அகழிகளை அமைத்திருக்கின்றனர்; சில இடங்களில் அகழிகளில் ஆற்றையே அரணாக அமைத்திருக்கிறார்கள்; நாடோடிகளான ஆரியர்களுக்கு இது வியப்பை அளித்திருக்கிறது: நீரையே அரணாக அமைத்துக் கொண்டு அதற்கு இடையே கோட்டைகளைக் கட்டிக் கொண்டு தாசர்கள் (தமிழர்கள்) வாழ்கின்றனர் என்று குறையாகக் கூறிப் புலம்புகின்றதைப் பல ரிக் வேதச் சான்றுகளைக் கொண்டு நிறுவுகிறார் வேலு;

அணைகளைக் கண்டு ஆரியர்கள் அஞ்சியுள்ளனர்; தண்ணீரைச் சிறைப்படுத்துவதற்காகத் தாசர்கள் செய்த சூழ்ச்சி என்று எண்ணி அவற்றைத் தகர்த்து விட்டால்

164895

தண்ணீர் விடுதலை பெறும் என்று தவறாக எண்ணி அதைத் தகர்த்திருக்கின்றனர்.

அணைகள் கட்டி நீரை ஒழுங்கு செய்து முறையாகப் பாசனம் செய்து தாசர்கள் வாழ்ந்த முறை ஆரியர்களுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்திருக்கின்றது. இதன் பொருட்டும் அணைகளைத் தகர்த்திருக்கின்றனர்;

ஆரியர்கள் நாடோடிக் கொள்ளையர்கள். அவர்களுக்கு இதுபோல் செல்வச் செழிப்புடன் நகர்கள் அமைத்து வசதியாக வாழ்ந்த தாசர்களின் வாழ்க்கை முறை பொறாமை கொள்ளச் செய்திருக்கிறது;

முற்காலத்தில் செழிப்பைக் காட்டுவது கால்நடைச் செல்வங்களே. பல்லாயிரக்கணக்கான பசுக்களைத் தமிழர்கள் கொட்டில் அமைத்து வளமாக வாழ்ந்து வந்தது கால்நடைகளை ஓட்டிக் கொண்டு ஊர்ஊராகத் திரிந்துவந்த ஆரியர்களுக்குச் சினத்தை உண்டு பண்ணியுள்ளது. எனவே கொட்டில்களைத் தகர்த்துப் பசுக்களைக் கொள்ளை கொண்டிருக்கின்றனர், தண்ணீரைச் சிறை செய்ய அணைகள் கட்டியதே பாவம் என்று எண்ணிய ஆரியர்கள் பசுக்களைக் கொட்டிலில் அடைத்துப் பாதுகாத்த முறையையும் வெறுத்துள்ளனர். எனவே தமிழர் வாழ்வைக் குலைக்க அணைகளை உடைத்திருக்கின்றனர்; ஆநிரைகளைக் கவர்ந்துள்ளனர்;

இம்முறையே சங்க காலத்தில் போர் முறையாக மாறி விட்டதைத் தொல்காப்பியம் நமக்கு உணர்த்துகிறது; முதலில் பகைவர் நாட்டிற்குச் சென்று பசுக்களைக் கவர்ந்து வர வேண்டும்; இதற்கு 'வெட்சி' என்ற ஒரு துறை அமைத்துள்ளனர்; பகைவர்கள் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டு வருவர்; இதற்குக் 'கரந்தை' என்ற துறையமைத்தனர்.

"வெட்சி நிரை கவர்தல் மீட்டல் கரந்தை யாம்" என்பது புறப்பொருள் வெண்பாமாலை வரி;

போரைத் தொடங்குவதற்கு முதற் கட்டமாக ஆநிரைகளைக் கவர்தல் என்ற முறை ஆரியர்கள் தாசர்களின் பசுக்களை அவ்வப்போது கவர்ந்து சென்று அதைத் தாசர்கள் மீட்ட செய்தி ரிக் வேதத்தில் பல இடங்களில் உள்ளதை வேலு சுட்டிக் காட்டியுள்ளார்: ஆரியர்களுடைய கொள்ளை முயற்சி பிற்காலத்தில் போர் முறையாகவே மாறி

இலக்கணத்தில் இடம் பெற்றுள்ள செய்தி விந்தையாகவே உள்ளது.

'உண்டாட்டு' என்பது வெட்சியில் ஒரு துறை, பிற நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்துவந்த வீரர்களுக்கு ஊரார் முன்னிரவில் குடக்கள்ளைக் கொடுத்துக் குடிக்கச் செய்து களிப்பில் மிதப்பர். இது தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் கூறும் இலக்கணம்.

இதுவே வேதகாலத்தில் நடந்திருக்கிறது என்பதை ரிக் வேதம் காட்டுகிறது என்கிறார் வேலு. ஆரியர்களின் தலைவனான் இந்திரனுக்கு ஆரியர்கள் சோமபானத்தைக் குடம் குடமாகக் கொடுத்துக் குடிக்கச் செய்து 'இந்திரனே, தாசர்களின் பசுக்களைக் கவர்ந்து கொண்டு வா' என்று இறைஞ்சியுள்ளதை வேலு எடுத்துக் காட்டுகிறார்.

பசுக்களைக் கவர்வதில் போர் ஏற்பட்டுக் களத்தில் தமிழ் மன்னர்கள் மடிந்ததைச் சான்றுகளுடன் அவர் நிறுவுகிறார். 'தமிழச்சி தானு' தன் மகனுடன் போருக்குச் செல்கிறாள். முதல் நாள் போரில் கணவன் இறந்து விடுகிறான். தானு மகனுடன் களத்திற்குச் செல்கிறாள். மகன் மடிகிறான். தானு தானும் போரில் இறக்கிறாள். மகன் உடல் மீதே அவள் உடலும் வீழ்கிறது. இதை ரிக் வேதமே காட்டுகிறது என்கிறார் வேலு.

தமிழ்த் தாய்களின் வீரத்தைப் புறநானூறு காட்டுகிறது என்போம். 'புறநானூற்றுத் தாய்' என்று போற்றுவோம். புறநானூற்றுத் தாய்க்கு முன்னோடியாகத் 'தமிழச்சி தானு' வாழ்ந்த கதையை வேதம் நமக்குக் காட்டுகிறது.

தமிழ்த் தாய்களின் வீரத்தைப் புறநானூறு காட்டுகிறது என்போம். 'புறநானூற்றுத் தாய்' என்று போற்றுவோம். புறநானூற்றுத் தாய்க்கு முன்னோடியாகத் 'தமிழச்சி தானு' வாழ்ந்த கதையை வேதம் நமக்குக் காட்டுகிறது.

அகத்தியன், வசிட்டன், விசுவாமித்திரன் ஆகியோரின் ரிக் வேதப் பாடல்கள் 'இமயம் முதல் குமரி வரை தமிழ் (ஒரே மொழி) பேசும் மக்களைக் கொண்டதாக இருந்தது' என்பதைக் காட்டுகின்றன.

அரப்பா எனும் அரியூப்பாவைத் தலைநகராகக் கொண்டு வரசின மன்னர் பரம்பரை ஆண்டு வந்தது. அதுபோல் ஏழு விதமான நகரங்களும் கோட்டைகளும் இருந்தன.

(ரிக் வேதம் 7-18-12) அந்த நாட்டிற்கு உதவிரச என்று பெயர். உதவிரச என்றால் புனல் என்று பொருள். நீர் வளம் மிக்க நாடு.

இன்றுள்ள அஞ்சல் துறைக்கு முன்னோடியாகப் புறாக்கள் வழி செய்தியனுப்பும் முறையைக் கூறுவதுண்டு, தமிழர்கள் அரப்ப நாட்டில் இதுபோல் புறாக்களைப் பயன்படுத்தியுள்ளனர். பகைவரான ஆரியர் முற்றுகையிட்டுள்ள செய்தியை அண்டை நாட்டு மன்னர்களுக்குப் புறாவழி செய்தி அனுப்பியிருக்கிறார்கள். எனவே அப் புறாக்களையே கண்டு ஆரியர் அஞ்சியிருக்கின்றனர். எமனின் ஊர்தியாக எருமையைக் கூறுவதுண்டு. ஆரியர்களோ இப் புறாக்களையே எமனின் ஊர்தியாகக் கருதி அஞ்சியுள்ளனர். உலகமெங்கும் அமைதியின் சின்னமாகப் போற்றப் பெறும் புறா ஒரு காலத்தில் ஆரியர்களின் கருத்துப்படி எமவாகனமாகக் கருதி அஞ்சப்பட்டிருக்கிறது.

இதுபோல் பல அரிய செய்திகளை ஆழ்ந்து வேதத்தைப் படித்துத் திரட்டிக் கொடுத்துள்ள திரு. குருவிக்கரம்பை வேலு பாராட்டுக்குரியவர்.

புறாவைக் கண்டு அஞ்சிய ஆரியர்கள் தமிழர்கள் வழிபட்டுவந்த லிங்கங்களைக் கண்டும் அஞ்சியுள்ளனர். அதை அவர்களுடைய நாடோடிக் கற்பனையுடன் சிசுன தேவன் (ஆண் குறி வடிவினன்) என்று தவறாகப் பழிக்கின்றனர். அதுபோல் வடிவில் எந்தப் பொருள் இருந்தாலும் அஞ்சியிருக்கின்றனர். பெண்கள் நீரெடுக்கும் கிணற்றைச் சுற்றி மரச் சட்டங்களில் தமிழர்கள் வேலி அமைத்துள்ளனர். நீரிறைக்கும்போது மரச்சட்ட முனைகள் பெண்களைத் துன்புறுத்தியிருக்கின்றன. அதைக்கூட அவர்கள் குறைபாடாக இந்திரனிடம் முறையிட்டு 'இவற்றிலிருந்து எங்கள் பெண்களைக் காப்பாற்று' என்று வேண்டியுள்ளனர். இதிலிருந்து இலிங்க வழிபாடு அரப்ப நாட்டில் பரவலாக இருந்ததை அறிகிறோம். தமிழினத் தந்தை பெரியார் வழியில் சீர்திருத்தக் கருத்து கொண்ட திரு. வேலு இதையே 'இலிங்கம் என்பது ஆண் குறி வழிபாடு' என்று வரைந்து நூலில் பொருள் கொண்டுள்ளது ஏற்புடைத்தன்று.

புதிய புதிய செய்திகளைத் திரட்டித் தரும் நூலாசிரியரைப் பாராட்டி மேலும் தொடர்ந்து ஆய்வு நிகழ்த்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

தமிழ் நாவல்களில் காந்தீயச் சிந்தனைகள்*

பேராசிரியர், செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்,
டாக்டர் நல்லாசிரியர், முனைவர்,
சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.
[இயக்குநர், தமிழ் ஆய்வு மையம், மயிலாடுதுறை]
(முன் இதழ் உசசஆம் பக்கத் தொடர்ச்சி)

அகிலனின் புதுவெள்ளம் :

அகிலனின் நாவல்களில் காந்தீயத்தின் செல்வாக்கை முழுமையாகக் காண்கின்றோம். அகிலனின் "நெஞ்சின் அலைகளில்" நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைத் தம் மாந்தர்களில் மின்வெட்டுப் போலக் காட்டுவார். "பெண்" என்ற நாவலில், ஐ. சி. எஸ். காரன் உள்ளத்தில் விடுதலை வித்தை ஊன்றுவது மட்டுமின்றிக் காந்தீயக் கனியாகப் பழுக்கவும் செய்கின்றார் அகிலன்.

"புதுவெள்ளம்" என்ற நாவலில், விடுதலைக்கு முன்னும் பின்னுமாக மோதிவரும் சமூக வெள்ளத்தின் போக்கைச் சித்திரிக்கின்றார் அகிலன். அதில் காந்தீயத் தாக்கம் மறைமுகமாக ஆங்காங்கு வெளிப்பட்டாலும், அடிநாதமாக விளங்குவது காந்தீயமே.

> "தெற்கே கன்னியா குமரியிலிருந்து வடக்கே இமயம் வரையிலும் அப்போது விடுதலை உணர்ச்சி என்ற புதுவெள்ளம் பொங்கிப்பெருகி அலைமோதிக் கொண்டிருந்தது; அமைதியாக வாழ்ந்துவந்த மக்களை அலைக்கழிக்க வந்த வெள்ளம் அல்ல அது. அடிமைத் தளைகளையும், சுரண்டல் முறைகளையும் வேரறுக்க வந்த சத்தியப் பெருவெள்ளம். ஏழை எளியவர்களுடைய கூரைக் குடிசைகளையோ, உயிர் உடைமைகளையோ அடித்துக்கொண்டு போவதற்கு அது வரவில்லை. முற்றிலும் மாறாக அழிவை நோக்கித் தேய்ந்து கொண்டிருந்த நம் சமுதாயத்திற்குப் புத்துயிரும் புதுவாழ்வும் கொடுக்கவந்த புனித வெள்ளம்; அதுவே மகாத்மா காந்தி என்ற மனித வெள்ளம்; தியாகப் பெரும்புனல்"

* 9-10-92 இரவு திருச்சிராப்பள்ளி அனைத்திந்திய வானொலி நிலையத்திலிருந்து ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவு

என்று அகிலன் இந்த நாவலில் உணர்ச்சி கொந்தளிக்க வரைகின்ற வரிகள் நம் கண்களில் நீரை வரவழைக்க வல்லவை. இந்த வெள்ளத்தில் மிதந்து வரும் சின்னஞ்சிறு மனிதப் பூக்களாக, முருகையனையும், சாந்தாவையும், சுந்தரத்தையும், முனியாண்டியையும், பெருமான் சாமியையும் நமக்குக் காட்டுகின்றார் அகிலன்.

நாட்டு விடுதலைக்குப் பின் தலை விரித்தாடும் கலப்படம், கள்ளச் சந்தை, பதுக்கல், பாசிபிடித்த பணம், கையூட்டு ஆகிய தீய பேய்களைச் சாடுகின்றார் "புதுவெள்ளத்தில்". முருகையன், சாந்தா ஆகிய கதை மாந்தரின் பேச்சிலும், செயலிலும், எண்ண ஓட்டத்திலும், கருத்தசைவிலும் காணப்படுபவை எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை, ஆக்க வேலைக்கு ஏற்ற உழைப்பு, தீமையைப் போக்குதற்கு அறத்தின் வேர் என்ற காந்தீயத்தின் புதிய அலைகள் ஆகும்; இந்த அலைவீச்சில் இலக்கியச் சுவை கமழக் கமழப் புதிய வெள்ளத்தைப் படைத்துள்ளார் அகிலன்.

சுதந்திர உணர்வு மேலோங்கும் காலத்தில்தான் நல்ல இலக்கியங்கள் தோன்ற முடியும். விடுதலை வேட்கை உணர்வு நல்ல நூல்கள் உருவாவதற்குத் தூண்டுகோல் ஆகின்றது. அடிமை நிலையில் உள்ள காலத்தில் சிறப்பான இலக்கியங்கள் தோன்றுவதில்லை. ஆகவே இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்திலும், அதற்குப் பிந்திய காலக் கட்டத்திலும் அகிலன் எழுதிய நாவல்கள் குன்றின்மேல் இட்ட விளக்காகச் சாகாத் தன்மை பெற்று விளங்குகின்றன.

காந்தீயத் தத்துவத்திற்கு அடித்தளமாக உள்ளவை அகிம்சையும் சத்தியமும் எனலாம்; "மனிதனை மையமாகக் கொண்டு மனித நலனைக் கட்டிக் காக்கத் தோன்றிய அறப் புரட்சி இயக்கமே காந்தீயம் ஆகும். "நாம் முன்னேற வேண்டுமானால், வரலாற்றைத் திருப்பக் கூடாது; புதிய வரலாற்றைப் படைக்க வேண்டும்" என்று கூறியவர் காந்தி அடிகள். காந்தியடிகள் கண்ட சர்வோதய சமுதாயம் தனி மனித வளர்ச்சிக்கு முழுவாய்ப்பு அளிக்கின்ற, ஏழையென்றும் அடிமையென்றும் எவரும் இல்லாத, சாதி சமய வேறு

பாடற்ற, சுரண்டலற்ற, பரவல் முறையில் கிராமிய நாகரிகம் வளர்கின்ற, அன்பும் அருளும் கோல் ஓச்சுகின்ற ஓர் அமைப்பாக இருக்கும். இன்றைய சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை எல்லாம் நீக்கி மனிதர்களை மனிதர்களாக வாழச் செய்வதே காந்தியப் பார்வை ஆகும்; அகிலன் இதில் தேர்ந்தவர் ஆவார்.

காந்தி அடிகள் இலக்கியம் பற்றியும் தெளிவான கொள்கைகளைக் கொண்டிருந்தார்; தம்முடைய "யங் இந்தியா" இதழில் அவற்றை அவ்வப்போது வெளிப்படுத்தினார்: "மேற்கிலிருந்து தன்னல நோக்கை வளர்க்கின்ற, கவர்ச்சியான உருவங்களைக் கொண்ட இலக்கியம் இங்கே வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடுகின்றது: நமது இளைஞர்கள் அவற்றிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வது மிகவும் தேவையாகும்" என்று எழுதிய பகுதி குறிப்பிடத்தக்கது. ("Young India, Sept. 1928) இங்குக் குறிப்பிடப்பட்ட அகிலனின் இரண்டு நாவல்களும், வெளிப்படையாகவே உரத்த குரலில் ஆசிரியர் முரசறைந்து காந்தியச் சிந்தனையை வெளிப்படுத்துவதைக் காணலாம்;

பிற தமிழ் நாவல்கள் :

1927இல் கா. சி. வேங்கடரமணி எழுதிய "முருகன் ஓர் உழவன்" அழகிய படைப்பு; முதல் தேசிய இயக்க நாவலான தேசபக்தன் கந்தனுக்குப் பிறகு எழுந்த படைப்பு. தேசிய இயக்கம் குறித்து எழுதிய படைப்பாளிகளை இரண்டு வகைப்படுத்தலாம். சுதேச இயக்கத்தோடு தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு அதே காலத்தில் எழுந்த நாவல்கள்; விடுதலை பெற்ற பிறகு, "விடுதலை பெற எவ்வாறெல்லாம் போராடினோம்? இன்று எப்படி இருக்கிறோம்?" என்று பெருமூச்சு விடுவது. காந்தி அடிகளின் "Go back to village" என்ற முழக்கம், ஆங்கில அடிமைக் கல்வி, மதுவிலக்கு ஆகியவற்றை "முருகன் ஓர் உழவன்" எடுத்துக்காட்டுவதால் தேசிய இயக்க உணர்வு நாவல் என்று குறிப்பது பொருந்தும்;

சங்கரராம் 1940இல் படைத்த "மண்ணாசை"யை வேங்கடரமணியின் நாவலுடன் ஒப்பிட்டு, ஒரு காந்திய நாவல் என்பர் திறனாய்வாளர்; சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுத் தன் நிலத்தை அடகு வைத்து, துன்பப்படும் விவசாயியாகிய வேங்கடாசலம், கொடிய துன்பம் வந்த போதிலும் கூட, தன் மண் உரிமையை இழக்கத் துணியாத

உணர்வின் வழியாக, அந்நியரிடையே இருக்கும் தன் நாட்டை—நாட்டின் சொந்த உரிமையை இழந்துவிடக் கூடாது என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டி இருப்பதால், இதனை ஒரு தேசிய விடுதலை இயக்க நாவல் என்று நாம் கருதலாம்.

ஆர். சண்முகசுந்தரம் 1942இல் படைத்த "நாகம்மாள்" கிராமமே எல்லாம் என்ற காந்தீயக் கருத்தையே மையமாய்க் கொண்ட நாவல். "சண்முகசுந்தரம் நாட்டுப் பிரிவினை இயக்கத்தை மனத்தில் கொண்டு, கிராமத்தில் நிகழும் வீட்டுப் பிரிவினையைக் கண்டார். அவரது படைப்பு மையமாக விளங்குவது நிலம். கிராமங்களின் நிலம்தான் உற்பத்தி சாதனம்; கிராம மக்களின் சிந்தனை, உயிர்மூச்சு எல்லாமே நிலத்தில் அடங்கியுள்ளது. நிலத்தகராறு அவரது சிந்தனையில் மையம் கொண்டுள்ளது; அவரது நாவல்களில் நிலத் தகராறும், பாகப் பிரிவினையும் முக்கிய கருத்தாக விளங்குகின்றன" என்பர் திறனாய்வாளர்; (எஸ். தோதாத்திரி, "தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு - பக்; 228).

ம. சி. கல்யாணசுந்தரம் எழுதிய "இருபது வருஷங்கள்" விடுதலை இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்; 1965இல் வெளிவந்தது. ஒரு திடமான காந்தியவாதியாகத் தொடங்கிய ஒருவரது வாழ்வு, வாழ்க்கையின் பொன் விலங்குகளுக்குத் தப்பியோடப் பார்த்து முறிந்து போன கதை இது; காந்தீயக் கொள்கைப் பிடிப்பு உடையவனைப் பாதிக்கும் சோதனைகளை இதில் காண்கின்றோம்;

காந்தீயம் விடிவெள்ளியாக மலர்ந்த காலத்தில், பழைய தலைமுறையும், புதிய தலைமுறையும் எவ்வாறு ஒன்றைவிட்டு ஒன்று விலகியது என்பதைத் தெளிவுடன் காட்டும் "மண்ணில் தெரியுது வானம்" 1969இல் வெளிவந்த சிதம்பர சுப்பிரமணியத்தின் படைப்பு. பழைய தலைமுறை மாற்றானிடம் பட்ட அடிமை நிலைக்கு ஒரு மதிப்புக் காட்டியதை மறுத்துக் காந்திய நெறியில் புதிய தலைமுறை பல அல்லல்களினிடையே விடுதலையை நோக்கி முன்னேறிய கதையைச் சுவைபட ஆசிரியர் இதில் சொல்லியிருக்கின்றார்;

ஜெயகாந்தனின் படைப்பு :

ஜெயகாந்தன் 1983இல் படைத்த "ஈசுவர அல்லா தேரே நாம்" காந்தியடிகளின் கொள்கைகளை முழுக்க

முழுக்க அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட ஓர் உயர்ந்த "காந்தியச் சிந்தனைக் காவியம்" என்று கூறலாம். இந்து முசுலீம் ஒற்றுமை, மதுவிலக்கு, சர்வோதய மாண்பு, தீண்டாமைக் கொடுமை, முதலிய காந்திய நிர்மாணத் திட்டங்களை இவ்வளவு அழகாகப் படம்பிடித்த தமிழ் நாவல் வேறு இல்லை என்று பாராட்டல் தகும்.

மதங்களாலேயே இந்திய வாழ்க்கையில் மாற்றங்கள் காண முடியும் என்று நம்பிய ஞானிகள் பலர். அவர்களில் நாமறிந்த நம் காலத்திய ஞானி மகாத்மா காந்தியடிகள். அவரது வழியில் இதற்குத் தீர்வு காண முயலும் ஆதி இந்த நாவலுக்காக மட்டும் பிறந்தவர் அல்லர்.

ஜயஜய சங்கர நாவல் தொடங்கி இன்னும் பிற படைப்புக்களிலும் ஆதி என்கிற இந்த பாத்திரம் இடையறாது தோன்றி காந்திய அணுகல் முறையை சிபாரிசு செய்தே வருகின்றார்.

அத்தகு பார்வையில் நமது மதங்களுக்கிடையே இசைவும், சமுதாயத்தில் பொருளாதார சமத்துவமும் நிகழக் காந்திய வாழ்வியல் முறைகளை மீண்டும் ஒருமுறை சித்த உறுதியுடன் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்தில் விளைந்த கதை இது"

என்ற ஜெயகாந்தனின் "முன்னுரை", இந்த நாவலின் ஏற்றத்தையும், அடித்தளத்தையும் மிக அழகாகக் கூறி விடுகின்றது.

"கொடுங்கோலனின் கசையடிக்குப் பயந்து பணியும் நிர்ப்பந்த அடிமைத்தனத்தை விடவும், அன்புக்குக் கண்மூடித் தனமாய் வலிந்து ஆட்படுவது தீங்கு விளைப்பதாகும்" (பக். 116).

"சூரியன் சந்திரன் ஆகியவை கூடச் சில விதிகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் இயங்குகின்றன. அந்தக் கட்டுப்பாட்டை மீறினால் அவை சிதறுண்டு போகும். அதுபோலவே மனிதர்கள் தத்தமக்குரிய கட்டுப்பாட்டைக் காப்பாற்றி வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் சிதறுண்டு போவார்கள்" (பக். 175).

"நம்மிடையே திமிங்கிலங்களும் சுறாக்களும் திரிகிற வரைக்கும் அவற்றை எதிர்த்து நமக்குப் போராடத் தெரியாத வரைக்கும் அவை நம்மை விழுங்குவதில் தவறில்லை" (பக். 228).

ஆகிய காந்தியடிகளாரின் சிந்தனை வாசகங்களை முழுமையாகக் கையாண்டு, கதையைக் கொண்டுபோகும் ஜெயகாந்தன் "ஆதி" என்ற பாத்திரத்தின் வழியே காந்தியத்தை மிகத் தெளிவாகப் படம் பிடித்திருக்கிறார். டாக்டர். மு. வ., வின் "அறவாழி" போல இந்தப் பாத்திரம் தன்னிகரற்ற இடம் பெறுகின்றது.

இவ்வாறே ஜெயகாந்தனின் "அபுபக்கரை" மறக்கவியலாது; மறக்க வியலாத மாமனிதர்களைச் சொல்லோவியமாக வடித்து, வரலாறு படைத்து விட்டார். இந்து முசுலீம் ஒற்றுமை இதய நாதமாக ஒலிக்கும் இயல்பை இந்நாவல் முழுதும் காணலாம். நாவலின் தலைப்பே உயர்ந்த இலட்சியத்தை—சமநிலைப் பண்பை—பறைசாற்றுவதாக அமைந்துள்ளது; சையதுபுரம் பள்ளிவாசலும், காந்தி இல்லமும் நம் இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்று விடுகின்றன.

"இங்கு நிலவும் குழப்பங்கள்—போராட்டங்களிலிருந்து விடுபட்டு, புகழ் மிகுந்த, வெல்லற்கரிய ஒரு நாடாக, இந்தியா—இஸ்லாமிய மதம் அதன் உடலாகவும், இந்து மதம் அதன் மூளையாகவும் கொண்டு, எழுவதை என் மனக் கண்களிற் காண்கின்றேன்" என்ற விவேகானந்தரது பொருள் பொதிந்த மேற்கோளுடன் (விவேகானந்தர் தம் முஸ்லிம் நண்பர்க்கு 10-6-88இல் அல்மோராவிலிருந்து எழுதிய கடிதம்) தம் புதினத்தைத் தொடங்கியுள்ளார் ஜெயகாந்தன்.

இந்து, இஸ்லாம் மதங்களின் இடையே இசைவும், சாதி வேற்றுமை பாராட்டாத பண்பும் உடைய ஒரு புதிய சமுதாயத்தையே தம் புதினத்தில் உருவாக்கிக் காட்டியுள்ளார். இதில் வரும் காந்தியச் சிந்தனையாளராகிய 'ஆதி'யைக் கையெடுத்துக் கும்பிடலாம் என்று தோன்றுகின்றது. இதுவே காந்தியச் சிந்தனைக்கு இந்த நாவலின் வழியே கிடைத்த பெருவெற்றி என்று கூறலாம்.

(தொடரும்)

பக்தி இலக்கியக் கொள்கை—வளர்ச்சி நிலைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

(முன்னிதழ் உசுஅ ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகப்பாடல்களும் பக்திப்பாடல்களும் :

பக்திப் பாடல்களில் அமைந்த காதல் ஆன்மக்காதலாக அமைந்துள்ளமையால், அகப்பாடல் நெறிக்கு மாறுபட்டு நிற்கும் நிலையையும் காணலாம். அகத்திணைப் பாடல்களில் "சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறார்" என்பது விதியாயினும், "சங்கரனைக் கண்டீரோ" என அப்பரும், "சடையாய் எனுமால்" என ஆளுடைய பிள்ளையாரும் தலைவன் பெயரைத் தலைவி சுட்டிக் கூறியதாகத் தம் பாக்களில் காட்டியுள்ளனர். மடற்கூற்று மரபு பெண்களுக்கு இல்லையெனத் தொல்காப்பியம் விதிக்கவும், திருமங்கையாழ்வார் "அதனை யாம் தெளியோம்" என்று கூறி மகளிர் மடற் கூற்றாகச் சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற இரு பிரபந்தங்களை அழகுணர்ச்சி மிகப் பாடியுள்ளார். மடல் பிரபந்தம் வழி அகஞ்சார் அருளியலுக்குத் திருமங்கையாழ்வார் அழியா உருவளித்தது தமிழிலக்கிய வரலாற்றிலும், பக்தியிலக்கிய மரபிலும் குறிப்பிடத்தக்கது.

அகப்பாக்களில் தலைவனின் இயற்பெயர் கூறுதல் மரபன்று. இம்மரபு சங்க அகப்பாக்கள் அனைத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது. தலைவன் பெயர் குறிப்பாகவோ அன்றி வெளிப்படையாகவோ சுட்டப்பட்டால், அப்பாடல் புறமாகக் கருதப்படும். பக்திப்பாக்களில் இடம் பெறும் தலைவன் இறைவன்; இறைவனின் பெயர் சுட்டிக் கூறப்பட்டுள்ளது. இப்பாக்கள் வடிவத்தால் அகமாகவும், பொருளால் புறமாகவும் அமைந்து விளங்குகிறது எனலாம். பக்தி இலக்கியங்களில் காணப்படும் அகப்பாடல்களிலே தலைவனின் பெயர் சுட்டிக் கூறப்படுகிறது. இதனை ஒரு மரபு வளர்ச்சியாகக் கொள்ளலாம்.

உலகியற் கவிதைகள் என்று கூறப்படும் அகப்பாடல்களில் ஒருவித வரையறையைக் கவிஞர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். கவிஞர்களின் எண்ணங்களுக்கு ஒரு வரம்பு அங்கு உண்டு. எனவேதான் கைக்கிளை, பெருந்திணைகளை அன்பின் ஐந்திணைகளாகப் போற்றாது விடுத்தனர். பக்தியிலக்கிய அகப்பொருள் மரபுப் பாடல்களுக்கு இவ்வரையறை இல்லை. "ஆன்மா—இறைவன்" என்ற இருநிலைதான் இங்கு உண்டு. ஒரு வகையில் பக்தியிலக்கியப் பாக்கள் கைக்கிளை வகையில் அமைந்தவை என்று கூடச் சொல்லலாம். அடியவர்கள் எந்த எதிர்பார்ப்புமின்றி இறைவனைத் தலைவனாகக் கொள்ளும் பாவனையில் ஆழ்ந்து விடுகின்றனர். இவை மெய்யுணர்வின் அடிப்படையில் தூய பேரின்ப நிலையில் எழுந்த பாடல்கள், அடியவர்களுக்கு வரம்பு - வரம்பின்மை என்ற எண்ணமே எழுவதில்லை. இதனால்தான், சங்க அகப் பாடல்களுக்கு உள்ள வரையறை, பக்தியிலக்கிய அகப்பாடல்களில் வரம்பிகந்து செல்வதுமுண்டு. இதுவே சங்க இலக்கிய அகப்பாடல் கவிஞர்களுக்கும் பக்தியிலக்கிய அருட்கவிஞர்களுக்கும் உள்ள வேறுபாடு.

புலனுணர்வுக்கும், தெரிவுணர்வுக்கும் அப்பாற்பட்ட ஒரு ஞானத்தெளிவினைப் புலனுணர்வுக் குறியீடுகளாலும் உருவகங்களாலும் புலப்படுத்துவது மறைஞானக் கவிதைகளின் (Mystic Poetry) முக்கியப் பண்புகளில் ஒன்றாகும்.[1] சொல்லைக் கொண்டு சொல்லின் பொருளுக்கு அப்பாலுள்ள ஒன்றை உணர்த்தவும் வெளிப்படுத்தவும் முனையும் பக்தி இலக்கியங்களில் மிக முக்கியமான இடத்தை வகிப்பது இறைவனின் அர்ச்சாவதாரத் தன்மையாகும். கண்டதைக் கொண்டு காணாத கடவுளைக் காண்பதற்கு அர்ச்சாவதாரம் எளியதொரு வழியாகும். மூர்த்தி பேதங்களைப் படிம நிலையில் விளக்குவதே அர்ச்சாவதாரம். படிமமாவது பருப்பொருளாய்க் காட்டப்பட்டதிலிருந்து கருத்துத் தொடர்பு காரணமாக, பருப்பொருளல்லாத நுண்பொருளை உணர்த்துவதாகும்.

1. "Mysticism is to possess the infinite in the finite" The concept 'infinite'... can be used as a vessel to hold the most diverse experiences. (Rudolph Otto, Mysticism East and West, New York, Meridian Books, 1957, p. 76).

பொருண்மைக்கூறு : அர்ச்சையின் மேன்மை.

அவதாரத்திலே தேங்கின மடு அர்ச்சாவதாரம் என்பர் வைணவ ஆசிரியர்கள். அருச்சித்தற்குரிய அவதாரம் என்பது இதன் பொருள். பூசை செய்வதற்கும், கோயில் வழிபாட்டிற்கும் அடிப்படையாக விளங்குவது அர்ச்சாவதாரமாகும். கோயில் வழிபாடு ஆகமங்களோடு தொடர்புடையது. ஆகமங்கள், வைதிக வேள்விக் கோட்பாட்டிற்கு எதிரானவை. சமய வரலாற்றில் அர்ச்சாவதாரம் தென்னாட்டார் கொடுத்த தன்னிகரற்ற கொடையாகும். அர்ச்சாவதாரம் (விஷ்ணுவை விக்கிரக ரூபங்களில் வழிபடும் நிலை) தான் ஆழ்வாருடைய பக்திக்காதலை வளர்ப்பதற்கு இன்றியமையாத தூண்டு கோலாகியது.

வைணவப் பக்திப் பாடல்களைத் திருமங்கையாழ்வாரே பெருந்தொகையாகப் பாடியவர். அர்ச்சாவதாரத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர் இவ்வாழ்வார். எனவே தான், ஆழ்வார்கள் அனைவரினும் மிகுதியான திவ்ய தேசங்களைப் பாடியுள்ளார். ஆழ்வாரின் கண்களிலும், நெஞ்சத்திலும் இறைவனது திருக்கோலம் நன்கு பதிந்துவிட்டமையால் இத் திருக்கோலத்தரிசன இன்பத்தில் திளைத்துப் பாடுகின்றார். இந்த அனுபவம் இவரை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அழைத்துச் செல்ல 86 திருக்கோயில்களை மங்களாசாஸனம் செய்துள்ளார்.

திருமந்திர பொருளின் எல்லை நிலமே திவ்ய தேசங்கள் எனப்படும் திருக்கோயில்கள் என்பர். அடியவர்கள் இவ்வுடம்போடு மகிழும்படிக்குப் பாங்காகப் பெருமான் பலவிடங்களிலும் கோயில் கொண்டு தன்னுடைய தலைமையையும் (சுவாமித்துவம்), எளிமையையும் (சௌலப்யம்) விளங்கக் காட்டிக் கொண்டு நிற்பதாலேயே திவ்ய தேசங்கள் திருமந்திரத்துக்கு எல்லை நிலமாயின. அப்படிப்பட்ட திவ்ய தேசங்களை மற்றுமுள்ள ஆழ்வார்கள் அனுபவித்தார்கள் எனினும் திவ்ய தேசானுபவமே யாத்திரையின் பிரதானமாகக் கொண்டு வாழ்ந்தவர் இவ்வாழ்வார் ஒருவரே.

அறம், பொருள், இன்பம், ஆகிய மூன்றும் சிறந்தால் வீடு பேறு தானாகக் கிட்டும் என்றார் திருமங்கையாழ்வார். வீடு பேறு விண்ணுலகில் இல்லை; ஆராவமுதம் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநறையூரும், அது ஓடியாடித் திரியும் திருவாய்ப்பாடியும் இங்கு இருக்கும்போது

ஆறாவமுதத்தை விண்ணுலகில் சென்று அடைய முடியுமா? என்று கேட்கும் ஆழ்வார் அவ்வாறு சொல்வது "ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே" என்கிறார். கையில் இருக்கும் முயலை விட்டுக் காக்கையைப் பிடிப்பது ஆகும் செயலா என வினவுகிறார். விண்ணுலகு செல்வதை விட்டு விட்டு இவ்வுலகில் குடிகொண்டிருக்கும் இறைவனை அடைந்து இன்பம் பெறுவதே மனிதப்பிறவியின் பயனாகும் என்பது ஆழ்வாரின் கொள்கை.

"கொம்மை முலைகள் இடர்தீரக்
கோவிந்தற் கோர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாமை
இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்"

என்பது நாச்சியார் திருமொழி. இம்மண்ணுலகில் குடிகொண்டிருக்கும் தெய்வத்திற்குத் தூய்மையான தொண்டு செய்தலே சிறந்த பக்தியாகும். அதுவே வீடு பேறு அடைதலாகும்.

காய்களைத் தின்றும், வெய்யிலினும் காற்றிலு முலர்ந்து, பசையற்ற பழங்களை உண்டும், காற்றைப் பருகியும், பஞ்சாக்கினி மத்தியில் நின்று கொண்டும் தவம் செய்யும் தொழிலை விட்டுவிடுதல் வேண்டும். இறைவன் கோயில் கொண்டிருக்கும் தலங்களுக்குச் சென்று உள்ளன்போடு வழிபடுதலே சிறந்த பக்தி நெறியெனப் புலப்படுத்தியுள்ளார் திருமங்கையாழ்வார்.

"தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையும்
என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தித்
துன்னுமிலைக் குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன்
மன்னுமழல் நுகர்ந்தும் வண்தடத்தினுட் கிடந்தும்
இன்னதோர் தன்மையரா யீங்குடலம் விட்டெழுந்து
தொன்னெறிக்கட் சென்றார்".

"ஊன்வாட உண்ணா துயிர்காவ லிட்டு
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டா"

"காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவஞ் செய்ய வேண்டா
திருமாலைச் சிந்தையுள் வைத்தும்"

எனத் தவம் செய்வாரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் ஆழ்வார். அந்நெறி தேவையில்லை. இறைவன் மாட்டு நீங்காப் பேரன்பு கொண்டு அவன் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தாலே போதும் என்பது திருமங்கையாழ்வார் காட்டிய வழிபாட்டு முறையாகும். உடலை வருத்திக் கொண்டு விரதங்களிலிருந்து உயிர் மட்டும் போகாதபடி நீரையும், காற்றையும் உட்கொண்டு, உடலை விட்டுப் போகாத ஐம்புலன்களும் வருந்தத் தவம் செய்ய வேண்டாம். இறைவனை அன்பினால், ஆர்வத்தால் மலர்களை இட்டு வணங்குதல் வேண்டும் என்பது ஆழ்வாரது கொள்கையாகும்.

"மன்னிய தாமரை மாமலர் பூத்து"

என்கிறார் திருமங்கையாழ்வார். உலகில் மண்ணிலிருந்து குடங்களைக் குயவன் உண்டாக்கும் போது காரியங்களான குடங்கள் வளர வளரக் காரணமான மண் குறைந்து கொண்டே வந்து கடைசியில் அடியோடு இல்லாமல் போகிறது. ஜகத் காரணமான இத்தாமரையோ தன் காரியமான உலகங்கள் எவ்வளவு வளர்ந்தாலும் தான் சிறிதும் குறையாமல், அழியாமல் நித்தியமாயிருக்கும் பெற்றியை உடையது. தாமரையின் பேரொளியானது நித்தியமாயிருக்கிறது எனவும் கொள்ளலாம். நித்தியமான இறைவனுடன் ஒன்றாகக் கலந்து விடுவது என்ற எண்ணமே ஆழ்வாரை ஆனந்தத்தில் ஆழ்த்தி மெய்மறக்கச் செய்து விடுகிறது.

இறை உணர்வைப் பற்றி அதிகமாகப் பாடிய ஆன்ரு மார்வெல் என்ற பிரஞ்சுக்கவி 'பிரிந்த உயிருக்கும் உருவான மகிழ்ச்சிக்கும் இடையே ஓர் உரையாடல்' என்ற தலைப்பில்,

"If things of Sight such Heavens be,
What Heavens are those we Cannot see?"

எனக் குறிப்பிடுவது திருமங்கையாழ்வாரின் பாடலை நினை ஊட்டுகிறது.

"தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு
ஆரா வமுதங் கெய்தி அதில்நின்றும்
வாரா தொழிவதொன் றுண்டே..."

"இன்னதோர் தன்மையரா யீங்குடலம் விட்டெழுந்து
தொன்னெறிக்கட் சென்றா ரெனப்படுஞ் சொல்லல்லால்
இன்னதோர் காலத்தினையா ரிதுபெற்றார்"

எனக் கேட்கிறார் திருமங்கையாழ்வார்.

பழையதான மோட்சத்திற்குச் சென்றார்கள் என்கிற சொல்லைக் கேட்பது ஒழிய, எவரேனும் ஒருவர் இப்பயனைப் பெற்றதாக அவர் வாயிலிருந்து கேட்டறிந்தது இல்லை. மோட்சத்தைக் கண்டு அங்கு முத்தரை அனுபவித்து வந்தேன் என்று சொல்லுவாரில்லை. அங்குள்ள நிலையைப் பார்த்து வந்து சொன்னவர் ஒருவருமில்லை என்பதே ஆழ்வாரின் வாதம். இறைப்பேரியல்பு கூறி, இறைவனை மலர்களிட்டு வணங்கித் தொழுதால் போதும் என்பது ஆழ்வார் கொள்கையாகும். (தொடரும்)

மரூஉ: நீண்ட சொற்களைக் குறுக்கி ஒலிப்பது எல்லா உலக மொழிகளிலும் உள்ளது. சோழநாடு, ஆதன் தந்தை முதலியவற்றைப் பழங்காலத்தில் சோணாடு, ஆந்தை முதலிய வடிவங்களாக்கி ஒலித்தனர். இக்காலத்திலும் ஆய்விட்டது, போய்விட்டது என்பவற்றை ஆச்சுது, போச்சுது என ஒலிக்கின்றனர். இவ்வாறு சொற்களின் வடிவு குறுகுதலை மரூஉ என்பர் இலக்கண நூலார்.

ஒலிக்கும் முயற்சியில் இது குறுக்கு வழி எனலாம். பேச்சு மொழி காலம் என்னும் ஓர் அளவு கருவியுடையது. ஒலிப்பதற்கு மிக நேரம் ஆகும் சொற்களைக் குறைந்த நேரத்தில் ஒலிக்கத்தக்கனவாக மாற்றுதலால், மரூஉ என்பது பயனுள்ள முயற்சிச் சிக்கனமாகக் கருதப்படுகின்றது.

ஒரு சொல் எவ்வளவுக்கு எவ்வளவு மிகுதியாகப் பேச்சில் பயில்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு குறுகிய வடிவம் வரும். இருக்கிறது, ஆய்விட்டது, போய்விட்டது முதலிய வினைச் சொற்கள் அன்றாடப் பேச்சில் வருவன. ஆதலின் இருக்குது (இருக்கு) போச்சுது (போச்சு) ஆச்சுது (ஆச்சு) முதலிய வடிவங்களாகக் குறுகி வருகின்றன. மொழிவரலாறு, மு. வ. பக். 106-107

காட்சியியல்

முனைவர் நிர்மல் செல்வமணி, ஆங்கிலத்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.

(முன்னிதழ், உ௫அஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்சியியலும் அவையும் :

அன்றாட வாழ்வில் மட்டுமன்றி அவையிலும் காட்சியியல் பயின்றது. அவையத்தாருக்குரிய பண்புகள் எட்டு: குறிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை (தொல். III. 2. 17: 17) இப்பண்பினையுடையோரே அகக்காட்சியுடையர் ஆதல் கூடும். மேலும், முனைவர் தாம் செய்த நூலை முதன் முறையாக உலகுக்கு அளிக்குமிடம் அவையே. அவ்வவையில் நூலைச் சொல்லுங்கால் அவர் காட்சியியலுக்குரிய உத்திகளைக் கைக் கொள்வர். எனவே காட்சியியலுக்குரிய சிறப்பிடம் அவை என்பது அறியலாகும்.

தொல்காப்பியம் கூறும் அவையத்தார் தருக்க நூலில் வல்லவராதலாலும்[1] கலித்தொகையும் "காட்சி அவையத்தார்" (94 : 42) என்று அவையத்துள்ளார் காட்சியியல் துறையில் வல்லவர் எனப் பொருள்பட உரைத்ததாலும் பண்டைத் தமிழகத்தில் அவையில் காட்சியியல் சிறந்திலங்கியது தெளியலாகும்.

இவ்வவைகள் சிலப்பதிகாரக் (5: 102) காலத்தில் 'பட்டி மண்டபங்கள்' எனவும் குறிக்கப் பெற்றன. சமய வாதிகள் தத்தம் சமயக் கோட்பாட்டினை (திறத்தினை) இப்பட்டி மண்டபங்களில் வாதிட்டு வந்ததை மணி. (1. 60-61; ஒ. நோ. கம்ப. நகர. 62) உரைக்கும்.

௩. காட்டுப்படலம்:

பண்டைத் தமிழகத்தில் அன்றாட வாழ்வியல் நடை பெற்றதும் அவை கூடியதுமான நாட்டிலேயே காட்சியியல்

1. ந.ரா. முருகவேள், தருக்க இயல் விளக்கம், சென்னை : பாரி நிலையம், 1960, பக். 6-7.

ஓங்கியது என்றோம். அவ்வாறே, அனைத்து இந்தியாவிலும், பண்டு நாட்டிலேயே காட்சியியல் துறை வளர்ந்தோங்கியது எனவும் பிற்காலத்திலேயே அத்துறை காடு அடைந்தது எனவும் அறியலாகும்.[1]

வடமொழியில் தோன்றிய பல காட்சியியல் நூல்கள் (உபநிடதங்கள் போன்றவை) காடுகளில் தோன்றியவை எனக் கருதப்படுகின்றன. தைத்தரேயஆரணியகத்தில் ஊரை விட்டும் அப்பாலுள்ள இடத்தில் கல்வி பயில்வது கட்டாயமானது குறிக்கப்படுகிறது. பிற்கால வேத நூல்களில் ஊரில் கற்க வேண்டியவை, காட்டில் கற்க வேண்டியவை எனப் பாகுபடுத்திக் கூறப்படுகின்றன. ஆனால் உபநிடதங்களுக்கு முற்பட்ட வேத காலத்தில் காட்சியியலின் வளர்ச்சியில் காடுகள் எப்பங்கினையும் கொள்ளவில்லை. "இருக்கு வேத முனிவர்கள் ஊர்களிலும் நகரங்களிலும் வாழ்ந்த குடிமக்களே, ஆழ்ந்து கருதுதற்குக் காட்டிற்குச் சென்றவரல்லர். பிராமணங்கள் (brahmanas) காட்டும் நாகரிகத்திலும் காடுகள் இடம் பெறவில்லை."[2] இக்காலத்திலேயே முனிவரின் தவப் பள்ளிகள் காட்சியியல் துறை வளர்வதற்குரிய இடங்களாகக் கருதப்பட்டன.

இவ்வாறு, காட்டினுள் காட்சியியல் ஏகியது பிற்காலத்தே எனலாம். இது திருமுருகாற்றுப்படை காலம். பண்டைத் தமிழிலக்கியங்களுள் முதன் முதலில் முனிவரைக் 'காட்சியர்' எனக் கூறும் நூல் இதுவே. இவரைப்பற்றிய விரிவான வருணனையும் இந் நூலகத்தே உள்ளது. (126-137). இத்தகைய முனிவர் காட்டகத்தே வாழ்ந்தார் என்பது: "நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்/சோர் சடைதாழச் சுடரோம்பி - ஊரடையார்/கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்/வானகத் துய்க்கும் வழி" (புறப். வெ., வாகை. 14) என்ற வரிகளால் புலனாகும். இம் முனிவர் காட்டகத்தே தவப்பள்ளிகளில் வதிந்தனர் என்பது: "பெருந்தகு படிவமொடு பிறப்பற முயலும்/அருந்தவ நோன்மைய ராத்திரைக் கொட்டிலின்/கேள்வி முற்றிக் கிரிசை நுனித்த/வேள்விக் கலப்பை வீழுப்பொருள் விரதத்துச்/சீரை

1. கீழை மேலை நாடுகளில் மெய்ப்பொருளியல் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1970, பக். 34-35.

2. மேற்படி நூல், பக்.

உடுக்கை வார் வளர் புன்சடை/ஏதமில் காட்சியோர்
மாதவருறையும்/பள்ளிகுறுகி...... (பெருங். 11. 15: 36-42)
என்னும் வரிகளாலும் விளங்கும்.

இத்தகையதொரு முனிவன் காள சமணன் என்பான்; அவனது இயற்பெயர் பாலகன். அவன் தவப்படிவம் மேற்கொண்டதொரு சமயக் கணக்கன்; பிற மதத்தினரைச் சொற்போரில் (வாதையில்) பொருத பொருநன். பொருது தன் சமண மதத்தை துணிவை நிலை நிறுத்தினான்; இவனைப் பெருங்கதை "காளசமணன் காட்சி நிறுப்ப" என்று குறிப்பிடும் (உஞ்: 36. 248);

இக்காலத்திலேயே வேதஞ்சார்/வேதஞ்சாராத் திறங்கள் (மதங்கள்) தோன்றின.

வேதம் சார்ந்தன : வேதாந்தம், மீமாஞ்சை, சாங்கியம், ஓகம், நியாயம், வைசேடிகம்;

வேதம் சாராதன : சாருவாகம், பௌத்தம், சமணம்.

இந்நிலையில் காட்சியியல் என்பது வேதத்தில்/வேதத்தினால் காணும் மெய்ப் பொருள் என மிகவும் குறுகியதொரு பொருளைப் பெற்றது. வேதத்தில் கண்டவற்றை ஏற்றவர் 'ஆத்திகர்', மறுத்தவர் 'நாத்திகர்'. பண்டைத் தமிழ்க் காட்சியியல் இவ்வேதத்திறங்களைக் காட்டிலும் மிகத் தொன்மையானது.

காட்சியியலும் தெரிசனமும் :

காட்சியியல் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பதில் தர்ஸண (தெரிசனம்) என்ற வடமொழிச் சொல் அறிமுகம் செய்யப்பட்ட காலம் ஏறத்தாழ கி. மு. 1ஆம் நூற்றாண்டாகும்.[1] தர்ஸன என்ற தெரிசனம், 'காட்சி' என்று பொருள்படுவது.

அதாவது, ஆன்மாவைக் காண்பது. ஆன்மாவைக் காணுங்கால் அதன் முடிச்சு அவிழ்க்கப் பெறும் எனவும் மருள் நீங்குமெனவும் வினையின் நீங்குவான் எனவும் முண்டகோபனிடதம் (11. 2-8) கூறும். இது தொல். நூற்பாவுடன் (III. 9. 96)

1. எசு. சந்திரவித்தியபூஷண, இந்தியத் தருக்கவியலின் ஒரு வரலாறு, மோத்திலால் பணாரசி தாசு, 1978, ப. 6 (ஆங்கிலம்)

ஒப்புமையுடையது. மேலும், வேதஞ்சார்/வேதஞ்சாராத் திறங்கள் அனைத்தும் தெரிசனம் எனப்பட்டன.

தர்ஸன என்ற வடசொல் 'காட்சி' என்ற தமிழ்ச்சொல்லை மொழி பெயர்க்குமாறு அமைந்த சொல் மட்டுமன்று, தர்ஸன என்ற வடசொல்லின் மூலமும் 'தெரி' என்ற திராவிட, தமிழ் அடிச்சொல்லே, தர்ஸன என்பது த்ர்ஷ் என்பதன் அடித்தோன்றியது என வடமொழி அகராதி குறிக்கும்; ஆனால் தர்ஸன, தர்ஸ் என்ற இவ்விரு சொல்களும் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுவதாலும் தமிழ்வழி வேர்ச்சொல் காண்பது எளிதாகையாலும் 'த்ர்ஷ்' என்ற வேர் ஏற்றுக் கொள்ளக்கூடியது அன்று. தமிழ் வழி விளக்கம் காணின், தெரி-என்ற சொல்லினடிப் பிறந்ததாகக் கூறலாம். தமிழ். தெரி - சமசு. 'தர்ஷ்'. இங்கு தமிழ் எகர உயிர் வடமொழியில் அகரமாகத் திரிந்தது. இது கன். தெரள், அசை - சமசு. தரல. முன்னும் பின்னும் அசை; கன். தெள், நுண்மை - சமசு. தலின, நுண்ணிய ; கன். தெர' அலை-சமசு. தரங்கம், அலை (தரம் + க, செல்); தமிழ். பேடி, அலி - சமசு. பண்ட, அலி (எ-அ); கன். பெண, கட்டு (தமிழ்: பிணை)— சமசு. பண், பேரம் பேசு, பந்தயம் வை; போன்ற இடங்களிலெல்லாம் திரிந்தது போன்று என்க.[1]

தர்ஸன என்ற சொல் தோன்றுமுன்னரே 'காட்சி' வழக்கிலிருந்ததாலும் மெய்ப்பொருள் பயிற்சி தமிழகத்தில் சிறந்து இருந்ததாலும் அனைத்திந்தியக் காட்சியியல் துறையின் தோற்றுவாய் தமிழ்க்காட்சியிடத்தே என்பது தெளியலாகும். இந்தியக் காட்சியியல் பாடம் பயில்வாரும், இத்துறை பற்றிய நூல் எழுதுவாரும் ஆய்வாளரும் இவ்வுண்மையைத் தெளிந்து இந்தியக் காட்சியலின் வரலாற்றினை மீட்டுருச் செய்தல் வேண்டும். வேதாந்த, மீமாஞ்சை, சாங்கியம், ஓகம், நியாயம், வைசேடிகம், மற்றும் சாருவாக சமண, பௌத்த மதக் கோட்பாடுகள் தெரிசனம் எனப் பெயர் பெற்றது தமிழ்க் காட்சியியல் வழியே என்றுணர்தல் வேண்டும்.

நிறைவுரை :

இதுகாறும் கூறியவற்றான் 1. மெய்ப்பொருளியல்/மெய்யியல்/தத்துவம் என்பதற்குரிய தமிழ்ச்சொல் 'காட்சி

1. அனைத்துக்காட்டுகளும் பரோவின் திராவிட மொழியியல் கட்டுரைத் தொகுப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்' 1968, நூலின் அகத்தன: பக். 262-3; 266-67; 271-72.

யியல்" என்று கண்டோம். இச்சொல் வழக்கிற்கு வருதல் வேண்டும். 2. காட்சி என்ற சொல் முதன் முதலில் தொல்காப்பியத்தில் பயில்கின்றது. 3. 'காட்சி' முதன் முதலில் அறிவைக் குறித்தது, பின்னர் தமிழ் நாட்டவரின் அன்றாட வாழ்க்கையில் அவர் பயின்ற மெய்ப்பொருளியலையும், அந் நாட்டுச் சான்றோர் குழுமிய அவையில் அவர் புரந்த மெய்ப் பொருளியலையும். பின்னர் காட்டில் முனிவர் தவப்பள்ளிகளில் வளர்த்த மதக் கோட்பாடுகளையும் குறித்தது. 4. 'காட்சி' என்ற சொல்லினின்றே சமஃ. தர்ஸனா தோன்றிற்று. 5. இந்தியக் காட்சியியலின் அடிமணையாகத் தமிழ்க் காட்சியியல் கருதத் தகுந்தது. தற்போது தமிழ்வழி இந்தியக் காட்சியியலைப் பயிலாததால் இத்துறை பற்றிய அறிவு பெருங்குறைபாடுள்ளது. அதனை நிறைவு செய்யுமாற்றான் தமிழ்க் காட்சியியலின் வரலாறும், அதன் வழி இந்தியக் காட்சியியலின் வரலாறும் வரையப்படுதல் வேண்டும்.

ஒலித்திரிபு கேடு அன்று :

ஒலித்திரிபுகள் இயற்கை என்று இக் காலத்து மொழியியல் அறிஞர் பலர் கருதுகின்றனர். ஆயின், சென்ற நூற்றாண்டின் மொழியியல் அறிஞர் சிலர் ஒலித் திரிபுகள் மொழிக்குக் கேடு செய்வன என்னும் கருத்துடன் அவற்றை மிக வெறுத்து வந்தனர். அவர்களுள் மாக்ஸ்முல்லர் ஒருவர். மக்களின் மொழியின் இன்றியமையாத பண்பு இத்தகைய ஒலித் திரிபுகளால் வீணாக இழக்கப்படுகிறது என்று அவர் வருந்தினார். ஒவ்வொரு சொல்லும் ஒலிக் கூறும் தெளிவாக ஒலிக்கப்பட்டு நிறைந்த பொருளுணர்ச்சியோடு விளங்குவதற்கு ஒலித்திரிபுகள் கேடு செய்கின்றன என்றும், இலக்கண வேறுபாடுகளை உணர்த்தும் விகுதிகள் முதலியவை உருமாறிக் கெடுமாறு செய்கின்றன என்றும் அவர் எடுத்துக் காட்டினார். மூன்று பத்து என்னாமல் முப்பது என்று திரித்தது போன்றவை அவர் வெறுப்புக்கு ஆளாயின போலும். இக்கால மொழியியல் அறிஞரோ அவர் கூறுவதை மறுத்து, மாறுதல் இயற்கை என்றும், தடுக்க முடியாதது என்றும் கூறுவர். ஒலித் திரிபுகளால் பொருளுணர்ச்சி ஒரு சிறிதும் கெடுவதில்லை என்றும், ஒலிக்கும் முயற்சி எளிமையாகி மொழி சிறந்த கருவியாக விளங்குகிறது என்றும் கூறுவர்.

மொழி வரலாறு; மு. வ. பக். 119

திறனாய்வு நோக்கில் அருணகிரிநாதர்

இரா. சீனிவாசன், ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

(சிலம்பு–சு௭, பக். உ௭0-இன் தொடர்ச்சி)

கந்தர் அந்தாதி :

கந்தர் அந்தாதி அருணகிரிநாதரின் மற்ற படைப்புகளில் இருந்து வேறுபடுகிறது. இது ஒன்றே நூல்வடிவில் ஓரே நேரத்தில் இயற்றப்பட்டது. மற்ற அனைத்தும் அவ்வப்போது பாடிய தனிப் பாடல்களே. மற்ற தொகுதிகளில் உள்ள பாடல்கள் துதிப்பாடல்களாகவும், மனமுருகிப் பாடும் பாடல்களாகவும் உள்ளன. இயற்கையாக மனவெளிப்பாடாக அவை இருப்பதால், அந்த வெளிப்பாட்டு வேகம் அவற்றில் தாக்கலாகத் தெரிகிறது. இதற்கு மாறாகக் கந்தர் அந்தாதியில் முருகன் மேல் காதல் கொண்ட ஒரு தலைவி முருகனை நோக்கிப் பாடுவது போல் சில பாடல்கள் உள்ளன. அலர் தூற்றுதல், இற்சிறைப்படுத்துதல் முதலிய அகப் பொருள் மரபை ஒட்டிய பாடல்களும் உள்ளன.

கந்தர் அலங்காரம் :

கந்தர் அலங்காரம் மன எழுச்சியை வெளிப்படுத்தும் பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் பெரும்பாலான பாடல்கள் எமனுக்குச் சவால் விடுவன போன்று அமைந்துள்ளன. இத்தகைய பாடல்களுக்குக் காரணம் இறப்பு பற்றிய அச்சம் என்று கூறலாம். பாரதியாரின் இத்தகைய பாடல்களுக்கும் அருணகிரிநாதரின் பாடல்களுக்கும் ஒப்புமைகள் உள்ளன.

பட்டிக் கடாவில் வரும் அந்தகா உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்டலாது விடேன் வெய்ய
சூரனைப்போய்
முட்டிப் பொருத செவ்வேல் பெருமாள் திருமுன்பு
நின்றேன்
கட்டிப் புறப்படடா சக்தி வாளென்றன் கையதுவே

என்ற பாடலில் பாரதியிடம் நாம் காணும் வீறுணர்ச்சியும் வேகமும் எமனுக்கு எச்சரிக்கைவிடுக்கும் பெருமிதமும் வெளிப்படுகின்றன. கந்தர் அலங்காரப் பாடல்கள் எளிய சந்தம், எளிய நடை கொண்டவை; பெருகிவரும் கவித் திறனைக் காட்டக் கூடியவை.

சேல்பட்டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார்மனம் மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டழிந்த திங்கென் தலைமேல்
அயன்கையெழுத்தே

என்ற பாடலில் உள்ளார்ந்த எழுச்சியினைக் காணமுடிகிறது. அருணகிரிநாதரின் சாதனைகளாகப் பின்வரும் சில பாடல்களைக் காட்டலாம்:

பேற்றைத்தவம் சற்றும் இலாத எனைப் பிரபஞ்சமெனும்
சேற்றைக் கழியவழிவிட்டவா செஞ்சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே.

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்ம்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு
செய்த
பழிக்குத்துணை யவன்பன் னிருதோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

எத்தகைய அளவுகோல்களை வைத்துப் பார்த்தாலும் தள்ளிவிட முடியாத பாடல்கள் இவை. தமிழ்க் கவிதைத் தொகுதிக்கு அருணகிரிநாதரின் பங்களிப்பாக இவற்றைக் கொள்ளலாம். பிற நூல்களைவிடக் கந்தர் அலங்காரத்திலேயே கவித்துவம் நிரம்பிய பாடல்கள் உள்ளன.

கந்தர் அனுபூதி :

கந்தர் அனுபூதிப் பாடல்கள் முதிர்ந்து பக்குவப்பட்ட மனநிலையை வெளிப்படுத்துகின்றன. இவரது முதுமையில் இப் பாடல்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். இப் பாடல்களின் மற்றொரு சிறப்பு அம்சம் இவற்றில் காணப்படும்

உருக்கமாகும். 'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருக' இப் பாடல்கள் பாடப்பட்டுள்ளதாக அவரே குறிப்பிடுகிறார். தமிழில் இத்தகைய உருக்கம் நிறைந்த பாடல்களை அருணகிரிநாதருக்கு முன் மாணிக்கவாசகரிடமும் பின்னர் தாயுமானவரிடமும் வள்ளலாரிடமும் மட்டுமே காணமுடிகிறது. இதில் தமது வாழ்க்கையில் தாம் அனுபவம் மூலமாகப் பெற்ற தத்துவத்தின் சாரத்தைப் பிழிந்து கொடுத்துள்ளார். தம்மை மறந்த பேரானந்த நிலையை இப் பாடல்களில் காணலாம். இதை,

எல்லாம் அற என்னையிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூபதியே

என்றும்

கூகா வென என்கிளை கூடியழப்
போகா வகை மெய்ப்பொருள் பேசியவா

என்றும்

ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே.

போன்ற வரிகளில் காணலாம்.

அருணகிரிநாதர் தாம் உணர்ந்து பிறர்க்கு உணர்த்திய மெய்ப்பொருள் என்று பின்வரும் பாடலைச் சொல்வார்கள்:

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே

மதிப்பீடு :

இன்றுவரை அருணகிரிநாதர் என்றவுடன் அனைவரது நினைவிலும் திருப்புகழே இடம்பெறுகிறது. திருப்புகழில்

அதலசேடனாராட அகிலமேரு மீதாட
அபினகாளிதானாட அவளோடன்
றதிர வீசிவாதாடும் விடையிலேறு வாராட
அருகுபூத வேதாள மலையாட

போன்ற சிறந்த பாடல்கள் உள்ளன. இருந்தாலும் சந்தத்திற்காக வேண்டி மிகுதியான வடமொழிச் சொல்லாட்சி, கடினமான நடை, ஒரே பொருள் திரும்பத் திரும்ப வருதல் போன்ற இடர்ப்பாடுகள் மிகுந்தது திருப்புகழ்.

சந்தப் பாடல்கள் என்ற வகையில் இவை சிறப்பாக இருந்தாலும் நல்ல கவிதைகள் என்று ஏற்றுக்கொள்ளத் தக்கனவாய் உள்ளவை குறைவே.

யமக அந்தாதியில் பாடியிருப்பதாலும் சொற்களைப் பிரித்துப் பிரித்து ஆராய்ந்தால் மட்டுமே பொருள் விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளதாலும் கந்தர் அந்தாதிப் பாடல்களில் கவித்துவ அனுபவத்தைப் பெற முடியவில்லை.

வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் போன்றவை சாதாரணச் செய்யுள்களாகத்தான் உள்ளன. இவற்றைக் கவிதைகள் என்று கொள்ள முடியாது.

மாறாகக் கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி ஆகிய இரண்டும் நல்ல கவித்திறனுடன் அமைந்துள்ளன. எளிமை, இனிமை, உருக்கம் ஆகிய பண்புகளைப் பெற்றுள்ளன. தமிழ்க் கவிதைத் தொகுதிக்கு அருணகிரிநாதரின் பங்களிப்பாக இந்த இரு நூல்களையும் கருதலாம்.

தமிழ் வாழ்த்து

பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

தொன்றுதொட்டு வளர்தாய்த் தமிழை வாழ்வில்
பொன்றாத் துணையாய் நிலைநிறுத்தி—என்றும்
சென்ற இடந்தோறும் செம்மாப்பு மேவ
இன்றமிழ் காப்போம் இனிது.

"ஏரகப் பொருப்பிற் பூத்த பெருமான்"

(திருப்புகழ்)

தமிழகக் கோயிற் கலைச்செல்வர்
தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத்,
கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (ஓய்வு)
பொள்ளாச்சி.

ஆறுமாமுகனின் ஆறுபடை வீடுகளில் நான்காவது படை வீடான திருவேரகம் எந்தத் தலத்தைக் குறிக்கிறது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

நச்சினார்க்கினியர் இதை "மலை நாட்டகத்து ஒரு திருப்பதி" எனக் குறிப்பிட, சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் வெண் குன்றைச் சுவாமிமலை எனக் கூறுவதால், ஏரகம் என்பது சுவாமிமலை அல்லாத மற்றொரு தலம் என அவர் கருதுவதாகத் தெரிகிறது.

முருகப் பெருமானது அன்பர்களில் தலைசிறந்தவரான அருணகிரிநாதர் "குடகாவிரிக்கு வடபாலார் திருவேரகத்தில் உறைவாய்" என்றும், "காவிரிபுறம்பு சுற்றும் ஏரகம் அமர்ந்த பச்சை மயில் வீரா" என்றும் அருளியதினின்றும் திருவேரகம் என்ற திருத்தலம் காவிரியாற்றின் கரையில் உள்ளது என்பதாகிறது. மேலும் அவர்,

"கோமள வெற்பினை ஒத்த" என்றும், "வார் குழலைச் சொருகி" என்றும் தொடங்கும் திருப்புகழ்களில்,

"ஏரக வெற்பு எனும் அற்புதமிக்க
சுவாமி மலைப்பதி"

என அருளியதன் மூலம் சுவாமிமலைதான் திருவேரகம் எனச் சற்றும் ஐயமின்றி உறுதிப்படுத்தி விட்டார்.

இருப்பினும் திருவேரகம் என்ற தலத்திற்கு உரிமை கொண்டாடும் திருத்தலம் ஒன்று குமரி மாவட்டத்தில் உள்ளது. அது 'குமார கோயில்' என்பதாகும். இது நச்சினார்க்கினியர் கூறியதற்கு ஏற்ப உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாகர்கோயிலினின்றும் திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள தென்கரை என்ற சிற்றூரினின்றும் ஏறத்தாழ மூன்று கிலோ மீட்டர் தொலைவில் குமார கோயில் என்ற திருத்தலம் உள்ளது. ஓங்கி உயர்ந்த மலைகள், பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற பசுமையான வயல்கள் இத்தகைய இயற்கை எழில்களுக்கு இடையில் இந்தக் கோயில் அமைந்துள்ளது.

முப்பது படிகள் ஏறிச் சென்றால், திருக்கோயிலின் திருவாயிலை அடையலாம். கருவறை, அர்த்தமண்டபம், முன் மண்டபம், திருச்சுற்று ஆகியவற்றைக் கொண்டது கோயில். முன் மண்டப வாயிலுக்குத் தென்புறமாக உள்ள விநாயகர் கல்யாண விநாயகர் என்று அழைக்கப் பெறுகிறார். இவர் யானை உருவில் சென்று முருகன் வள்ளி திருமணம் நடைபெறக் காரணமாக இருந்தமையால், இப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. கோயிலையொட்டிய வேளிர் மலையில் இரண்டரை கிலோ மீட்டர் தூரம் சென்றால், கல்யாண மண்டபத்தை அடையலாம். அங்கிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சுனை வள்ளிசுனை எனப்படுகிறது. வள்ளிசுனையினின்றும் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோலை வள்ளி சோலை என்று அழைக்கப் பெறுகிறது. அந்தச் சோலையில் வள்ளியம்மை வளர்ந்ததாக நம்பப்படுகிறது. கிழவன் சோலை என்பது அங்கிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு முருகப் பெருமான் கிழவனாக வள்ளியைச் சந்தித்ததாகப் போற்றப் படுகிறது.

மலை மேலே உள்ள கல்யாண மண்டபத்தில் பங்குனி மாதத்தில் அனுஷ நட்சத்திரத்தில் முருகன் வள்ளியம்மை திருமணத் திருவிழா ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வேட மடந்தையை வேலவன் கவர்ந்து சென்றதை அறிந்த வேட்டுவ அரசனாகிய நம்பியும், ஏனைய வேடர்களும் போர்க் கோலம் பூண்டு அவர்கள் இருவரும் தங்கி இருந்த சோலையை வளைத்துப் போர் செய்தனர் எனக் கந்தபுராணம் கூறுகிறது.

"கானவர் பலரும் கூடிப்
பொன்னெனச் சிலைக் கோல் பற்றிப் போர்த்
தொழிற்கு அமைந்து போனார்" (6-24-178)

"சிறிவெய் துயிர்த்துப் பொங்கி
மறத்தொழில் எயினர் காவை மருங்குற
வளைத்துக் கொண்டார்" (6-26-179)

இதற்கு ஏற்ப இங்கு இவ்விழாவின்போது, உற்சவராகிய முருகப் பெருமானுடன் இங்கு வாழும் வேடர்கள் போர் புரியும் காட்சியும் நடைபெறுகிறது. இந்தத் தலத்தின் தலமரம் வேங்கை மரமாம். முருகன் வேட மங்கைக்காக வேங்கை மரமானான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவையேயன்றி, முன் மண்டபத்தின் முகப்பில், அறுமுகன் வள்ளி திருமணக்காட்சி காணப்படுகிறது. இவற்றின் அடிப்படையில் இங்குதான் முருகன் வேட மடந்தையைத் திருமணம் புரிந்தான் என வலியுறுத்தப்படுகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள மூலவர்கள் திருப்பெயர் வேலாயுதப் பெருமான் என்பதாகும். வல்லக்கோட்டை, சென்னை மாநகரின் ஒரு பகுதியான வலசரப்பாக்கம், வாலிய கொண்டபுரம் ஆகிய இடங்களில் உள்ள முருகனது உயரம் ஏறத்தாழ ஆறரை அடி. ஆனால் இங்குள்ள மூலவரின் உயரம் சுமார் எட்டே முக்கால் அடியாகும். "நெடியவன் மனமகிழ் மருகோனே" என்பது அருணகிரி வள்ளலின் திருவாக்காம்; நெடியோனின் மருகோறும் நெடியோனாய் உள்ளது வாய்ப்பல்லவா? இவனது தலையை கிரீடமகுடம் அலங்கரிக்க, இவனது இரு கைகளில் வலக்கை வரத முத்திரையிலும், இடக் கை கத்ய வலம்பித முத்திரையிலும் உள்ளன. ஆகமங்களில் இரு கைகள் கொண்ட முருகனது திருவுருவை ஐந்து வகைகளாக அமைக்கலாம் எனச் சொல்லப்பட்டுள்ளது; அதில் இதுவும் ஒன்று. இவனுக்கு இடப்பக்கமாக உள்ள வேட மங்கையின் உயரம் ஏறத்தாழ ஏழேமுக்கால் அடியாகும். அவளது இரு கைகளில் வலக்கையில் தாமரை மலர் இருக்க, இடக்கை கத்ய வலம்பித முத்திரையில் உள்ளது.

தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாத உயரமுள்ள முருகப்பெருமான் மற்றும் வள்ளியன்னை ஆகியோரின் கலையழகு மிக்க எழிற் கோலங்கள் காண வேண்டியனவாம்.

திருமந்திரக் காப்புச் செய்யுள்

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

இப்பாடல் திருமந்திர நூலின் விநாயகர் காப்புச் செய்யுளாம் என்பவரும், இல்லை என்பவருமாக இருவேறு கருத்துடையார் உளர். சைவசித்தாந்த மகாசமாசப் பதிப்பில் (1940) நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது; சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் (1957) முதற்பாகத்தில் இப்பாடல் காணப்படவில்லை. ஆனால் இரண்டாம் பாகத்தில் ஆறாந்தந்திரத்தில் சிவகுருதரிசனத் தலைப்பின் முன்னர்க் காணப்படுகிறது. இவ்விரு வேறுபட்ட கருத்துகளுள் எது ஏற்புடையதாம் என்பதைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாம்.

திருமூலர் வடமொழி மந்திரங்களையும், மிகுதியாக வடமொழிச் சொற்களையும், ஐம்பத்தொரு வடமொழி எழுத்துகளையும் கூறியிருத்தலின் கி. பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்று கொண்டு விநாயகர் காப்புச் செய்யுள் திருமூலர் பாடியதே என்பர் ஒரு சிலர்.

'திருமூலர் புராணம்' பாடிய சேக்கிழார், 'ஒன்றவன் தானே' என்ற பாடலைத் திருமூலர் முதற்பாடலாகத் தொடங்கினார் என்று கூறியதாலும், திருமூலர் முருகன் சாத்தன் ஆகியவரைக் கூறினாரேயன்றி யாண்டும் விநாயகரைக் கூறாமையாலும், விநாயகர் வழிபாடு கி. பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது ஆதலினாலும் ஐந்து கரத்தனை என்னும் காப்புச் செய்யுள் திருமூலர் பாடியதன்று என்பது மறைமலையடிகளார் கருத்து.[1]

தமிழராகிய திருமூலர், தமிழகத்திலிருந்து வடக்கே கயிலை சென்று நந்தியெம் பெருமானிடம் உபதேசம் பெற்று, அவர் ஆணைவழி மீண்டும் தமிழகம் வந்து திருமந்திரம்

பாடினார் என்று கூறுவர்,[2] இராமநாதப் பிள்ளையவர்கள். அது எப்படியாயினும், வடக்கிருந்து வந்த ஓர் முனிவர், தமிழகத்துச் சாத்தனூர் இடைக்குல மகன் மூலன் என்பான் உடம்பிற் புகுந்தவர் என்பதும், பின்னரே திருமந்திரம் பாடினார் என்பதும் வரலாறு கூறும். வடக்கிருந்து வந்தவர், தமது நூலின் முருகனைப்பற்றி அறுமுகன் ஆன வரலாற்றைப் பின்வருமாறு கூறினார்.

சிவபிரானின் பேரொளி ஆறு வட்டமாகச் சுழன்றது. அதுவே ஆறுமுகமாயிற்று. அது ஆறுமுகன் எனவும் கந்தன் சாமி எனவும் கூறப்பட்டுச் சிவன் தந்தையெனவும் அறுமுகன் மகன் எனவும் கொள்ளுமாறாயிற்று என்ற கருத்தமைய,

எந்தை பிரானுக்கு இருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்தன் இவன்என்று மாட்டிக் கொள்ளீரே. (1002)

என்று பாடினார் திருமூலர். சூரபதுமன் தொல்லை தாங்காமல் தேவர் சிவபிரானிடம் முறையிடச் சிவபிரான் அறுமுகனை வென்றுவர ஏவினார் என்ற கருத்தில்,

எம்பெருமான் இறைவா முறையோ என்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்என்று தற்பரன் தானே. (503)

என்று பாடினார். இப்படிப் பாடிய திருமூலர் விநாயகரைப் பற்றிப் பாடவில்லை; அன்றியும்,

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில்
பாங்கு படவே பலாசப் பலகையில்
காங்கரு மேட்டில் கடுப்பூசி விந்துவிட்டு
ஓங்காரம் வைத்திடும் உச்சா டனத்துக்கே. (975)

என்று திருவம்பலச் சக்கரப்பகுதியில் ஐயனாரைக் கூறிய திருமூலர் விநாயகரைக் கூறவில்லை.

அறுமுகனையும் அய்யனாரையும் கூறிய திருமூலர், விநாயகரைக் கூறாமையால், திருமூலர் காலத்தில் தமிழகத்தில் விநாயகர் வழிபாடு இல்லையென்பது பெறப்

படும்; அதனால் அவர் காப்புச் செய்யுள் பாடியிருக்க மாட்டார்.

ஆனால், இங்கு ஓர் ஐயம் தோன்றும்; திருமூலர் வடக்கிருந்து வந்தவர். வடக்கே விநாயகர் வழிபாடு அவர் காலத்தில் இருந்ததா இல்லையா? இருந்ததாயின் விநாயகரைப் பற்றிய தத்துவ விளக்கமும் இருந்திருக்க வேண்டும். வடநாட்டகத்துப் பல்வேறு சக்கரங்கள் மந்திரங்கள் பற்றிக் கூறிய திருமூலர், விநாயகர் தத்துவம் பற்றியும் கூறியிருக்கலாமே?

ஆலாலம் உண்ட காரணத்தால் சிவபிரான் கழுத்துக் கருத்தது என்பது புராணம். அப் புராணக் கதைக்குத் தத்துவப் பொருள் உண்டு என்று,

அண்டமோ டெண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே. (504)

எனக் கூறித் தத்துவப் பொருளை நாமே பெறுமாறு வைத்தார். இராமநாதப் பிள்ளையவர்கள் தரும் தத்துவ விளக்கமாவது:—

"திருப்பாற்கடல்—ஆருயிர் நன்றாய் வாழச் சிவபெருமான் திருவருளால் நல்கிய உலகுடல் உடைமைகளாம். கடைதல்—சிவனை மறந்து யான் என்னும் செருக்கொடு வானவர் தானவர் எனப்படும் இருவினைக் கண் முயலுதல். நஞ்சு—சிவபெருமானை மறத்தலாகிய குற்றம்; அதுவே கறையாகும். அக் குற்றத்தை ஏற்றுப் பொறுத்ததே கண்டம் கறுத்ததாகும். இதுவே உண்மைக் கருத்து."

என்பதாம்; விநாயகர் திருவுருவம் ஓங்கார வடிவமானது என்பர். ஓங்கார ஒலிபற்றிப் பல இடங்களில் கூறிய திருமூலர் ஓங்கார வடிவமான விநாயகர் பற்றிக் கூறாதது வியப்பேயாம். எனவே திருமூலர் காலத்தில் வடநாட்டிலும் விநாயகர் பிறப்புக் கதைகளும் தத்துவக் கருத்துகளும் வழிபாடும் இல்லையென்றே கருத வேண்டியுளது. இதனால் திருமூலர் காலம் வடநாட்டில் விநாயகர் வழிபாடு வருதற்கு முற்பட்டதாகும் எனக் கால வரையறை செய்யவும் கூடும்;

நூல் செய்யப் புகுவார் நூல் இனிது நிறைவுற வேண்டிக் கடவுள் வாழ்த்துப் பாடுதல் என்பது சங்க காலத்து இருந்ததாகத் தெரியவில்லை. சங்க இலக்கியங்களில் ஆற்றுப்படை நூல்கள், மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை முதலியன தனிப் பாடல்களாயினும் நூல் என்றற்கும் தகுதியுடையனவே; திருவள்ளுவரே முதன் முதலில் கடவுள் வாழ்த்துப் பாடியவர் என்னலாம். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்து ஞாயிறு போற்றுதும் எனக் கடவுள் வாழ்த்துப் பாடினார். அவர் காலச் சாத்தனார் தமது மணிமேகலையில் பாடாததும் கருதத்தக்கதாம். எனவே, கடவுள் வாழ்த்து, நூல் செய்வார் பாடியேயாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அது பிற்கால வழக்காகவே அமையும். கி. பி. 3ஆம் நூற்றாண்டினரான மாணிக்கவாசகர் தாம் பாடிய திருக்கோவையார் நூலில் காப்புச் செய்யுள் பாடாமையும் காணத்தக்கது. திருமூலர் திருமந்திரம் ஆண்டுக்கொரு பாடலாகப் பாடப்பட்டது என்ற கதையை நாம் நம்புவதாய் இருந்தால், திருமூலர் திருமந்திர நூல் செய்ய வேண்டும் என்ற நிலையில் பாடல்களைப் பாடவில்லை என்னலாம்; ஒவ்வோர் ஆண்டும் தாம் அனுபவித்த அனுபவத்தை ஒவ்வொரு பாடலாகப் பாடியவர் ஆதலின் காப்புச் செய்யுள் பாடியிருக்கமாட்டார் என்றே கொள்ளலாம். சேக்கிழார் தாம் பெரியபுராண நூல் செய்யத் தொடங்குமுன்,

எடுக்கு மாக்கதை யின்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

என்று பாடியவர், 'திருமூல நாயனார் புராணம்' பாடிய போது திருமூலர் "ஒன்றவன் தானே" எனத் தொடங்கித் திருமந்திரமாலை பாடினார் என்றாரேயன்றிக் காப்புச் செய்யுள் பாடியதாகக் குறிப்பிடவில்லை.

இனி 1990இல் வெளிவந்த 'திருமந்திர மாலை மூந்நூறு' என்னும் நூலில், அதன் உரையாசிரியர் ந. சிவப்பிரகாச தேசிகர், திருமூலர் ஐந்து கரத்தனை என்னும் விநாயகர் காப்புச் செய்யுள் பாடியதாகவும், திருமூலர் அருளிய தமிழ் மூவாயிரத்தில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விநாயகர் பற்றிக் கூறப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுச் சான்றாக,

''மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தின் உள்ளே
ஓமென விநாயகன் உலாவிநின் றானே''

''ஐயெனும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை'' (2830)

''போதனை போதைஞ்சு பொற்கய வாரண
நாதனை நாடு நவகோடி தானே'' (1020)

''வித்தகர் ஐவர் விநாயகர் ஈரெண்மர்'' (2848)

''மூலமுதல் வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய ஐம் முகன்'' (688)

என்பனவற்றைக் காட்டினார்; மறைமலையடிகளார் திருமந்திரத்தில் விநாயகர் பற்றிக் கூறப்படவில்லை யென்றார். அப்படியாயின் மேலே உள்ளனவற்றை அவர் பார்க்கவில்லையா? ''மாமலர்'' எனத் தொடங்கும் பாடல் முன்னர்க் கூறப்பட்ட பதிப்புகளில் காணப்படவில்லை; சிவப்பிரகாசதேசிகரால் மற்றை மந்திரப் பாடல்களுக்குப் பாடல் எண் தந்ததுபோல் ''மாமலர்'' என்னும் பாடலுக்கு எண் தரவில்லை; மற்றை மேற்கோள்களுக்குச் சமாஜப் பதிப்பில் கண்டவாறு எண்கள் தந்துள்ளார்; ''வித்தகர் ஐவர் விநாயகர் ஈரெண்மர்'' என்னும் மேற்கோளானது, ''வித்தகர் ஐவர் விநோதகர் ஈரெண்மர்'' எனப் பாடம் உள்ளதாக முன் பதிப்புகளிற் காணப்படுகின்றது; அதனால் ''ஓமெனும் விநாயகன்'' என்ற பாடம் ''ஓமெனும் விநோதகன்'' என்பதன் திரிபாக இருக்கலாம் என எண்ண வேண்டியுளது.

''போதனை......பொற்கய வாரணநாதனை'' என்பதில் உள்ள 'வாரண நாதன்' என்பதற்கு, ஐராவண நாதன் என்பது சிவபிரானைக் குறிக்கும் என்பர், ப. இராமநாதப் பிள்ளை; ஐராவணன் - ஈராயிரம் கொம்புடைய வெள்ளை யானை; இது சிவபெருமானுக்குரியது என்பர் அவர்; 'கயவாரணநாதன்' என்பதற்கு அவர் தரும் பொருளைக் கொண்டால் விநாயகருக்கு இடமில்லை. ஆனால் அவரே, ''மூத்த பிள்ளையார் என்றலும் ஒன்று'' என்றும் குறிப்பு

எழுதினார்; அக்குறிப்பு தேவையற்றது. ஏனெனின், திருமூலர் சத்தி, சிவம், நந்தி எனும் மூவரைத் தவிர மற்றவரைப் பரம்பொருள் நிலையில் யாண்டும் கூறவில்லை; அம் மூவரையும் குரு எனப் பொதுவில் பலவிடங்களில் கூறியுள்ளார். குறிப்பிட்ட கடவுளைப் பற்றிய விடங்களில் மட்டும் அக் கடவுளர் பெயரைக் குறிப்பிடுவார்.

''ஐயெனும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்''

என்பதில் உள்ள 'ஆனை' என்பதற்கு விநாயகர் எனப் பொருள் கொள்வதற்குச் சிறிதும் இடம் இல்லை. ஆன் - பசு. அது அங்கே உயிரைக் குறிக்கும். இராமநாதம் பிள்ளையும், துடிசைக்கிழார் சிதம்பரனாரும் 'ஆனை' என்பதற்கு 'உயிரை' என்றே பொருள் எழுதினர்.

இனி ''மூலமுதல்'' என்ற மேற்கோளில் மூலமுதல் என்பது மூலமந்திரமாகிய 'ஓம்' என்பதன் முதல்வன் விநாயகன் எனப் பொருள் கொண்டனர் யாவரும். அதில் அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் ஐவரோடு முதலில் மூலமுதல் கூறப்பட்டமையின், அதன் பொருள் விநாயகன் எனக் கொள்வதில் தவறில்லை: சாத்தனை ஓரிடத்துக் கூறியதுபோல் இங்கு விநாயகரைக் கூறினார். மறைமலையடிகளார் சாத்தனைக் கூறிய திருமூலர் விநாயகரைக் கூறவில்லை என்றதனால் அவர்க்கு மூலமுதல் வேறு கடவுளாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்துப் போலும். மூலமுதல் அதோமுக முதலாகிய அறுமுகனைக் குறிக்கலாம் என்று எண்ணினர் போலும்: மூலம் - அடி: மூலாதாரம் கீழுள்ளது. அதுபோல் அதோமுகம் கீழ்நோக்கிய முகமாம்; எனவே மூலமுதல் என்றது, ஆறுமுகனைக் குறித்தது என்றே கொள்ளலாம்.

திருமந்திரமாலை முந்நூறு என்னும் நூலில் வெளிப்படையாக ''கனியுந் தென்மேற்குக் கணபதி கந்தன்'' (47) எனக் கூறியது போலத் 'திருமந்திரம் தமிழ் மூவாயிர' நூலில் வெளிப்படையில் கூறவில்லை;

இனி ''ஐந்து கரத்தனை'' என்னும் காப்புச் செய்யுள் 'திருமந்திர மாலை முந்நூறு' என்னும் நூலுக்கும் காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது. திருமந்திரமாலை முந்நூறு

தனி நூல்; அதில் உள்ள காப்புத் திருமந்திரம் தமிழ் மூவாயிரம் என்னும் நூலுக்கும் காப்புச் செய்யுளாக எப்படி அமையும்?

சிவப்பிரகாச தேசிகர் தம் உரையில்,

> "இக் காப்புச் செய்யுளானது கிடைத்துள்ள இத் திருமந்திரச் சுவடிகளில் குறைச் சுவடிகள் தவிர, நூல் முற்றும் உள்ள எல்லாச் சுவடிகளிலும் திருமந்திரம் மூவாயிரம், திருமூலர் கருக்கிடை அறுநூறு, திருமூலர் நாடி அந்தாதி, திருமூலர் குணவாகடம் என்னும் கருப்பத் திருமந்திரம், திருமூலர் புவனை அகவல் முதலிய நூல்களிலும் காப்பு; விநாயகர் காப்பு என்னும் தலைப்பில் முதற் செய்யுளாகக் காணப்படுகின்றது."[4]

என்றெழுதினார். இதனால் திருமூலர் எனும் பெயருடையார் பலரும் தத்தம் நூல்களில் ஒரே பாடலைக் காப்புச் செய்யுளாகக் கொண்டிருத்தலின், அச் செய்யுள் முதலில் ஒருவரால் பாடப்பட்டு அவர் வழியினர் யாவரும் திருமூலர் என்ற பெயரே கொண்டிருந்தமையின் அவர்களாலும் அதுவே காப்புச் செய்யுளாகக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்; அந்த முதல்வர் திருமந்திர மாலை முந்நூறு செய்தவராகலாம்.

எனவே அக்காப்புச் செய்யுள் முதல் திருமூலர் தமது 'திருமந்திரம் மூவாயிரம் தமிழ்' பாடியபோது பாடினவரில்லை என்றே கொள்ளலாம்.

எண்ணுக் குறிப்பு:

1. பன்னிரு திருமுறை வரலாறு இரண்டாம் பகுதி பக்கம் 481, க. வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், (1969);
2. திருமந்திரம் மூவாயிரம் முதற்பகுதி. திருமூல நாயனார் வரலாறு பக்; 78; சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1957).

3. திருமந்திரமாலை முந்நூறு - மூலமும் உரையும் பக்; 49, 50; அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு (1990);
4. ஷை பக். 56.

குறிப்பு:

பிறைக் கொட்டிலில் குறிக்கப்பட்டுள்ள திருமந்திரப் பாடல்களின் எண்கள், சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜம் 1940இல் வெளியிட்ட திருமந்திரம் என்னும் நூலில் உள்ளவாறு குறிக்கப்பட்டன;

சித்திரைக் க(ன்)னி

பெரு; தமிழ்வேந்தன், பவானிசாகர்;

புத்திளஞ் சித்திரைக் க(ன்)னியே வருவாய்—புதுமகிழ்ச்சி தருவாய்

புவிமிசை யாங்கணும் அமைதியே அருள்வாய்
எத்திக்கும் அருணெறி வித்தொன்றே விதைப்பாய்
எல்லாரின் மனங்களிலும் அன்புப்பயிர் வளர்ப்பாய்
முத்தான ஒழுக்கநெறி முடிசூடப் பிறப்பாய்
முறியாத சாதியெனும் முள்மரம் அறுப்பாய்
முத்தமிழின் மேன்மையெலாம் மேதினிக் குரைப்பாய்
முக்கனியின் தீஞ்சுவையாய்ப் புதுவாழ்வு நிறைப்பாய்

தீயவை தீய்த்திடத் திரிசுடராய் முளைப்பாய்
தீதுறை மனம்நிறை அழுக்குகள் அழிப்பாய்
தூநெறி துலங்கிட நலமளிக்க விரைவாய்
துன்பங்கள் விலக்கிடத் துணிவுடைமை தருவாய்
நேயமிகச் சித்திரையே இத்தரையில் முகிழ்ப்பாய்
நெடும்புகழ் தமிழ்நிலம் வளம்காணக் கொழிப்பாய்
மாசுகள் மடிந்திடநல் மதிவாணர் பாதையில்
மகிழ்ந்துநீ வருவாய்; மாண்புகள் தருவாய்!!

இலக்கியத் திறனாய்வும் இந்திய மொழிகள் இலக்கியங்களும்

திரு. தி. சு. திருமலைவேலு,
ஆங்கில விரிவுரையாளர் (தே. நி.)
அரசு கலைக்கல்லூரி, கரூர் - 5.

பரந்து விரிந்த இந்தியத் திருநாட்டில் சமஸ்கிருதம் தவிர்த்த ஏனைய மொழிகளான இந்தி, உருது, காஷ்மீரி, அஸ்ஸாம், வங்காளி, பஞ்சாபி, மராத்தி, குஜராத்தி, ஓரியா, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய இந்திய மொழிகள் அனைத்தும் அவற்றிற்குரிய மாநில மக்களால் பேசப்பட்டு மொழி வளர்ச்சி மற்றும் இலக்கிய மேன்மை அளடந்து வந்துள்ளன என்பதுடன், இலக்கிய வளர்ச்சியில் முற்போக்குச் சிந்தனைகளையும் புகுத்தி வந்துள்ளன என்பதனை அம்மொழி இலக்கியங்களில் அண்மைக் காலமாக வளர்ந்து வரும் இலக்கியத் திறனாய்வு மற்றும் அதற்கென உருவாக்கப்பட்ட திறனாய்வுக் கொள்கைகள் போன்றவற்றை ஆய்வு செய்தபோது அறிய முடிந்தது. இவ்வாய்வு மூலம் ஐரோப்பிய மொழி இலக்கியங் களில் காணும் இலக்கியத் திறனாய்வுக் கலையின் பழமை, வளர்ச்சி, புதுமை, புதுவுணர்வுகள் மற்றும் முதிர்ச்சி போன்ற இலக்கிய நிலைகளை, இந்திய மொழி இலக்கியங் களில் காணும் திறனாய்வுக் கலைக் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு அறியும் வாய்ப்பும் கிட்டியது.

இவ்வாய்வில் மற்றுமொரு உண்மையும் தெளிவாகப் புலப்பட்டது. அதாவது தமிழ் மொழியும் சமஸ்கிருத மொழியும்; மொழி, இலக்கியம், இலக்கணம் மற்றும் திறனாய்வுக்கலை இவற்றின் வளர்ச்சியில் எது எதை விஞ்சி நிற்கிறது என்பதுதான் அது; ஏனெனில், இவ்விரு மொழி களும் காலம் காலமாகத் தங்களது தனித்தன்மைகளைப் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளன என்பது வெளிப்படை. எனினும் உருது மொழி தவிர்த்த ஏனைய இந்திய மொழிகள் அனைத்திலும் சமஸ்கிருத மொழி மட்டும் தனது தாக்கத்தினை ஏற்படுத்தி வந்துள்ளது என்பதனைக் காணும் போது வியப்பாக உள்ளது. சமஸ்கிருதம் போன்று தமிழ் மொழியும் பிற இந்திய மொழிகள் அனைத்திலும் தனது தாக்கத்தை ஏன் ஏற்படுத்தவில்லை என்பது சிந்தனையைத்

தூண்டுவதாக உள்ளது. அது மட்டுமல்லாமல் தொல் காப்பியம் தவிர்த்த ஏனைய பிற்கால தமிழிலக்கிய மரபுக் கோட்பாட்டு நூல்கள் அனைத்திலும் சமஸ்கிருத மொழி இலக்கியத் திறனாய்வுக் கலைக் கோட்பாடுகளில் தாக்கம் இருந்து வந்துள்ளது என்பதனையும் மறுக்க முடியாது; இந்நிலை எந்தக் காலக் கட்டத்தில் தொடங்கியது; அதற்கான காரணங்கள் என்ன? என்பன போன்றவை ஆய்வு செய்யப்பட வேண்டியவையே.

சமஸ்கிருத மொழியில் திறனாய்வுக் கலைக் கோட்பாடுகள் முறையானவையும் காலத்தை விஞ்சி நிற்பனவும் ஆகும். இவை ஐரோப்பிய மொழிகள் இலக்கியங்களின் திறனாய்வுக் கலைக் கோட்பாடுகளைக் காட்டிலும் பழமையானவையுமாகும்; வேதம் ஓத "சந்தம்" என்ற இசை வரிசையை உருவாக்கிய சமஸ்கிருத மொழி வல்லுநர்கள் கவி, காவியம், நடனம், நாடகம் போன்ற இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் வகுத்த தோடல்லாமல், கருதி, சுவை போன்ற இலக்கியக் கொள்கை களை உருவாக்க உதவும் வார்த்தைகளையும் படைத்தளித் துள்ளனர்; வீரயுகக் காவியங்களுக்கு இலக்கணமாகத் திகழும் படைப்பு இலக்கியங்களான இராமாயணத்தையும், மகாபாரதத்தையும், வால்மீகியும் வேதவியாசரும், ஓமர் (Homer) போலல்லாமல், இலக்கணத் தூய்மையோடு படைத் துள்ளனர் என்றால் அது மிகையாகாது; ஏனெனில் ஓமர் ஒரு குருட்டுக் கவி என்பதோடு மட்டுமல்லாமல் ஒரு நாடோடிக் கவியும் கூட: இலியட் (Iliad) டும் கூட வீரயுக நாடோடிப் பாடல்களின் தொகுப்பு என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கி. மு. 800க்கும் கி. மு. 200க்கும் இடைப்பட்ட காலத்தி லேயே வேதத்தை விளக்கச் சாத்திரங்களும், உரை வளத் திற்கு நிகண்டும் (Synonyms) மொழியியலும் சமஸ்கிருத மொழியில் பிரபலமடைந்துள்ளன. கி. மு. 150 வாக்கில் பதஞ்சலி முனிவர் நாடகவியல் (Dramaturgy) நூலை இயற்றி அதன் சுவைத் தன்மையைத் (ரசனை) தெளிவாக விளக்கி யுள்ளார். இதே காலத்தில் "கவி சூத்திரம்" என்னும் நூல் கவிஞர்களை 1. சிந்தனைக் கவிஞர்கள், (Meditative Poets) 2. மேதைமைக் கவிஞர்கள் (Scholarly Poets), 3. தன்னுணர்வுக் கவிஞர்கள் (Inspired Poets) மற்றும் 4. சமயக் கவிஞர்கள் (Religious Poets (or) Missionary Poets) என்ற நான்கு வகைகளாகப் பிரிக்கின்றது.

(தொடரும்)

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25.00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. வி. குமாரசாமி அவர்கள், ரியூனியன் தீவு.	10 00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர், ஓய்வு)	5 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
திரு. A. T. A. ஈஸ்வர அடிகளார்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கின்னான், மலேசியா.	25 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79.	5 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிப்.

கழகப் புதிய வெளியீடுகள்

தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும் — 25 00

கோயிற் கலைச்செல்வர் தி. இராசமாணிக்கம்

சிவனும், முருகனும், தேவியும் மட்டுமன்று; ஐயப்பனும், சித்திரகுப்தரும், சகலசகலாவல்லியும், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரும் இவர் கண்களிலிருந்து தப்பவில்லை. போசளர் (கோசலர்), சாளுக்கியர் கட்டிய கோயிற் கலைச் செல்வங்களும், தூங்கானை மாடம், கரக்கோயில்களின் அமைப்புகளும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் போன்ற பகுதிகளும் படிக்கத்தக்கவை. பின்பகுதி சிறப்பாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தமிழகக் கோயில்கள், பின்னிணைப்பு போன்ற பகுதிகள் கோயிற்கலையை அறிய உதவுகின்றன. கோயிற்கலையையும், தெய்வங்களின் பெருமைகளையும் இதைவிடச் சிறந்த நூல் விளக்கமாக வெளிவரவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் — 40 00

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்

ஆரியம் கலவாத தமிழ்ப் பண்பாடு இருக்கின்றதா? என்று தமிழ் மக்களே வினவத் தொடங்கிய காலத்தில், அத்தகையதொரு சிறந்த பண்பாடு சிறந்தோங்கி வளர்ந்துள்ளது என்பதைச் சான்றுகளுடன் நாகரிகம், சமயம், கலைகள், பொழுதுபோக்கு என்ற தலைப்புகளில் எழுதியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூலை வரவேற்றுத் தம் பெருமையை பெருமிதத்துடன் படித்துப் பயனடைய உதவுகின்ற இந்நூலை எல்லோரும் வரவேற்க வேண்டும். சிறந்த தூயதமிழ் நடையையும் பாராட்டிப் பயன்பெறுவார்கள் என்பதும் எங்கள் எண்ணமாகும்.

தேசிய இலக்கியம் பெரியபுராணம் — 30 00

அ. ச. ஞானசம்பந்தன்

பதினான்கு பகுதிகளாக இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொன்றும் சிந்தனைக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. எடுத்துக்கொண்ட தலைப்புக்கு ஏற்பச் சேக்கிழார் காப்பியப் புலவராகும் தகுதியையும், பரந்துபட்ட மனப்பாங்குடைய தமிழ்த் தேசியத்தைப் பாராட்டியும், இலக்கிய மாண்புகளையும், பெரியபுராண பாத்திர மாண்புகளையும், குறிப்பாக ஞானசம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசரின் குணநலன்களை விளக்கும் திறமும் படித்து இன்புறத்தகுந்தவை. ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டிய நூல் என்பதை இந்நூலைப் படித்தவர்கள் சொல்லாமலே புரிந்துகொள்வார்கள்.

Asian Educational Services

(C-2-15, SDA. New Delhi-110016.)

Branch : No. 5, Sripuram First Street, Royapettah, Madras-600 014.

Phone No. 865040

A Comprehensive Tamil and English Dictionary
—WINSLOW M. 165 00

English Tamil Dictionary
—WINSLOW 165 00

Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature
—SINGARAVELU MUDALIAR 165 00

Thirukkural Original Tamil with English Translation
—DREW & LAZARUS
GB 50 00
HB 35 00
PB 20 00

Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly
—KATHIRAIVER PILLAI 165 00

A Grammar of the Common Dialect of the Tamil language
—JOSEPH BESCHI 145 00

Dictionary of Tamil Proverbs
—LAZARUS JOHN 195 00

Books can be had of :

The South India Saiva Siddhantha Works, Publishing Society, Tinnevelly, Ltd.,

154, T. T. K. Road, Madras-18.

Branches :

79, Prakasam Saalai (Broadway), Madras-108.
Tirunelvalli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1. Trichirappalli-2. Salem-1.

அப்பர் அச்சகம், சென்னை-108.

செந்தமிழ்ச் செல்வி

மே 1993

திருவள்ளுவர் ஆண்டு ... சித்திரை



"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு
முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

உள்ளுறை

	பக்கம்
பெரியபுராணம் ஓர் அரிய வாய்ப்பு	௩௨௧
தமிழ் நாவல்களில் காந்தீயச் சிந்தனைகள்	௩௨௫
பக்தி இலக்கியக்கொள்கை - வளர்ச்சி நிலைகள்	௩௨௮
இலக்கியத் திறனாய்வும் இந்திய மொழிகள் இலக்கியங்களும்	௩௩௪
"சேரர் தலைநகர் வஞ்சி கொங்கு நாட்டுக் கருரே"	௩௩௯
"சேவற் கைக் கோளன்"	௩௪௩
தலைமுறைக் கணக்கு	௩௪௮
பரத்(ந்)த...ஓர் ஆய்வு	௩௪௯
நமது தமிழ்	௩௫௧
முருகவேள் பன்னிரு திருமுறை	௩௫௮
செய்திகள்	௩௬0

முருகவேள் பன்னிரு திருமுறை

—டாக்டர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராயப் பிள்ளை 940 00

அருணகிரிநாதப் பெருமான் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதும், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் மற்றும் திருமுருகாற்றுப் படை, சேய்த்தொண்டர் புராணம் முதலியவைகளை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய முறையில் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை உரை வகுத்துள்ளார்கள்.

திருப்புகழ் மணத்தைப் பரப்புவதற்காக அனைத்துத் தொகுதிகளும் கணிப்பொறி மூலம் தொகுக்கப்பெற்று ஒருங்கே கிடைக்கக் கழகவழி வெளிவந்துள்ளன.

2 4 1993

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு ௨௦௨௪ - சித்திரை
மே - 1993
சிலம்பு-௬௭, பரல்-௯

பெரிய புராணம் ஓர் அரிய வாய்ப்பு

சாதி, சமயம், இனம் ஆகியவற்றை எல்லாம் கடந்து மனிதகுலம் முழுவதையும் ஒன்றாகக் காணும் பெருநிலை பெற்றவர் குன்றை நகராளி சேக்கிழார் பெருமான்.

எனவேதான், இறைவன் 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்ததை மறவாமல் மனத்துட் கொண்டு தாம் பாடிய காப்பியத்தை 'நின்றது எங்கும் நிலவி உலகெலாம்' என்று முடிக்கின்றார்.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவர் என்பது உலகறிந்த உண்மை. ஆனால், 20ஆம் நூற்றாண்டில் வாழ்கின்ற, வாழ்ந்த மாபெரும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளும் கற்பனை பண்ணமுடியாத அளவுக்குச் சமூக சீர்திருத்தம் பற்றி 12ஆம் நூற்றாண்டிலேயே பாடிய பெருமகனார் சேக்கிழார் ஆவார்.

குறிக்கோளில்லாமல் கெட்டு அலையும் இன்றைய மனித சமுதாயத்துக்குப் பெரியபுராணம் மிக மிகத் தேவையானது ஆகும். மனித சமுதாயம் அனைத்துக்கும் பொதுவான கருத்துகளைப் பெரிய புராணத்தின் வாயிலாய்ப் பரப்ப வேண்டும் என்று அன்பர் பலர் விரும்பினர்.

ஆண்டுதோறும் விழா எடுத்தலோடு மட்டும் நில்லாது. பெரிய புராணத்தில் உள்ள இக் கருத்துகளை நூல் வடிவில் கொணர்வதையும், மாணவரிடையே பேச்சு, எழுத்துப் போட்டி முதலியன வைத்து இளைஞர் சமுதாயத்தில் இதனைப் பரப்புவதனையும் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும், சேக்கிழார் பெருமகனாருடைய திருத்தொண்டர் புராணம் எங்கும் எளிதில் கிடைப்பதில்லை. இது ஒரு புறம் இருக்க வெளிவந்துள்ள ஓரிரு பதிப்புகளும் பிழை மலிந்தனவாய், நூலைக் கையில் எடுத்துப் படிக்க விருப்பம் தராத நிலையில் உள்ளன. எனவே நல்ல பதிப்பு ஒன்று வெளிவரவேண்டும் எனவும் விழைந்தனர்.

இந்நிலையில் பெங்களூரைச் சேர்ந்த கல்விக் காவலர், செந்தமிழ்ச் செல்வர், டாக்டர் ம வே. ஜெயராமன், M. A. D, Litt அவர்கள் 'சேக்கிழார் ஆராய்ச்சி மையம், (சென்னை) என்ற பெயரில் ஓர் அறநிலையை (TRUST) நிறுவியுள்ளார்.

அம் மையத்தின் நிறுவனர் - தலைவர் ஆகிய திரு. ஜெயராமன் அவர்கள் ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆராய்ச்சி மையத்தின் ஒரு பகுதி சேக்கிழார் கழகம். சேக்கிழார் ஆராய்ச்சி மையம் நிதித் தொடர்பான அனைத்தையும் மேற்கொள்ளும். சேக்கிழார் கழகம், நூல் வெளியீடு, விழா அமைப்பு, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் போன்றவற்றை அமைக்கும்.

நூல் வெளியீட்டின் பதிப்பாசிரியப் பணியைப் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

முதல் பணியாகப் பெருமானுடைய 'பெரிய புராணம்' பாடல்களைச் சொற்கள் பிரித்தும் தமிழ்த்தென்றல் - திரு. வி. க. அவர்களின் குறிப்புரையையும், சைவ சித்தாந்த மகா சமாஜம் தொகுத்துள்ள பெரிய புராணம் - அரும் பொருள் அகராதியையும் சேர்த்து நல்ல தாளில் சிறந்த கட்டமைப்புடன் வெளிக்கொணர வேண்டும் என்று முடிவு செய்து அதற்கான தொடக்கப் பணிகள் தீவிரமாக மேற் கொள்ளப் பெற்றுள்ளன.

மேற்குறித்த குறிப்புரை, அகராதி ஆகியவை வெளி வந்து சுமார் 55 ஆண்டுகள் ஆகிவிட்டன.

டெம்மி 1/8 அளவில், மேப்லிதோ தாளில் லேசர் அச்சு முறையில், பதிப்பித்து, சுமார் 1500 பக்கங்கள் கொண்ட ஒரே நூலாக அழுத்தமான கட்டமைப்புடன் ஆடி மாதம் சேக்கிழார் விழாவில் வெளியிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இன்று தாள் விற்கும் விலையில், நிலையில், எவ்வளவு தான் சிக்கனத்தைக் கையாண்டு இந்நூலைக் கொண்டு வந்தாலும் சாதாரண காலிக்கோ கட்டு, மேப்லிதோ தாள் கொண்ட முறையில் அச்சிடுவதானால் அடக்க விலையே ரூ. 125/- ஆகிறது.

மேலும், தரம் வாய்ந்த தாளில் அச்சிட்டு ரெக்ஸைன் கட்டு செய்து முகப்பில் பொன் எழுத்துகளில் பெயர் பொறித்து வெளியிடின் ஒரு பிரதி அடக்க விலை ரூ. 175/- ஆகிறது.

அடக்க விலைக்கே தரவேண்டும் என்ற எண்ணத்துடன் 1-7-1993க்குள் பெயர்ப்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

காலிக்கோ கட்டமைப்பு நூலாயின் ரூ. 125/-

ரெக்ஸைன் கட்டமைப்பு நூலாயின் ரூ. 175/-

'வெளியீட்டு முன் விலை (Pre Publication Price) அனுப்பிப் பெயர்ப்பதிவு செய்துகொள்வது பயன் உடையதாகும்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி

Sekkizhar Research Centre (Madras),
154, T.T.K. Road, Alwar Pet,
Madras - 600018.

தொகை வரைவோலையாக / பணவிடையாக அனுப்பப் பெறலாம்.

வரைவோலையாயின் (Demand Draft) சென்னையில் உள்ள எந்த வங்கிக் கிளையிலாவது மாற்றிக்கொள்ளத் தக்கதாக அமைய வேண்டும்.

இவ்வாறு பெயர் பதிவு செய்துகொள்ளாதவர் பின்னர் கடைகளில் இந்நூலையே ரூ. 175/- (சாதாரணக்கட்டு), (அ) ரூ. 225/- (சிறப்புக்கட்டு) தந்து பெற வேண்டி வரும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கிளைகளில் (கோவை, சென்னை, சேலம், திருச்சி, கும்பகோணம். மதுரை, திருநெல்வேலி முதலிய ஊர்கள்) ஏதேனும் ஒன்றில்

அவ்வூர்க்கு அணித்தே இருப்பவர் தொகை அனுப்பி யமைக்கான சான்று காட்டி (Receipt) நூல் பெறலாம்.

இன்றேல் வீட்டு முகவரிக்கே நூல் வரவழைக்க விரும்புவோர் தபால் செலவுக்கென/லாரிவழிச் செலவுக் கெனத் தனித்துத் தொகை செலுத்த நேரும்.

மேலும், விவரங்கள் அறிய, கீழ்க்காணும் முகவரி களுடன் கடித வாயிலாகவோ, தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்க.

சேக்கிழார் ஆராய்ச்சி மையம்
154, T. T. K. சாலை,
ஆள்வார்பேட்டை,
சென்னை - 600 018.
தொலைபேசி : 454157

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்
19, டாக்டர் நடேசன் சாலை,
அசோக் நகர், சென்னை - 600 083.
தொலைபேசி: 4821235

இலக்கணம் : பெயரும் வினையும்

பெயர்க்கும் வினைக்கும் சில மொழிகளில் தெளிவான வேறுபாடு இல்லை. தமிழில் பல அடிச் சொற்கள் (பூ, மலர், பிடி, அடி, தளிர், தழை, காய் முதலியன) பெயர்க்கும் வினைக்கும் பொதுவாக உள்ளன; வினைமுற்று வினையால் அணையும் பெயராக அமைகிறது; வினைக்குறிப்பு என்பதும் திணைபால் விகுதி ஏற்ற பெயர்ச் சொல்லும் வேறுபாடு இல்லாமல் ஒத்து அமைந்துள்ளன.

மொழி வரலாறு, மு. வ. பக். 64

தமிழ் நாவல்களில் காந்தீயச் சிந்தனைகள்*

பேராசிரியர், செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்.
டாக்டர் நல்லாசிரியர், முனைவர்,
சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.
[இயக்குநர், தமிழ் ஆய்வு மையம், மயிலாடுதுறை]
(முன் இதழ் உ௮௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவசங்கரியின் 'ஒரு மனிதனின் கதை'—காந்தீய நெறியில் :

காந்தி அடிகள் மதுவிலக்குக் கொள்கையில் மிகுந்த பிடிப்பு உள்ளவராக இருந்தார். தம் கட்டுரைகளிலும் நூல்களிலும் இதனை வற்புறுத்தி எழுதினார். தம் உரைகள் தோறும் மதுவிலக்குக் கொள்கையைப் பிரசாரப் படுத்தினார். தம்முடைய நிர்மாணத் திட்டங்களுள் மதுவிலக்கிற்கு இடம் தந்து விளக்கினார். தமிழ் நாவல்களில் குடிப் பழக்கத்தைக் கண்டித்து விலக்கும் நாவல்கள் தம் முயற்சியில் பாராட்டத் தக்க நிலையில் உள்ளன; அவற்றுள் சிவசங்கரி எழுதிய ''ஒரு மனிதனின் கதை'' குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறு கின்றது.

மதுவிலக்கை, சமயச் சார்புக் கண்ணோட்டத்திலும், பொருளியல் சிந்தனைக் கண்ணோட்டம் அல்லது காந்தீயச் சிந்தனைக் கண்ணோட்டத்திலும், உடல் நல நோக்கிலான கண்ணோட்டத்திலும் ஆராயலாம். 'குடி' பஞ்சமா பாதகச் செயலாகச் சமயச் சார்புக் கண்ணோட்டத்தில் எண்ணப் பட்ட கொள்கை மேம்பட்டிருந்த காலக் கட்டத்தின் இறுதியில் தோன்றிய சமுதாயச் சிந்தனை, தொடர்ந்து எழுந்த பொருளியல் சிந்தனைக்குள் அங்கமாயிற்று என்று கருதலாம். காந்தியடிகளின் வருகைக்குப்பின் காங்கிரஸ் இயக்கம் கிராமப்புற மக்கள் மேம்பாட்டில் தன் கருத்தைச் செலுத்தியது. கிராமம் முன்னேற வேண்டுமானால் நாட்டுப் புற மக்கள் பொருளாதாரத்தில் ஏற்றம் பெற வேண்டும்.

---

* 9-10-9? இரவு திருச்சிராப்பள்ளி அனைத்திந்திய வானொலி நிலையத்திலிருந்து ஆற்றிய இலக்கியப் பேருரை.

இயல்பாகவே பொருள் வளம் குன்றியிருந்த ஏழை மக்கள் குடிப்பழக்கத்தால் இருக்கும் செல்வத்தையும் இழந்து சீரழிந்து போகும் நிலையைச் சுட்டிக்காட்டி மதுவிலக்கைப் பிரசாரப்படுத்தினர்.

இக்காலக் கட்டத்தில் வாழ்ந்த தமிழ்ப் படைப்பாளிகள் பொருளியல் சிந்தனையிலான மதுவிலக்குக் கொள்கையையே தம் படைப்புக்களில் வலியுறுத்தினர்; இராஜாஜி, கல்கி, தூரன் ஆகியோரின் படைப்புக்களில், பொருளியல் இழப்பே முதன்மைக் கருவாக உள்ளமையைக் காண்கின்றோம்.

பழந்தமிழகத்தில் கள் உணவாகவே கருதப்பட்டமையும், சித்தர் இலக்கியங்களில் அது மருந்து வகையுள் ஒன்றாகக் கூறப்பட்டமையும் கருதத்தக்கவை. மது மதி மயக்கம் உண்டாக்கும் என்பதைத் தவிர, உடல் நலக் கேட்டை உண்டாக்கும் என்பதை அக் காலத்தில் தமிழ் இலக்கியம் படைப்பாளிகள் பாடுபொருள் ஆக்கவில்லை என்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும். அறநூல்கள் மட்டுமே கள்ளுண்ணாமை வேண்டும் என்று உரைத்தன.

ஆங்கிலேயர்கள் தம் ஆட்சிக் காலத்தில், தம் நாட்டு ஆலைகளில் வடிக்கப்பட்ட வெறி மிகுந்த சாராயத்தைக் குறைந்த விலையில் இந்தியாவில் விற்று வந்தனர். கள்ளை விட வெறி மிகுந்த அயல் நாட்டுச் சாராயத்தைக் குடிப் பழக்கம் உடையவர்கள் பருகலாயினர். வறுமையில் இருந்த இந்திய மக்கள் சாராயக் குடியால், பொருளியல் கேட்டுடன் உடல் நலக் கேட்டையும் விளைத்துக் கொண்டனர். உலக நாடுகளின் பொது மருத்துவமனைகளிலும் மனநிலை மருத்துவமனைகளிலும் உள்ள படுக்கைகளில் சரிபாதியைக் குடிகாரர்கள் நிரப்பிக் கொண்டிருப்பதாக ஓர் அறிவியல் ஏடு எழுதியது உண்மையே. (''ஹெல்த்'', நவம்பர் 83, பக். 15)

காந்தீயச் சிந்தனையிலிருந்து முகிழ்த்த மதுவிலக்கை, குடிப் பழக்கத்தால் ஏற்படும் உடல்நலக் கேட்டைத் தற்கால அறிவியல் (மருந்தியல்) கண் கொண்டு விளக்க இலக்கிய வாதிகள் முற்பட்டுள்ளனர்; உளவியல், உடலியல், மருந்தியல் ஆகியவற்றின் ஆதரவுடன் குடிப் பழக்கத்தையும், அதற்குரிய சூழ்நிலை விளைவு ஆகியவற்றையும் சிவசங்கரி விளக்கியுள்ள ''ஒரு மனிதனின் கதை'' என்ற நாவலில் காண்கின்றோம்.

குடிப் பழக்கம் உடையோரின் வீழ்ச்சியும், மீட்பும் எஞ்சியோர்க்கு 'எச்சரிக்கை'யாக இருப்பதால், இது தொடர்பான நாவல்களை 'எச்சரிக்கை இலக்கியங்கள்' என்று கூறுதல் பொருத்தம் உடையதாகும்.

படைப்பாளிகளுக்கு ஒரு வேண்டுகோள் :

தமிழ் நாவல்களில் காந்தீயச் சிந்தனைகளை எடுத்து விளக்கிய எழுத்தாளர்கள் தம் வாழ்நாளில் காந்தி அடிகளைத் தெய்வமாகவே கருதித் தம் எழுத்துக்களை வடித்தார்கள். அவற்றைப் படிக்கும் அன்றைய வாசகர்கள் அந்தப் புனித சிந்தனைகளில் மூழ்கினார்கள்; இலட்சிய வேகத்தில் ஒன்றினார்கள்; நாவலாசிரியர் பெற்ற உணர்வைத் தாமும் எய்தினார்கள். படைப்பிலக்கிய வழியே பரிசுத்த நெறி வகுத்த பாக்கியவான்களாக இருந்தார்கள். இன்று எழுத்தாளர்கள் காந்தீயச் சிந்தனைகளை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும்; பொழுதுபோக்கிற்காக எழுதாமல், பொருள் சேர்க்க எழுதாமல், புனித வேள்வியாகவே தம் எழுத்தைக் கருதி அக் கற்பு நெறியைக் காக்க வேண்டும்; மீண்டும் உயர் செய்தியைக் கொண்ட (Sublime message) நாவல்கள் உருவாக வேண்டும்.

''தான் வாழும் சமுதாயத்திற்குத் தன்னால் பெரும் பயன் ஒன்று விளைதல் வேண்டும்; அத் தார்மீகப் பொறுப் புணர்ச்சியுடன் எழுதுகோலைக் கையாள வேண்டும்'' என்ற மெய்யுணர்வு படைப்பாளிக்கு இருத்தல் வேண்டும். உயர்ந்த நாவல்களையே வாங்கிப் படிக்க வேண்டும் என்ற உணர்வும் வாசகரிடையே நிலைபெற்று விட்டால், 'புற்றீசல் இலக்கியங்கள்' ஆகிய 'நச்சு இலக்கியங்கள்' காலப்போக்கில் ஒழிந்து விடும்.

காந்தி அடிகளார் வழங்கிய வாழ்வியல் வைரங்கள்; கருத்து முத்துக்கள் எண்ணற்றவை; அந்த முத்துக்களைக் கோத்து ஆரம் ஆக்கும் திறவன்மை உடைய தேர்ந்த தொழிலாளர்களே எழுத்தாளர்கள் ஆவர். நம் தாயகத்தை முற்போக்கிற்கு அழைத்துச் செல்லும் பெரும் பொறுப்பு உடையவர்கள். அவர்கள் பொறுப்புணர்ந்து எழுதுவார்களா? மீண்டும் நம் 'மண்ணில் தெரியுமா வானம்?' என்பதே இன்று உலகச் சான்றோர் உள்ளங்களின் ஆழ்ந்த நினைவு; விழைவு எல்லாம்.

பக்தி இலக்கியக் கொள்கை—வளர்ச்சி நிலைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

(முன்னிதழ் உகூஉஆம் பக்கத் தொடர்ச்சி)

பக்தி இலக்கிய அமைப்பு:

கவிக்கு விஷயமல்ல, உருவமே பிரதானம். ''கவிதை சொல்லப்படும் பொருளன்று; சொல்லும் முறையேயாகும்,'' என்பர் ஹெமன். கவிதையின் சிறப்பு அதன் உருவத்தில் வேரூன்றி நிற்கின்றது. கவிதையின் ஆற்றல் அதை அடைகின்ற வடிவத்தில்தான் திகழும். கலையின் நோக்கம் வடிவமே என்று குரோச்சே கூறியது சிந்திப்பதற்குரியது. ''கவிதை வெறுங் கருத்தை மட்டும் குறித்தால் போதாது; அது நுகரக்கூடிய நிலையில் ஓர் உருவத்தை அடைய வேண்டும். பகவான் எங்கும் உள்ளான் என்று சொன்னால் மட்டும் போதாது; இக் கருத்து ஒரு சித்திரமாக மலர வேண்டும்'' என்பர் க. நா. சுப்பிரமணியன்.

சங்கப் பாக்கள் கருத்துக்கு மட்டுமே முதன்மை தந்து வடிவத்தைப் பெரிதும் போற்றவில்லை. ஒரு படைப்பின் உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை ஆகியனவற்றைப் படைப்பாளியின் காலச் சமூக நிலை பாதிக்கிறது. படைப்பு சென்று சேரும் சமூகத்திற்குத் தக மூன்றும் மாறும். இலக்கியம் பொதுமக்கள் பார்வையில் படைக்கப்படும் பொழுதெல்லாம் அதன் உருவம் மாறியே வந்திருக்கிறது என்பதற்குப் பக்தி இலக்கியம் ஓர் எடுத்துக்காட்டு. வடிவம் என்பது வரலாற்றுக் காலக் கட்டத்தின் விளைவு. ஆகையினால் அதற்குத் தனிப் பொருள் உண்டு. பக்திப் பாக்கள் விருத்தயாப்பில் அமைந்துள்ளன. சங்கப் பாடல்களுக்கும் பக்திப் பாக்களுக்கும் வேறுபாடு விளங்கும் இடம் பாடல்களின் வடிவிலேயே ஆகும். சங்கப் பாக்கள் கற்றவர்களுக்கு உரியனவாகப் பாடப்பட்ட இலக்கியமாகும். பக்திப் பாக்கள் கல்லாதவர்களும் கூடிப் பாடுவதற்கு ஏற்றவாறு எளிய பாக்களாய் அமைந்துள்ளன. மக்களைப் பாடும்

இலக்கிய மரபு இறைவனைப் பாடும் பக்தி மரபுக்கு வழிவிட்டது. அகம், புறம் ஆகிய மரபிலக்கிய வகைகள் சமயச் சார்பும், சாயலும் பெற்று இறைக் காதலாகவும், இறையாற்றலாகவும், அருளாகவும் பரிணமித்தன.

அமைப்பியல் (Structuralism) திறனாய்வு:

புதிய கோணங்களில் பழைய நூல்களை ஆராய்வதற்கு மேலை நாட்டுத் திறனாய்வுக் கலை வழி செய்கிறது. ஒரு நூலின் இலக்கிய வகையை இனம் பிரித்துக் காட்டுவது திறனாய்வாளரின் முதல் கடமையாகும். ''பொதுவாக இலக்கிய வகைகள் பற்றிய கோட்பாடு புற அமைப்புக்கு முதன்மை அளிக்கும் கொள்கையை ஒட்டி அமைய வேண்டும்'' என்பர் வெல்லாக்கு - வாரன், ''ஒரு படைப்பைத் திறனாய்வு அடிப்படையில் புரிந்து கொள்வதற்கு, முதல் முயற்சியாக அமைப்பியல் ஆய்வு முறையைத் தேர்ந்தெடுப்பதே சரியாகும்'' என்பர் நார்த்ராப்ஃப்ரை. அமைப்பியல் அணுகு முறையானது அணியிலக்கணத்தைத் திறனாய்வியலுக்குத் திருப்பித் தருவது மட்டுமன்று; புதிய கவிதையியலை (Poetics) உருவாக்குவதற்கு முயலுகிற முயற்சியுமாகும். திறனாய்வியலின் முழுமையான முயற்சியானது இலக்கியத்தை அமைப்பியல் அடிப்படையில் ஆராய்வதாகும். 'படைப்பின் ஒருமை' என்பது அமைப்பியல் திறனாய்வு முறையின் அடிப்படையாகும். (unity of a work of art) முழுமையான ஒருமைப்பாடு என்ற 'அடிக்கோளில்' (Postulate) இருந்து, பகுப்பளவை (Deductive Method) அடிப்படையில் அமைப்பியல் திறனாய்வைத் தொடங்கலாம். படைப்பிற்கு ஒரு வடிவம் இருக்கிறது. அதைத் தொடர்ந்து கருத்தளவிலான ஒரு மூல வடிவம் இருக்கிறது. அமைப்பியல் அணுகுமுறை, தான் ஆராய்கிற இலக்கியத்தின் 'அமைப்பு' (Structure) எவ்வாறு தோன்றி நிலை பெற்றது? அது முதலில் எவ்வாறு இருந்தது? இதனுடன் மிகவும் நெருக்கமான உறவு கொண்டிருப்பவை எவை? ஆகிய வினாக்களுக்கான விளக்கத்தை நல்க வேண்டும். அமைப்பியல் ஆய்வின் அடிப்படையில், படைப்பை அறிதலில் இருக்கும் படிநிலைகளைக் (Process) காட்ட வேண்டும். இந்த வகையில் பக்தி இலக்கியப் படைப்பின் கட்டுமான அமைதியைப் (Texture) புரிந்து கொள்வதற்கான முதல் முயற்சியே இவ்வாய்வுப் பகுதியின் நோக்கமாகும்.

கவிதையின் கட்டமைப்பு என்பது அதன் வடிவமைப்பையே (Form) குறிக்கும். கவிஞன் பாடலை யாத்துள்ள முறையே கட்டமைப்பாகும். இது பாடலில் அமைந்துள்ள முறையை நோக்கின் அகக்கட்டமைப்பு, புறக் கட்டமைப்பு என்ற இரு நிலைகளிலடங்கும். ஒரு பாடலின் அகச் செய்திகள் என்னும் போது அவை அப்பாடலிலுள்ள கருத்தையோ, பாடல் செய்தியையோ குறிக்கின்றன. எனவே அகக்கட்டமைப்பு என்பது பாடுபொருளின் உள்ளமைப் பினையே, பாடுபொருள் அமைந்துள்ள விதத்தினையே சுட்டி நிற்கிறது எனலாம். பாடுபொருளின் அகவடிவம் நடையுடன் தொடர்புடையது. புறப்பாடல்களில் திணை, துறை என்ற அமைப்பில் கவிதைக் கருத்து அடிக் கருத்தாக இருந்து பாடற்கருத்தை விளக்கி நிற்கிறது. தமிழிலுள்ள அகத்திணை இலக்கியங்களெல்லாம் மக்கள் இலக்கிய வடிவங்களாகும். புறத்திணை இலக்கியங்கள் வரலாற்று இலக்கிய வடிவங் களாகும்.

அகம், புறம், அறம், பக்தி எனப் பொருண்மை வெவ் வேறாகும்போது அவற்றிற்கேற்ற அமைப்பு முறைகளும் வெவ்வேறு வகைமை காட்டுகின்றன. தொல்காப்பியம் புறப் பொருளில் சேர்த்துள்ள கடவுள் வாழ்த்து, இலக்கியப் பொருண்மையாகி பக்தி இலக்கியம் என்னும் தனிவகையின் தோற்றத்திற்கு முன்னோடியாயிற்று. மனிதத் தலைவனை வாழ்த்துதல் என்னும் நிலை, ஐம்புலன்களையும், அறிவையும் கடந்து நிற்கும் இறைவனைப் புகழ்தல் என்னும் அமைப்புக்கு விரிவாதலால் கடவுள் வாழ்த்து, தொல்காப்பியத்தில், புறப் பொருளில் அடங்குகிறது. பக்தி இயக்கக் கவிஞர்களிடம் புதிய வடிவங்களைப் படைக்கும் போக்கையும், பழைய வடிவங்களை மாறுதல் செய்து கையாளும் போக்கையும், நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் போக்கையும் காணலாம். பக்தி இயக்கக் கவிஞர்கள் பொது மக்களைச் சார்ந்த எத்தனையோ பாடல் வடிவங்களையும், நாட்டுப் பாடல் உருவங்களையும், வழக்குச் சொற்களையும் பயன்படுத்தினர்.

ஒவ்வொரு நாட்டிலும் பெரும்போர் அல்லது பஞ்சம் அல்லது பெருந்துன்பம் ஒன்று ஏற்பட்டபின் சமயக் கிளர்ச்சி ஏற்பட்டிருத்தலை வரலாறு காட்டும். தமிழ் நாட்டிலும் மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழரல்லாத தமிழ் மொழி அறியாத களப்பிரர் என்ற ஓர் இனம் தமிழ் நாட்டைப்

பிடித்து ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரையில் ஆட்சி செய்தது. அவ்வாட்சியில் தமிழர் அடைந்த துன்பமும், அதிலிருந்து விடுதலையடைய அவர்கள் புறவுலகை விட்டு அகவுலகில் அமைதி பெறச் செய்த முயற்சியுமே அன்று பக்திப் பாடல்கள் தோன்றக் காரணமாயின. ஒவ்வொரு மனிதனிடமுள்ள ஆன்மாவின் சிறப்பை உணரத் தொடங் கினான் கவிஞன்; அகவுலகத்துள் புகுந்து புற உலகின் அல்லல் இன்றித் திரியத் தலைப்பட்டான் கவிஞன். இவ் வனுபங்களின் வெளிப்பாடே பக்தி இலக்கியம். இப்பக்தி இலக்கியம் சுவை பயக்கும் பாடல்களைத் தந்ததோடு மட்டுமல்லாமல், பிற்கால இலக்கிய வடிவங்கள் பலவற் றிற்குத் தோற்றக் களனாகவும் அமைந்துள்ளது. பக்தி இலக்கியத்தில் பெருவாரியாகப் பயின்று வருவது பதிகப் பாநிலையாகும். இதில் இசைநிறைச் செய்யுள் வடிவங் களின் சீர்மையைக் காண முடிகிறது.

பதிகம் - பெயர் வழக்கு :

தெய்வத்தைப் பற்றிப் பெரும்பாலும் பத்துச் செய்யுளால் பாடப்படும் பிரபந்தம் பதிகம் எனப்படும். இது பாயிரம், பதிகம் ஆகிய பொருண்மைகளைக் குறிக்கும். பத்துப் பாடல்கள் இணைந்து ஒரு தொகுதியாக அமைதல் சங்க இலக்கியம் முதலே காணப்படினும், பக்திக் காலமே பதிகப் பெயரமைப்பை இணைத்துக் கொண்டது. புறத் துறையில் பப்பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குவது பதிற்றுப்பத்து. திருக்குறள் பத்துப் பாடல்களைக் கொண்ட அதிகாரங்களை உடையது. இவை போலப் பத்துப் பாடல் களைக் கொண்டு தெய்வத்தைப் பொருளாகப் பாடியது பதிகம் எனப்பட்டது. பிற்காலத்தே நீதிநூல்களில் நாலடியார், ஔவை குறள் ஆகியன பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்கியமையும் கருதலாம். ஆகவே, சங்க காலத்தில் பப்பத்தாக இருந்த முறையே பின்னர் ஒரு இலக்கிய வகையாக மாறிப் பதிகமாயிற்று என்பதாகும்.

பக்தி இயக்கக் காலத்தில் காரைக்காலம்மையார் முதன் முதலில் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடிப் பதிகப் பெருவழியைத் தோற்றுவித்தார். அவரைத் தொடர்ந்து திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் இறையுணர்வை அகப் பொருட்சுவைநலம் ததும்ப ஆயிரக்

கணக்கான தேவாரப் பதிகங்களில பாடிச் சிறப்பித்தனர். தேவாரத் திருமுறையைப் போல் திவ்வியப் பிரபந்தத்தில் பெரிய திருமொழியில் மட்டும் திவ்விய தேசங்களின் நில அமைப்பை ஒட்டிப் பதிகங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திவ்வியப் பிரபந்தத்தில் 'பத்து' என்ற பிரிவு 'இருக்கு வேதத்தில் மண்டலங்களில் உட்பிரிவுகள் வகுக்கப்பெற்றுள்ள மரபினை ஒட்டியது. அங்கு அந்த உட்பிரிவுகள் 'ஸூக்தம்' என வழங்கப் பெறுகின்றன. அந்த ஸூக்தம் போன்றதே தமிழில் 'திருமொழி' என்று வழங்கப் பெறுவது. திருமொழிகளின் தொகையைக் கொண்டே 'முதல் பத்து' 'இரண்டாம் பத்து' என்றிப்படி வரையறை ஏற்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது.

முத்துவீரியம், பிரபந்ததீபிகை, சுவாமிநாதம் போன்ற பிற்காலப் பாட்டியல்கள் பதிகத்தைப் பிரபந்த வகையாகவே கொண்டு விளங்குகின்றன. பத்துப்பாடல் என்னும் எண் வரையறை தரப்பட்டு, எப்பொருளிலும் அமையலாம் எனும் நிலை குறிக்கப்படுகிறது. யாப்பு வடிவம் பற்றி இவை கூறாதிருக்க, பன்னிரு பாட்டியல் இது பற்றிக் கூறுகின்றது. பதிகம் எனப்படும் இலக்கிய வடிவம் ஆசிரியத் துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வெண்பா ஆகிய பாக்களில் ஒன்றினால் பாடப்பெறும் என்பதும், அப்பாடல் நான்கடி முதல் எட்டடிவரை அமையும் என்பதும், பாட்டின் எண்ணிக்கை பத்து அல்லது இருபதாக இருத்தல் வேண்டும் என்பதும் பன்னிரு பாட்டியல், இனவியல் 111) பதிகத்திற்கு வகுத்துள்ள இலக்கணமாகும்.

''ஆசிரியத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி.
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத்து ஈரைந்து நாலைந்து என்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிக மாகும்''

என்று 'பதிகம்' என்னும் இலக்கிய வகையின் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் கூறும்.

''கோதிலோர் பொருளைக் குறித்து ஐயிரண்டு
பாவெடுத் துரைப்பது பதிகமாகும்''

என்று முத்துவீரியம் (யாப்பு 115) கூறுகின்றது.

ஐங்குறுநூற்றில் பத்துக்களாகவும் நூறுகளாகவும் அமைந்த மரபுதான் பதிக வகைக்கும் சதக வகைக்கும் முன்னோடிகளாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாசுரங்கள் பலவும் திருமொழி, தமிழ் எனப் பெயரிட்டழைக்கப்பட்டாலும் பத்துக்களேயாகும். ''ஒருபா ஒருபஃது'' என்பது பதிகத்தின் பிறிதோரு வகை வளர்ச்சியே: ''இருபா இருபஃது'' என்பது அதன் இரட்டித்த வடிவே யன்றிப் பிரிதன்று.

ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிப் பாடும் தமிழ்த் தாழிசைகளின் வளர்ச்சியே திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தமும் தோன்றிய காலத்தில் ஒரு பொருள் மேல் பத்தடுக்கிப் பாடும் மரபிற்கு வழிகாட்டியிருக்க வேண்டும். பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, திருக்குறள் ஆகியவற்றில் இடம்பெற்ற பத்துப் பத்தாகப் பாடும் பழைய மரபு விரிவடைந்து, இவ்வடிவத்தினால் இறைவனைப் பாடும் இயல்பினைத் திருமுறைகளிலும் திவ்வியப் பிரபந்தத்திலும் காண முடிகிறது. பிற்காலத்தில் கூடப் பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தில் பத்துப் பாடல்கள் பாடும் மரபு பேணப் பெற்றது.

(தொடரும்)

கிளை மொழியும் பொது மொழியும்

எஸ்கிமோக்களின் பேச்சில் கிளைமொழிகள் பல இருந்தனவாம். ஒவ்வோர் இடத்தாரும் ஒவ்வொரு கிளை மொழியைப் பேசினார்களாம். கடைசியில் அவர்களுக்குப் பொதுவாக ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்ட சந்தை விழாவின்போதுதான் அவர்கள் எல்லாரும் பொதுவாக உணர்ந்து கொள்ளக்கூடிய மொழி வளர்ந்ததாம். மக்கள் ஒன்று சேரத் தலைப்பட்டால் இவ்வாறு பொது மொழிகள் வளர வழி அமைகிறது.

ஒருவர் தம் கூட்டத்தை விட்டு மற்றொரு கூட்டத்துடன் பழக நேரும்போது தம் கூட்டத்தார் பேசும் கிளை மொழியின் கூறுகள் சிலவற்றை அங்குக் கொண்டு சென்று பரப்புகின்றார். கிளை மொழிகள் கலந்த முறையில் மாறுதல் மெல்ல மெல்ல ஏற்பட்டுக் கொண்டிருத்தல் இயல்பாகிறது.

மு. வ. மொழி வரலாறு பக். 137-138.

இலக்கியத் திறனாய்வும் இந்திய மொழிகள் இலக்கியங்களும்

திரு. தி. சு. திருமலைவேலு,
ஆங்கில விரிவுரையாளர் (தே. நி.),
அரசு கலைக்கல்லூரி, கரூர்-5.
(முன்னிதழ், ௩௧அஆம் பக்கத் தொடர்ச்சி)

கி. பி. 200இல் வாழ்ந்த பரத முனிவர் தனது ''நாட்டிய சாஸ்திரம் என்ற நூல் மூலம் நாடகவியல் நடிப்பியல், நடனம், இசை போன்றவற்றிற்கு இலக்கணம் வகுத்திருப்பதோடு, நாடகத்தின் அங்கங்களாகக் கதை அமைப்பு (Plot), கதை மாந்தர்கள் (Chsracters) தலைவன் — தலைவி (Hero and Heroine), உணர்வுகள் (Sentiments) மற்றும் நடை (Style) போன்றவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். இவர் கருத்துக்கள் இன்றளவும் திருத்தப்படவோ, மறுக்கப்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கி. பி. 600இல் வாழ்ந்த வாமனர், கி. பி. 800இல் வாழ்ந்த உத்பாதர் மற்றும் ருத்ரதர் போன்றோர் செய்யுளியலுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். இவர்களில் குறிப்பாகப் பாமகர் இலக்கிய வகைகளை (Literary Genres) ஆய்வு செய்து கதை (Tale) சிறு கவிதைப் பிணைப்பு (Small verse Unit) போன்றவை எப்படி இருக்க வேண்டும் என்று ஆய்வு செய்துள்ளார்.

கி. பி. 850 வாக்கில் மொழி இலக்கணம், யாப்பிலக்கணம், நாடகவியல், சிருங்காரவியல் (Erotics) தருக்கவியல் மற்றும் தத்துவம் போன்ற கலைகளுக்கு அறிவியல் பூர்வமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இக் காலத்தில் வாழ்ந்த ஆனந்தவர்த்தனர், செய்யுளில் முருகியல் (Aesthetics) கொள்கையினைப் புகுத்தி ''பொருள் மேற்கொளல்'' (Dhvani - suggestedmeaning) முறையில் காவியப் படைப்புகளை ஆய்வு செய்துள்ளார். இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்டு திறனாய்வு செய்யும் முறையினைவிட்டு, முருகியல் நிலைத் திறனாய்வை இலக்கியத்தில் புகுத்தி, பழைமையில் புதுமை கண்ட பெருமை ஆனந்தவர்த்தனரையே சாரும். இவர் வழியிலேயே குண்டகர் (கி. பி. 1000) மம்மதர் (கி. பி. 1150) வித்யாநாதர் (கி. பி. 1300)

விஷ்வநாதர் (கி. பி. 1350) மற்றும் ஜகந்நாதர் (கி. பி. 1650) போன்றோர் இலக்கியத் திறனாய்வு செய்துள்ளனர்.

சமஸ்கிருத மொழி நாடகவியல் உலக நாடகவியலில் அழியாத நிலையைப் பெற்றுள்ளது என்பதனைக் கவி பாசன் (கி. பி. 200), காளிதாசன் (கி. பி. 350) மற்றும் பாரவி (கி. பி. 550) போன்றோரது நாடகப் படைப்பிலக்கியங்களை ஆய்வு செய்தாலே விளங்கும். இவர்கள் தங்களது நாடகங்கள் அனைத்திலும் முருகியல் நவிற்சிக் கலையினைப் (Aesthetic Appreciation)யினைப் புகுத்தியுள்ளமை புதுமையான இலக்கியப் படைப்பாற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பவபூதியும் (கி. பி. 700) அபிநவகுப்தரும் (கி. பி. 1000) ஆத்மஞான இன்பம் (Spirutual Ecstacy) அல்லது சாந்தமே இலக்கிய ரசனையின் அடித்தளம் என்றனர். இக்கொள்கையானது, ஆங்கிலக் கவி மில்டன்-இன் (John Milton) துன்பியல் நாடகக் கொள்கையான ''உணர்வுகளின் வடிகால்'' (Purgation of Emotions) என்பதன் முன்னோடியாக உள்ளது. கவிபட்டதௌத்தா (கி பி. 950) கற்பனைப் படைப்பாற்றலைப் பற்றி (Crearive Imagination) விரிவாகப் பேசுகிறார். கி. பி. 980இல் வாழ்ந்த ராஜசேகர் மற்றும் குண்டகர், செய்யுளியலை (Poetics) மிக நுணுக்கமாக ஆய்வு செய்துள்ளனர். கி. பி. 1300இல் வாழ்ந்த மல்லிநாதர் செய்யுளியலில் நடைமுறைத் திறனாய்வினைப் புகுத்திப் புரட்சி செய்துள்ளார்.

பொதுவாக சமஸ்கிருத மொழியில் இலக்கியத் திறனாய்வு என்பது,

1. அதன் இலக்கிய வகைகள், இலக்கண அமைப்பு
2. இலக்கியச் சுவையும் சுவைத்தல் முறைகளும், (Rasa and Bhava)
3. அலங்காரம் அல்லது அணி இலக்கணம், (Figures of speech)
4. இலக்கியத்தில் தவறுகள், (Dosas)
5. இலக்கியப் பண்புகள், (Gunas)
6. கவிதைப் பாரம்பரியங்கள், (Kavisamyas)

7. முருகு நிலைகள், (Gradations of beauty)
8. அனுமான இலக்கியம், (Dhvani)
9. மறைமுகச் சுட்டு, (Vakrokti)
10. திறனாய்வாளனின் இலக்கிய நயம், (Sahradaya)
11. நடைமுறைத் திறனாய்வு (Practical Criticism)

போன்ற கூறுகளைக் கொண்டதாகும்.

17ஆம் நூற்றாண்டிற்குப் பின் சமஸ்கிருத மொழி இலக்கியத்தில் முன்னேற்றம் குறைந்தது. இக்கால கட்டத்தில் அன்னியர் ஆட்சி, அவர்களது மொழி, மற்றும் சமயப் பண்பாடுகள் போன்றவை பெருமளவு வடபாரதத்தை ஆக்கிரமிக்கவே, ஆரியவர்த்தம் இந்துஸ்தானமாக மாறி உருது, பாரசீகம், அராபியம் போன்ற வேறு மொழிகளும், சிந்தி, பாலி, பஞ்சாபி மற்றும் காசுமீரம் போன்ற பிராந்திய மொழிகளுடன் சமஸ்கிருதம் கலந்து இந்தி மொழியாகவும், இந்தி மொழி இலக்கியமாகவும் மலரத் தொடங்கியது. ஆரிய அந்தணர்களுக்குக் குடியேற்ற மண்டலம் (Regional settlement or aboriginal state) என்று இந்தியாவில் எதுவும் இல்லாததாலும், ஆரிய அந்தணர்களைத் தவிர சமஸ்கிருத மொழியைப் பேச மக்களோ, மண்டலமோ இல்லாத காரணத்தினாலும் இன்று அது உலக வழக்கு அற்றுப் போயிற்று.

இந்தியாவில் இன்று அதிக மக்களால் பேசப்படும் ஒரே மொழி இந்தி மொழியாகும். இந்தி மொழிக்கும் சமஸ்கிருத மொழிக்கும் இடையே உள்ள தொடர்பு ஐரோப்பிய மொழிகளான இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளுக்கிடையேயான தொடர்பைப் போன்றதாகும்.

இந்தி மொழி இலக்கியத்தில் திறனாய்வுக் கலை என்பது 18ஆம் நூற்றாண்டு வரை சமஸ்கிருத மொழி இலக்கிய திறனாய்வுக்கலையின் மறு ஒளிபரப்பாகவே இருந்து வந்துள்ளது. 18ஆம் நூற்றாண்டில் பிகாரி தாஸ் அவர்களின் "காவிய நிர்ணயமும்", 19ஆம் நூற்றாண்டில் பிரதாப் சாஹியின் "காவிய விலாச"மும் இதற்கான சிறந்த உதாரணங்கள் ஆகும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை இலக்கியத் திறனாய்வுக் கலையின் தாக்கம் இந்தி

மொழி இலக்கியத்தில் துளிர்விடத் தொடங்கியது. பால கிருஷ்ண பட்டாவின் (1844-1914) "சச்சி சமாலோச்சனா" (1886) மற்றும் பண்டிட் கங்கா பிரசாத் அக்னி கோத்திரியின் (1870-1-31) "சமாலோச்சனா" போன்றவை திறனாய்வுக் கலையின் முன்னோடிகளாக அமைந்தன.

ஒரு திறனாய்வாளன் தான் திறனாய்வு செய்யும் படைப்பில் தெளிவான கருத்து, உண்மையைக் காணும் ஆர்வம், அலைக்கழியாத கவித்துவப் புலன் (Poetic sensibility) இவற்றைத் தனது ஆய்வின் அடிக்கோள்களாகக் கொண்டு, படைப்பாற்றல் மிக்க பகுத்தறிவாளனாக இருக்க வேண்டுமேயன்றி, குறைவு நிறைவுகளை மட்டும் சுட்டிக் காட்டுபவனாக இருக்கக்கூடாது என்பது திரு. அக்னி கோத்திரி அவர்களின் கருத்தாகும்.

திரு. அக்னி கோத்திரி அவர்களின் அடிச்சுவட்டில் மகாவீர் பிரசாத் திரிவேதி (1864-1938) இந்தி மொழியில் திறனாய்வுக் கலையினை 20ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கச் செய்த பெருமையைப் பெற்றவர் ஆவார். இக்கால கட்டத்தில் பிரேம கானரின் 'கிளர்தல் திறனாய்வு", (Interpretative critism) மற்றும் இராமகிருஷ்ண சுக்ல சிவிமுகியின் "சமூக நிலைத் திறனாய்வு", போன்றவை (Sociological criticism) சிறப்படையத் தொடங்கின. இதே வேளையில் பீதாம்பர தத்த பதத்வல-வும் (கி. பி. 1902), சாயாவாதப்பள்ளி அமைப்புக்களும் மேலை நாடுகள் மொழித் திறனாய்வுக் கலைக் கொள்கைகளைப் புகுத்தத் தொடங்கினார்.

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தி மொழி இலக்கியத் திறனாய்வுக் கலையில் முதிர்ச்சியும் கொள்கைகளில் வளர்ச்சியும் ஏற்பட இலட்சுமி நாராயண சுதம்சு (1907-74), ஹாசரி பிரசாத் திவேதி (1907-79) மகாவீர் பிரசாத் திரிவேதி போன்றோர்களுடன், இளைய தலைமுறையினரில் முனைவர் தேவராஜ் (பி. 1917), நமவர் சிங் (பி. 1927) மற்றும் நாகேந்திர போன்றோரும் அரும்பாடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய மொழிகளில் உருது மொழியானது அராபிய மற்றும் பாரசீக மொழிக் குடும்பங்களின் பிரிவாகும். எனவே, உருது மொழி இலக்கியம், இவ்விரு மொழி இலக்கியங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அமைந்துள்ளது. இம்மொழி

இலக்கியத்தில் இலக்கியத் திறனாய்வு என்பது 18ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றிய ''பயத்'' நூல் குறிப்புக்களே என்பது ஆய்வு முடிவாகும்.

18ஆம் நூற்றாண்டில் ''முசெய்ர'' (Musaira) மற்றும் ''முரக்த'' போன்ற கவிதை மேடைகள் மூலம் திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சையத் முகம்மதுகான் (1817-1898) மற்றும் அல்டாஃ ஹுசைன் ஹலி (1837-1914) போன்றோர், கவிதைக்கு 1. கச்சிதம் (Rigibility) 2. வாழ்வின் உண்மை உணர்வுகள் மற்றும் 3. சமூக நோக்கு இவை தேவை என வரையறுத்திட்டனர். 20ஆம் நூற்றாண்டில் இன்றுவரை, மஞ்சு கோரக்பூரி (பி. 1904) எஹ்தெஸ்ஹாம் ஹுசைன் (1912-1972) போன்ற திறனாய்வாளர்கள் மேலை இலக்கியத் திறனாய்வினால் ஈர்க்கப்பட்டு ''வளர் திறனாய்வில் (Progressive Criticism)'' ஆர்வம் காட்டினர். எனினும் அவர்களது கருத்துக்கள் அராபிய மற்றும் பாரசீக மொழிகள் இலக்கியப் பாரம்பரியம், மதம் மற்றும் சமூக உணர்வுகளின் மென்மை, இதிகாசங்களின் தொன்மை இவற்றின் அடிப்படையிலேயே இலக்கியத் திறனாய்வுக் கருத்துக்களாகக் கொள்ளப்பட்டன என்பது இங்கு நோக்கற்பாலது.

அஸ்ஸாமிய மொழியின் முறையான இலக்கியம் என்பது 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவகந்தளி மற்றும் சங்கர தேவர் (1449-1568) இவர்களின் பக்திப் பாடல்கள் ஆகும். 19ஆம் நூற்றாண்டில் வங்காள மொழி இலக்கியத்தில் தோன்றிய மறுமலர்ச்சியின் தாக்கம், அஸ்ஸாம் மொழி இலக்கியத்திலும் ஏற்படவே லட்சுமி காந்த பேஸ்பரூவா (1868-1938) என்னும் சிறந்த அஸ்ஸாமிய இலக்கியப் படைப்பாளர் தோன்றினார். அத்துடன் மேலை இலக்கியத் திறனாய்வுக் கலைக் கொள்கைகளைப் பின்பற்றி, பானி கந்த காகதி (1895-1952) அஸ்ஸாமிய மொழி இலக்கியத்தின் முதல் திறனாய்வாளர் ஆனார். இவரது திறனாய்வுக் கொள்கைகளுக்குத் திம்மேஸ்வர் நியோக் (1900-1968) வளம் சேர்த்தார். எனினும், திறனாய்வுக் கலைக்கு முறையான அடித்தளம், உமா கந்த சர்மாவின் ''காவிய பூமி'' (1948) மற்றும் மனோரஞ்சன் சாஸ்திரியின் ''இலக்கியக் கொள்கை'' (1961) போன்றவற்றால் போடப்பட்டது.

(தொடரும்)

தமிழ்நாடு நாணயவியல் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு மாநாட்டில் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரை

இடம்: கரூர். நாள்: 13, 14 பிப்ரவரி 1993

''சேரர் தலைநகர் வஞ்சி கொங்கு நாட்டுக் கரூரே''

திரு. பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

சங்க காலத்துச் சேர நாட்டின் தலைநகர், இன்றைய கொங்கு நாட்டுக் கரூரே என்றும் அது கேரளக் கடற்கரையில் இன்றுள்ள கொடுங்களூர் எனப்படும் சங்க கால முசிறி அன்று என்றும், ரா. ராகவய்யங்காரும், மு. இராகவய்யங்காரும், சேரன் வஞ்சி மாநகர், சேரன் செங்குட்டுவன் என்ற நூல்களில் அக்காலத்திலேயே பெரும்பாலும் இலக்கியச் சான்றுகள் படியும், பிற்காலச் சிலாசாசன வழக்குப்படியும் நன்கு நிறுவினர்.

இக் கருத்துக்கு எதிராக, டாக்டர். கிருஷ்ணசாமி அய்யங்கார், பசவலிங்கம் முதலியவர்கள் எழுதியிருப்பினும், அண்மையில் வாசிக்கப்பட்டுள்ள புகலூர், பிராமி கல்வெட்டும் அமராவதிப் படுகையில் கிடைக்கப்பெற்ற சங்க காலச் சேர மன்னர் காசுகளும், கிரேக்கர் காசுகளும், கரூர் அகழ்வாய்வில் கிடைத்த மேலை நாட்டுத் தடயங்களும், பயண நூல் ஆசிரியர் தாலமியின் குறிப்புகளும், இராகவய்யங்கார் கருத்தையே அரண் செய்வதையும் உறுதியாக்குவதையும் காண்கிறோம்.

அமராவதிப் படுகையில் டாக்டர். நாகசாமி கண்டெடுத்த 'தித்தன்' என்ற பெயர் பொறிக்கப்பட்ட முத்திரை முக்கியமானதாகும். தித்தனைப் பற்றிச் சங்க நூல்களில் செய்திகள் உள்ளன.

''நொச்சிவேலி தித்தன் உறந்தை''

என்று அகநானூறு 122ஆம் பாட்டில் கூறப்பட்டுள்ளது.

தித்தன் உறையூரைத் தலைநகரமாக ஆண்ட சோழர் குலத்தவன் என்று சிலர் கூறினாலும் அதை மறுத்து

இரா. இராகவய்யங்கார் தித்தன் உறையூரில் வாழ்ந்த வேளிர் குலத் தலைவன் என்பதை நிரூபித்துள்ளார்.

கருருக்கு அருகில் உள்ள உறையூரிலிருந்த தித்தன் பெயர் பொறித்த முத்திரை, அமராவதி, ஆற்றுப் படுகையில் கிடைத்திருப்பதால், கரூர் சோழர் தலைநகரான உறையூருக்கு மிக அருகில் இருந்தமை புலப்படுகிறது.

கொங்குக் கருவூர் அருகேயுள்ள இலக்கியத்தில் வழங்கிய ஊர்ப் பெயர்களும் அவை இருக்கிற நிலைமையும் கருவூரே வஞ்சி என்பதைக் காட்டுகின்றன.

கழுமலத்து யாத்த களிறு கரிகாலனுக்கு முடிசூட்ட வேண்டித் தன் மேல் எடுத்துச் சென்று, அண்மையிலுள்ள கருவூர்க்குச் சென்றது என்று பழமொழி நானூறில் 162 ஆம் பாடலில் கூறப்பட்டு உள்ளதால், கழுமலத் தருகில் இருந்த கருவூர் சோழர் தலைநகரான உறையூருக்கு மிக அருகில் இருந்திருக்க வேண்டும் என்பதுவும், களிறு சோழர் தலைநகரான உறையூருக்குச் செல்வதில் தடுமாறி, மிக அருகில் உள்ள கருருக்குச் சென்றது கூறப்பட்டுள்ளதால், இக் கருவூர் சேரளக் கடற்கரை ஊரான கொடுங்களூராக இருக்க முடியாது என்பதுவும் தெளிவாகும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வாழ்ந்ததாகக் கூறப்படும் குணவாயில் கோட்டம், கொடுங்களூர் அருகில், இப்போது உள்ள திருக்கணாமதிலகம் என்ற ஊரே என்று அங்குள்ள சைன மடத்துப் பிற்காலக் கல்வெட்டை வைத்துக் கோழிக்கோடு பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் எம். ஜி. எஸ். நாராயணன் கூறியுள்ளார். ஆனால், 'மாடம் நீடு குடவாயில் குணவாயில்' என்று தேவாரத்தில் அப்பர் பாடியதில் இருந்து, 'குணவாயில் கோட்டம்' கொங்கு நாட்டுள்ளதேயாகும் என்று தெரிகின்றது.

8ஆம் நூற்றாண்டில் ஆண்ட, ஜடிலவர்மன் பராந்தகன் என்ற பாண்டியன் பிரசஸ்தியை மு. இராகவய்யங்கார் குறிப்பிட்டுள்ளார். அதில் 'நெடுமாடக் கூடன் மதிலாகத்து வைத்தும்' என்ற வரி வருகின்றது. 'மதிலாகம்' என்ற சொல் வழக்கைப் போலவே, கொடுங்களூர் அருகே உள்ள திருக்கணாமதிலகம் என்ற பெயர் உள்ளது. கேரளத்தில் உள்ள ஊர்ப் பெயர்கள் பல, பாண்டிய, சோழ நாட்டு ஊர்ப்

பெயர்களாகவே இன்றும் வழங்குகின்றன. இப் பெயர்கள் பிற்காலத்தில் மலையாளத்தார் பின்பற்றிய வழக்கமன்றி முந்திய வழக்கமன்று.

அதுபோன்ற பிந்திய வழக்கே கொடுங்களூருக்கு வஞ்சி என்ற வழக்கும், அதற்குப் பக்கத்தில் உள்ள, 'கரூர் படன்ன' என்ற ஊர்ப் பெயர் வழக்கும் ஆகும். கொடுங்களூரில் 'கரூர்' என்ற பெயர் வழக்கு அதில் எந்தப் பகுதிக்கும் வழங்கவில்லை. இதை நானே அங்கு சென்று ஆராய்ந்துள்ளேன்.

பதிற்றுப்பத்து நாலாம்பத்தில், 'உண்ணாப்பைஞ்ஞிலம்' என்ற சொல் வழக்கு பயின்றுள்ளது. இதற்கு 'வரம் வேண்டி, உண்ணாது கிடந்த மக்கள் தொகுதி' என்று பழைய உரையில் பொருள் கூறப்பட்டுள்ளது. மற்றும் இந்த உரையாசிரியர் 'செல்வன்' என்று இப்பத்தில் குறிப்பிடுவது, திருவனந்தபுரத்துத் திருமாலை என்று கூறியுள்ளது ஆதார மற்றது என வையாபுரிப்பிள்ளை சுட்டிக் காட்டியது சரியேயாகும். திருச்சி மாவட்டத்தில் முசிறிக்குக் கிழக்கே 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிவன் கோயிலில் வாழைப்பழம், இறைவனுக்கு இன்றும் நிவேதனமாகப் படைக்கப்பட்டு' உண்ணப்படாது வீசியெறியப்படுகின்றது. உண்டால் வயிற்று வலி வரும் என்ற ஐதீகம் உள்ளது. 'பைஞ்ஞீலி' என்பது ஒருவகை வாழைப்பழத்தைக் குறிக்கும் என்பது திவாகரம், பிங்கலந்தை ஆகிய நிகண்டுகளில் இருந்து தெரிகின்றது. உண்ணாப்பைஞ்ஞிலம்' என்ற பதிற்றுப்பத்துச் சொல் வழக்கு இருபொருள் குறிக்கும் சிலேடையாய், "உண்ணாது விரதம் இருக்கும் மக்கள் தொகுதி' என்றும், 'ஞீலி' என்ற ஒருவகை வாழைப்பழத்தை உண்ணாத மக்கள் என்றும் இரு பொருள் குறித்ததாகத் தெரிகின்றது.

பைஞ்ஞீலி இறைவனை - அப்பர், சுந்தரர், சம்பந்தர், மூவரும் தேவாரத்தில் பாடியுள்ளனர். திருபைஞ்ஞீலியில், ஒரு குடைவரைக் கோயில் உள்ளது. இக் கோயில் கி. பி. ஏழு, எட்டாம் நூற்றாண்டுக்குரியது. இக் கோயில் சிவனுக்கு உரியதாகத் திருச்சி மலைக்கோட்டை குகைக்கோயிலெழுப்பிய காலத்ததாக இருக்கலாம் என்று தெரிகின்றது. இதற்கு முன்னர் சங்க காலத்தில் இங்கு சேரமன்னர் கட்டிய திருமால் குகைக்கோயில் இருந்திருக்கலாம். அதுவே உண்ணாப் பைஞ்ஞிலம் தொழுத திருமால் கோயிலாக, பதிற்றுப்பத்தில்

கூறப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தத் திருப்பைஞ்ஞீலி கருருக்கு அருகில் உள்ளதால், கருரே, சேரரது தலைநகரான வஞ்சி என்பது தெரிகிறது. திருவனந்தபுரத்து அரசரை 'வஞ்சிபாலர்' என்று வழங்கும் வழக்கு பிற்காலத்திய உபசார வழக்கு என்று மு. இராகவய்யங்கார் கூறுவது கவனிக்கத்தக்கது:

சங்க நூல்களில் பேராறு, பேரியாறு, என்றழைக்கப் பட்ட ஆறு, பொன்னானி என்று இன்று மலையாளத்தில் வழங்கும் ஆறேயாகும் என்றும், இந்தப் பெயர் 'பூர்ணவாஹிநி' 'பூர்ணா' என்ற வடமொழிப் பெயரின் திரிபே என்பதையும் ரா. ராகவய்யங்கார் சுட்டிக் காட்டி யுள்ளார்.

'புனன்மலிபேரியாறு' என்று பதிற்றுப்பத்துக் கூறுவதை, ஒரளவு பொருள் தோன்ற 'பூர்ணா' என்று மொழி பெயர்த்தது தெரிகின்றது.

(தொடரும்)

பிற மொழிகளை மதியாமை:

வடமொழி படித்தவர்கள் அது மட்டும் 'தேவ பாஷை' என்றும், மற்றவை மண்ணுலக மொழி (பிராகிருதம்) என்றும் கருதினர். விந்திய மலைக்குத் தெற்கே அக்காலத்தில் வழங்கிய திருந்தாத் தமிழை திராவிட மொழியை பைசாச பாஷை என்றனர். ரோமானியர்கள் இவ்வாறு பிறமொழியினரைப் 'பிதற்று வோர்' என்றும் 'காட்டு மிராண்டிகள்' என்றும் கருதினர். வேங்கடமலைக்குத் தெற்கே இருந்த பழந் தமிழர் தெலுங்கு மொழியை வடுகர் மொழி என்று கருதினர். 'வம்ப வடுகர்' என்றும், 'கல்லா நீள் மொழிக் கதநாய் வடுகர்' என்றும் குறித்துள்ளனர். அவர்கள் பேசுவது தமிழ் திரிந்த மொழியே (தெலுங்கு) என்பதை உணரவில்லை.

மொழி வரலாறு, மு. வ. பக். 240

"சேவற் கைக் கோளன்"

(கந்தர் அலங்காரம்)

தமிழகக் கோயிற் கலைச்செல்வர்
தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத்.
கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (ஓய்வு)
பொள்ளாச்சி.

ஒவ்வொரு இறை வடிவிற்கும் ஒரு கொடி உண்டு. சிவ பெருமானுக்கு இடபக் கொடி, திருமாலுக்குக் கருடக் கொடி ஆகியவற்றை எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். முருகப் பெருமானின் கொடி சேவலாம்.

அது சாதாரண சேவல் அன்று; 1008 அண்டங்களை 108 யுகங்கள் ஆண்ட சூரபன்மனின் ஒரு கூறு. எனவேதான் அது பேராற்றல் படைத்ததாக உள்ளது. அருணகிரி வள்ளல் தம் "சேவல் பத்து" என்ற நூலில்,

"கோனாகி மகவாறும் வானாள வானாடர்
குலவு சிறை மீள அட்ட
குலகிரிகள் அசுரர் கிளைபொடியாக வெஞ்சிறைகள்
கொட்டி எட்டிக் கூவுமாம்" (4)

பிரேத பூதத்
தொகுதிகள் பசாசுகள் நிசாசரர் அடங்கலும்
துண்டப்படக் கொத்துமாம்" (5)

என்றெல்லாம் அதன் வலிமையைப் பலபடக் கூறியுள்ளார்; கால்களின் நகங்களே ஆயுதமாக சேவல் சண்டை செய்வதால், அதை "நாகாயுதக் கோழி" என்றும் "காலாயுதக் கொடி" என்றும் அருணகிரிப் பெருமான் அழகாக அழைக்கிறார்.

உலகில் உயிர்கள் எல்லாம் இரவில் உறங்கிக் கொண் டிருக்கும்போது, புற இருளை அகற்றும் சூரியன் வரவை முன் கூட்டியே சேவல் அறிந்து கூவுகிறது. இவ்வாறு அது நாடோறும் மக்களைத் தட்டி எழுப்பித் தம் கடமைகளை ஆற்ற உதவுகிறது. எனவேதான் இதை "ரவி உமிழ்" என

அருணகிரிநாதர் அது சூரியனை உமிழ்வதாக வெகு அருமையாகக் குறிப்பிடுகிறார். அடியார்களின் அக இருளை அகற்றி, ஆட்கொண்டு அருள ஞான சூரியனாகிய அறுமுகன் வருவதைச் சேவல் தின ஒலியால் உணர்த்துகிறது. எனவே ஒலி அதாவது நாதவடிவாகிய சேவலை வணங்கினால், அருள் ஒலி உண்டாகும்.

இத்தகு சிறப்புமிக்க சேவல் செவ்வேளின் கொடியாக மட்டுமன்றி, அவனால் கையில் ஏந்தவும்படும். நான்கு கைகள் கொண்ட முருகனது ஏழு வகைத் திருவுருவங்களில் மூன்றில் அவன் கோழியைத் தன் கையில் வைத்து இருக்கலாம் என ஆகமத்தில் உள்ளது. முதல் வடிவத்தின் கைகளில் அபய முத்திரை, கத்யவலம்பித முத்திரை, சக்தி, கோழி ஆகியவை காணப்பட, இரண்டாவது திருவுருவின் கைகளில் அபயமுத்திரை, சக்தி, அக்கமாலை, கோழி ஆகியவற்றை அமைக்கலாம். மூன்றாவது வடிவங்களில் சக்தி, கத்தி, கேடயம், கோழி ஆகியவற்றை உருவாக்கலாம். மூன்றாவது திருவுருவை ''குமாரதந்திரம்'' என்ற நூலில் குமரன் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ''ஸ்ரீதத்வநிதி'' என்ற நூலில் குமரனது நான்கு கைகளில் இரண்டில் கத்தி, கேடயம் ஆகியவற்றை ஏந்துவதற்குப் பதிலாக அவை அபய மற்றும் வரத முத்திரைகளில் இருக்க வேண்டும்.

'ஸ்ரீதத்வநிதி' என்ற நூலின்படி அமைக்கப்பட்ட திருவுருவம் சேவூர் என்ற சேயூரில் உள்ள திருவாலீசுவரர் கோயிலில் உள்ளது. கோவை மாவட்டத்தில் அவிநாசியினின்றும் புஞ்செய் புளியம்பட்டி செல்லும் வழியில் இந்த ஊர் உள்ளது. இங்குள்ள சிவாலயம் சோழர் காலத்தைச் சார்ந்ததாம்.

இங்குள்ள கோயிலில் இறைவன் மற்றும் இறைவி ஆகிய இருவரின் கருவறைகளுக்கு இடையில் முருகனது திருமுன் கிழக்கு நோக்கி உள்ளது. இத்தகைய அமைப்பினை சோமாஸ்கந்த வடிவம் என்பர். வேடமடந்தை, வேழமடந்தை இருபாலும் இருக்க, குமரன் ஒரு தலை நான்கு கைகளுடன் காணப்படுகிறான். இவனது நான்கு கைகளில் உள்ளவை ''ஸ்ரீதத்வநிதி''யின்படி உருவாக்கப் பெற்றுள்ளன. அதாவது முன் இரு கைகள் அபய மற்றும் வரத முத்திரைகளில் இருக்க, பின் வலக் கையில் சக்தியும், பின் இடக் கையில் கோழியும் காணப் பெறுகின்றன. தன் தந்தையான

சிவபெருமான் பின் இடக் கையில் மானைப் பிடித்து இருப்பது போன்று, இவன்தன் பின் இடக் கையில் கோழியை ஏந்தியுள்ளான். இவனுக்குப் பின்னால் இவனது ஊர்தியான மயில் வடக்கு நோக்கிக் காணப்படுகிறது. இவனுக்கு வலப்புறம் உள்ள வேடமங்கையின் இடக்கையில் மலரும், வலக் கையில் சத்யவலம்பித முத்திரையில் உள்ளன. இடப்புறம் உள்ள வேழமங்கையின் வலக் கையில் மலரும், இடக்கையில் சத்யவலம்பித முத்திரையும் காணப்படுகின்றன.

கங்கை கொண்ட சோழீச்சரத்தில் ''குமார தந்திரத்தின்படி'' குமரன் வடிவம் செப்புச் சிலையாக இருக்க, இங்கு குமரன் வடிவம் 'ஸ்ரீதத்வநிதி'யின்படி சிலா வடிவமாக உள்ளது. ''முகம் பொழி கருணை'' என்று கச்சியப்ப சிவாசாரியார் கூறியதற்கு ஏற்ப, இவனது திருமுக மண்டபத்தில் காணப்படும் ஆருயிர்கள் மாட்டு இவன் கொண்ட பெருங் கருணைத் திறம் சொல்லில் அடங்காது.

ஆகம விதிகளின்படி அமையப் பெற்று கண்ணையும் கருத்தையும் கவரும் அரிய அழகுமிக்க இந்த வடிவம் காணத்தக்க ஒன்றாம்.

''செந்தமிழ்ச் செல்வி''

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25.00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

தலைமுறைக் கணக்கு

முனைவர் பேராசிரியர் இரா. மதிவாணன்

தமிழ்நாட்டில் தலைமுறை என்பது 37 ஆண்டுக்கால இடைவெளியைக் குறிப்பது. இவர் இந்த மரபில் இத்தனை யாவது தலைமுறையைச் சேர்ந்தவர் என்று எண்ணிட்டுக் கூறுவது பழங்கால வழக்கம். சப்பான் நாட்டில் இப்பொழுதுள்ள அரசர் 125ஆவது தலைமுறையைச் சார்ந்தவர் என்று கூறுகின்றனர். சிற்றரையம் பேரரையம் என்னும் இரு பகுதிகளையும் ஒருசேர ஆட்சிபுரிந்த இருங்கோவேள் மன்னன் 49ஆவது தலைமுறையைச் சேர்ந்தவன் என்றும் புலவர் கழாத்தலையாரை இகழ்ந்து பேசியதால் அந்த அரசமரபு கூண்டோடு அழிந்துவிட்டது என்றும் கபிலர் பாடியிருக்கிறார். சமற்கிருத மொழியில் புலவர்களுக்குக் கூட தலைமுறை மரபு கூறியிருக்கிறார்கள். தமிழர் தாய்வழி மரபு பேணியதால் சொத்தும் தாய்வழியில் பிரிக்கப்பட்டது என்றாலும் அது தலைமுறையைக் குறிப்பிடுவதில்லை. தந்தைவழியே தலைமுறையைக் குறிக்கும். பாட்டனார் குடிப்பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுவதை இன்றும் காணலாம். ஆண் குழந்தையாயின் தந்தைவழிப் பாட்டனார், தாய்வழிப்பாட்டனார் ஆகியோர் பெயர்களை முதலில் சூட்டுவதும் பெண்குழந்தை என்றால் தந்தைவழிப் பாட்டி, தாய்வழிப்பாட்டி ஆகியோர் பெயர்களை முதலில் சூட்டுவதும் படகர் என்னும் மக்களிடை மரபாக இன்றும் நிலவி வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக உலகிலேயே மிகத் தொன்மையான தலைமுறைக் கணக்கீட்டைச் செய்து தொடர்ந்து பின்பற்றியவர்கள் பாண்டிய மன்னர்களே என்பது வரலாற்றுக் குறிப்புகளால் தெரிய வருகிறது. பாண்டியன் கடுங்கோன் கடல்கொண்ட குமரிக்கண்டத்துத் தென் மதுரையில் நிலவிய முதல் தமிழ்க் கழகம் 120 தலைமுறைகளாக நடைபெற்று வந்தது என்பதும் அடுத்த கடல் கோளுக்குப்பின் பாண்டியன் வெண்டேர்ச் செழியனால் நிறுவப்பட்ட இரண்டாம் தமிழ்க் கழகம் 100 தலைமுறைகள் வரை நிலைபெற்றிருந்தது என்பதும் அதற்கடுத்த கடல்

கோளுக்குப்பின் பாண்டியன் முட்டத்துத் திருமாறன் நிறுவிய மூன்றாம் தமிழ்க்கழகம் 50 தலைமுறைகள்வரை நிலைபெற்றிருந்தது என்பதும் இறையனார் களவியல் உரையால் தெரிய வருகிறது. இறையனார் களவியல் உரையில் வெளிப்படத் தலைமுறைகளின் கால எல்லையைக் குறிப்பிடாமல் தலைமுறைகளின் பெருக்கற் பலனாகிய 44 ; 0 ஆண்டுகள் 3750 ஆண்டுகள் 1550 ஆண்டுகள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளன.

ஒரு தலைமுறை எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும் என்பது அந்நூல் உரையில் குறிப்பிடப்படவில்லை. ஒரு தலைமுறை என்பது பாட்டன் பெயரைப் பேரனுக்கு வைக்கும் குறுகிய கால அளவு. பழங்காலத்தில் ஆண்களுக்கு 16 அகவையில் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்தாலும் குமரப்பருவம் முதிர்ந்து பிள்ளைப்பேற்றுக்கு ஆண்மை எய்தும் ஆண்டு $18\frac{1}{2}$ எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு ஆண் குழந்தை பிறந்து குமரனாகி $18\frac{1}{2}$ அகவை எய்தி மணமுடித்து ஆண்பிள்ளை பெற்று அந்த மகனும் வளர்ந்து $18\frac{1}{2}$ ஆண்டெய்தி மணமுடித்துப் பேரக்குழந்தை பிறக்கக் குறைந்தது $(18\frac{1}{2}+18\frac{1}{2})$ 37 ஆண்டுகளாகும். அதாவது ஒருவன் பேரனைப் பெறுவதற்குக் குறுகிய கால அளவு 37 ஆண்டுகளாவது இடைவெளி இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. இதுவே தலைமுறை இடைவெளி (Generation gap) என்று பழந்தமிழர்களால் கருதப்பட்டது. இந்தத் தலைமுறைக்கால இடைவெளியின் தொடர்ச்சி அறுபடாமல் இருப்பதற்காகப் பாட்டனின் பெயர் பேரனுக்கு இடப்பட்டது. பிற்காலப் பாண்டியர்கள் சடையவர்மன், மாறவர்மன் என்றும் பிற்காலச் சோழர்கள் அரிகேசரி, பரகேசரி என்றும் தந்தையும் மகனும் மாறிமாறிப் பெயர் வைத்துக் கொண்டார்கள். இதன் மூலம் பாட்டன் பெயர் பேரனுக்கு மாறி வந்தது. இது இயற்பெயருடன் குடிப் பெயராகச் (Surname) சேர்க்கப்பட்டது. பேரன் என்னும் தமிழ்ச்சொல்லே பெயரன் என்பதன் திரிபாகும். பெயரன்— பேரன் (பாட்டனின் பெயரைக் கொண்டவன்).

பாண்டியன் கடுங்கோன் தொடங்கிய தலைக்கழகக் காலம் 120 தலைமுறைகளை 37ஆல் பெருக்கிவரும் (120 × 37) 4440 ஆண்டுகள் என்பது முற்றிலும் பொருந்தி வருகிறது. இதைப்போல் இடைக்கழகக்காலம் 100 தலைமுறைகளை 37ஆல் பெருக்கினால் (100 × 37) 3700

ஆண்டுகள் நன்கு பொருந்தி வருகிறது. மூன்றாம் தமிழ்க் கழகக் காலம் 50 தலைமுறைகளை 37 ஆல் பெருக்கினால் (50 × 37) 1850 ஆண்டுகள் சரியாக வருகிறது. இறையனார் களவியல் உரையில் கூறப்பட்ட மூன்று தமிழ்க் கழகக் (முச்சங்க) காலம் 37 ஆண்டுகள் கொண்ட தலைமுறைக் கணக்கால் வகுத்துப் பார்த்தாலும் 150, 100, 50 என்று தலைமுறைகளின் எண்ணிக்கை சரியாக வருகிறது.

மூன்றாம் தமிழ்ச்சங்கம் எனப்படும் கடைக்கழகக் காலத்தில் 49 தலைமுறை ஆட்சி புரிந்த இருங்கோவேள் அரச மரபின் கிளைமரபில் வந்த 201 தலைமுறையைச் சார்ந்த குடிவழியினர் இன்றும் நெல்லை மாவட்டத்தில் உள்ளனர். அவர்கள் இருங்கோவேள் மரபில் இத்தனையாவது மரபைச் சார்ந்தவர்கள் என்பதற்கான செப்புப்பட்டயம் வைத்துள்ளனர். இத்தகைய தலைமுறைக் கணக்கு பிற்காலத்தில் மறைந்துவிட்டது என்றாலும் பழங்காலக் குறிப்புகள் நமக்கு அவற்றை நினைவுபடுத்துகின்றன.

சீதக்காதி வரோதயன்

ஓர்தட்டி லேபொன்றும் ஓர்தட்டி
லேநெல்லும் ஒக்க விற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம
லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே; 674

காய்ந்து சிவந்தது சூரிய
காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார்
நெடுங்கண் தொலைவில் பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர்
நெஞ்சம் அனுதினமும்
ஈந்து சிவந்தது மாலசீதக்
காதி இருகரமே; 676

தனிப்பாடல் திரட்டு - முதற்பகுதி
(படிக்காசுத் தம்பிரான்)

பரத்(ந்)த...ஓர் ஆய்வு

ஆய்வுச் செல்வர் பி. கோ. கோவிந்தராசன், க.மு., கல்.மு,
சென்னை.

செந்தமிழ்ச் செல்வி நவம்பர் '92 இதழில் முனைவர் சொ. சிங்காரவேலன் அவர்கள் திருக்குறளின், ''புலவி நுணுக்கம்'' என்ற அதிகாரத்தின் முதல் குறட்பாவில் வரும். ''பரத்த'' என்ற சொல்லுக்குப் புதியதோர் விளக்கம் தந்தார். அவ்விளக்கவுரை பொருத்தமானதன்று என்று முனைவர் மு. ச. சிவம் அவர்கள் ''வளரும் தமிழ் உலகம்'' மார்ச் - 93 என்னும் இதழில் மறுப்புரை தந்துள்ளார். அம் மறுப்புரை ஏற்புடைத்தா? அன்றா? என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1: மறுப்புரை :-

''பரிமேலழகர் சொல்வதையெல்லாம் எப்படியாவது மறுத்துரைப்பதை இக்கால அறிஞர்கள் சிலர் தங்கள் கொள்கையாகவே கொண்டுள்ளனர்'' என்று முனைவர் மு. ச. சிவம் அவர்கள் முனைவர் சொ. சி. அவர்களை மனத்தில் எண்ணிக் குறிப்பிடுகின்றார்.

பி. கோ: கோ. :-

ஓர் உரைக்குத் தேவையான இடத்தில் மறுப்புரை தருவது பண்டைச் சான்றோர் கடைப்பிடித்து வரும் ஒரு மரபாகும். அம் மரபிலிருந்து பரிமேலழகரும் வழுவினார் அல்லர். பல இடங்களுள் ஓர் இடத்தை மட்டும் எடுத்துக் காட்டுக்காக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்:

எ-டு :-

''தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு'' —குறள்: 1103

இதினுள்ள ''தாமரைக் கண்ணான் உலகு'' என்ற ஈற்றடிக்கு மணக்குடவர் ''இந்திரனது சுவர்க்கம்'' என்று உரை கூறியுள்ளார். இதனை மறுத்த பரிமேலழகர், ''செங்கண் மாலுலகம்'' என்று உரை எழுதிப் பின் தம்

பி. கோ. கோ. :-

அக்காலச் சமூகத்தில் குலமகளிரும் விலைமகளிரும் இருந்தனர். பெண்களில் இவ்வாறு இருவகை மகளிர் இருந்தது போலவே ஆடவரிலும் இருவகையினர் இருந்தனர். இதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள ?''

என்ற அடியில் குல மகளிரையும் ''பெண்ணியலார் எல்லாரும்'' என்ற சொற்றொடரில் விலைமகளிரையும் வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார் என்பர் சிலர். அவர்களுள் மு. ச. சி. ஒருவர்.

''கற்பு, நாணம் முதலிய நற்குணங்கள் இன்மையின் பரந்தையர்க்கு உள்ளது பெண்ணியற்கை மாத்திரமே என்னும் கருத்தால், ''பெண்ணியலார்'' என்றார்'' என்று பரிமேலழகர் விளக்கவுரையில் குறிப்பிடுவதிலிருந்து இக்குறட்பாவில் பரத்தையரைத் தான் குறிப்பிடுகிறார் என்பது கண் கூடு என்பது மு. ச. சி. கருத்து.

மு. ச. சி. :-

''வள்ளுவர் தலைவன், பெண்கள் பலரையும் விரும்பும் பரத்தன் அல்லன்; பெண்கள் பலராலும் விரும்பப்படும் பான்மையாளன் ஆவான்''—என்று கூறுகின்றார்.

பரத்தை என்றால் என்ன ? தன் நலத்தை ஆண்கள் பலரும் துய்க்க அளிப்பவள் என்று கூறலாம். ஆண்கள் பலராலும் விரும்பப்படும் பான்மையாளள் பரத்தை ஆகாள் எனலாம். அதேபோலப் பெண்கள் பலரையும் விரும்புபவன்—அவர் நலத்தைத் துய்ப்பவன் பரத்தன். பெண்கள் பலராலும் விரும்பப்படுபவன் பரத்தன் அல்லன் இதில் ஐயமில்லை. மு. ச. சி. யின் கருத்துப்படி.

மு. ச. சி. அவர்களின் கூற்றுப்படி வள்ளுவர் தலைவன் பெண்கள் பலராலும் விரும்பப்படும் பான்மையாளன் என்றால் வள்ளுவர் தலைவன் பரத்தன் அல்லன் என்று ஆகிறது. அப்படி என்றால் வள்ளுவர் தலைவி தலைவனை பரத்த என்று ஏன் கூறுகிறாள் ?

(தொடரும்)

நமது தமிழ்

க. குழந்தைவேலன், க. மு.

வேற்று நாட்டு மக்களது ஆட்சியாலும் வேற்றுப் புலத்தினின்று இங்கு வந்து பரவிய மதங்களாலும் இங்கு ஆளுமை பெற்ற மொழிகளாலும் நம் மக்களுக்கு அம் மொழிகளின்மீது இருந்த அறியாப் பெருவிருப்பாலும் நமது மொழியின் பல சொற்கள் பயன்பாடின்றிப் போய்விட்டன. அப்படிப்பட்ட சொற்கள்தாமும் இருக்கின்றனவா? என்பது கற்றுவல்ல கல்வியாளர் என்பார்க்குக் கூட அறியா ஒன்றாக உள்ளது. அறிந்தாரும் அவற்றைப் பயன்படுத்த மனமிலராய் மறந்து விட்டனர். அவற்றை அறியாமையாலும் பயன்படுத்த விரும்பாமையாலுமே தமிழில் போதிய சொற்கள் இல்லை என அங்கலாய்க்கின்றனர்.

தமிழ் ஒரு பொற்கனிச் சுரங்கம். அறியாமை, பற்றின்மை, ஆள்வினை இன்மை என்ற மட்படிவங்கள் அதை மூடிக் கிடக்கின்றன. பொற் கனிமங்கள் பிற கனிமங்களோடு மறைக்கப்பட்டுக் கிடப்பது போலக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும், நாட்டிலக்கியங்களிலும், மக்கள் வழக்கிலும், இயல்பான எழுச்சிகளிலும் மலிந்து கிடக்கும் தமிழ் பொற் படிமங்களைத் தூசு தட்டி வெளிக் கொணர்ந்து ஏற்ற அணிகலன்கள் பண்ண வேண்டும். அப்போது இல்லை என்ற குறை இல்லை என்றுஆகிவிடும்.

கொரிய நாட்டுச் (வடகொரியா) செய்தியாளர்களிடையே அதன் ஆட்சித்தலைவர் கிம் இல்சங் கூறிய சொற்களை இங்கு நினைவு கூரல் தமிழ் மொழியின் ஆக்கத் திற்கும், தனித்தன்மைக்கும் ஊன்றுகோலாய் உதவும். கொரிய மொழியில் ஏராளமாகச் சீன, சப்பானியச் சொற்கள் மல்கி விட்டன என்று ஒவ்வொரு சொல்லிலும் கவலைப்பட்டு தமது மொழியைத் தனித்தன்மையோடு வளர்க்க வழி கூறும் அவரது குரல் நமது செவி புகுந்து உள்ளத்தை நிமிண்டுகிறது.

அவற்றுட் சில வருமாறு :

''நாம் நமது மொழியைப் பற்றிப் பெருமைப்பட வேண்டும். அதனை நேசிக்க வேண்டும்''

''தற்பொழுது நம் மொழியில் கலந்துள்ள, நமது மொழியையே மூழ்கடித்துவிட்ட சில சொற்கள் நம்முன் ஒரு பெரிய வினாவாக நிற்கின்றன.''

''அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கேற்ப நமது சொல் வளமும் பெருக்கப்படல் வேண்டும். ஏராளமாகச் சொற்களை உருவாக்க வேண்டும். ஆனால் அவ்வாறு புதிய சொற்கள் உருவாக்கப்படும்பொழுது நமது மொழியின் வேர்ச் சொற்களில் (மூலம்) இருந்தே உருவாக்கப்படல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்''.

''சுருங்கக் கூறின், ஒரு பொருளை, குறிக்க நமது மொழிச் சொல் ஒன்றும், நம்மிடையே வழக்கில் உள்ள சினச்சொல் ஒன்றுமாக இரு சொற்கள் இருக்குமாயின் இயன்றவரை முதற்சொல்லையே (சொரியம்) பயன் படுத்த வேண்டும்.........''

சிந்தனை இன்றிச் சினக் கூறுகளிலிருந்து புதிய சொற்களை உருவாக்காமல் இயன்றவரையிலும் நமது மொழி வேர்ச்சொற்களைக் கொண்டே நமது மொழியை வளப்படுத்தி மேன்மையுறச் செய்ய வேண்டும்.''

''மேலும், அயன்மொழிச் சொற்கள் வடிகட்டப் படல் வேண்டும், இயன்றவரையில் அயன்மொழிச் சொற்கள் வருமிடங்களில் அதற்கு மாற்றாக நமது மொழிச் சொற்களையே பயன்படுத்தல் வேண்டும்''.

மொழி இனம் பற்றிய இவரது பல கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன.

இந்தக் கருத்துக்களை மனங்கொண்டு பாருங்கள். இந்த வகையில் செயல்பட்டால் தமிழில் போதிய சொற்கள் இல்லை என்று கூற நா எழுமா? இருக்கின்ற சொற்களை வழக்கிற்குக் கொண்டு வந்தாலே நமது தமிழ் என்பது விழுக்காடு தனித்தன்மை பெற்றுவிடும். அன்றாடம்

அறிவியலுக்கு வேண்டிய இருபது விழுக்காட்டுச் சொற்களை நம்மால் ஆக்கிக் கொள்ள முடியும்.

இந்த எண்ணங்களின் முதற்படியாக இன்றைய வழக்குக்கு இன்றியமையாதனவும், நம்மிடையே பயின்று மறைந்துள்ளனவும், கால இடச்சூழல்களால் இயல்பாய் எழுந்தனவும், போலி நாகரிகத்தால் மூலை முடுக்குகளில் மட்டும் தம் உயிர் மூச்சைக் கையிற் பிடித்துக் கொண்டு இன்னனவுமாகிய சொற்களை மனங்கொளத் தக்க நிலையில் ஒரு தொடராய் எழுதுதல் நலமெனத் துணிந்ததன் விளைவே இத் தொடர். போலிப் பெருமைகளையும், பொய்ம்மைப் பற்றுக்களையும் நீக்கிவிட்டு, நமக்கு நம் மொழியை ஏற்றுக் கொள்ளும் மனம் மட்டும் இருந்தால் போதும். வழி தானாகப் பிறக்கும்.

இலக்கியச் சிறப்பு

விழுமிய மொழியின் தன்மை எத்தகையது என்பதைப் பற்றியும், அதனோடு ஒட்டிக் காணும் வேறு ஐரோப்பிய மொழிகள் எவ்வாறு உள்ளன என்பதைப் பற்றியும் சிறந்த கட்டுரை எழுதிய Jenisch என்பவரைப் பெர்லின் கலைக் கழகம் பரிசளித்துப் பெருமைப்படுத்தினாலும் அதை ஏற்றுக் கொண்டு அவர் கொள்கைகளை உடன்படுவோர் இல்லை. உயர்ந்த இலக்கியங்கள் உயர்ந்த மொழியில்தான் பிறக்கும் என்று உடன்படும் அறிஞரும் இன்று இல்லை. பண்பாடு இல்லாத மொழியைப் பேசுவோரின் கூட்டத்தில் உயர்ந்த கருத்துக்கள் கொண்ட புலவர்கள் பிறப்பதும் உண்டு என்று அறிஞர் கருதுகின்றனர். அந்தப் புலவர் இயற்றிய நூலால் அந்தச் சிறு மொழிக்கு மேம்பாடு ஏற்படுவதும், உண்டு. ஒரு மொழியின் இலக்கிய வளத்தை ஒட்டி அதன் மொழித் தன்மையைச் சீர்தூக்குதல் பொருந்தாது.

மொழி வரலாறு, மு. வ. பக். 244.

முருகவேள் பன்னிரு திருமுறை

திரு. டி. எஸ். வேலையா, சென்னை.

1871ஆம் ஆண்டில் வடக்குப்பட்டு சுப்பிரமணியப் பிள்ளை திருப்புகழ்பா ஒன்று சிதம்பரத் தீக்ஷிதர்கள் தங்களைப்பற்றிப் பாராட்டாக வருவதைக் கூறக் கேட்டார்:

வேதநூன் முறைவழுவா மேதினம்
வேள்வியா லெழில்புனை மூவாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே
(தாதுமா மலர் முடியாலே எனத் துவங்கும் பாடல்)

பாடலின் இனிமை அவர் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. திருப்புகழ்ப் பாக்கள் பதினாறாயிரம் என்பது செவிவழிச் செய்தி. ஆயினும் அவற்றுள் மிக மிகச் சிலவே அச்சிலிருந்தன. அவையும் திருத்தமான பதிப்பில் இல்லை. பதினாறாயிரத்தில் ஓர் ஆயிரமாவது ஏடுகளைத் தேடித் திருத்தமான பதிப்பாக வெளியிட வேண்டுமென்னும் ஆவல் அவருக்கு ஏற்பட்டது. தேடிக் கிடைத்த ஓலைச் சுவடி ஏடுகளை மஞ்சக்குப்பம் சிவசிதம்பர முதலியார் என்னும் தமிழ்ப்புலவர் உதவியுடன் பிரதி செய்யத் தொடங்கினார். 1876ஆம் ஆண்டு தொடங்கிய பணி 1896ஆம் ஆண்டில் திருப்புகழ் நூல் வடிவில் முதல் பகுதியாக வெளிவர உதவியது. மேலும் பல பாக்கள் அவ்வப்போது முருகன் அடியார்கள் தந்து உதவினர். சுப்பிரமணியப் பிள்ளையின் மூத்த மகன் சண்முகம் பிள்ளையும் இரண்டாவது மகன் செங்கல்வராயப் பிள்ளையும் தகப்பனாருக்கு உதவியாயிருந்தனர். நல்ல முறையில் திருப்புகழை வெளியிட்ட பெருமையுடன் சிவஸ்தலமஞ்சரி என்னும் நூலை வெளியிட்ட பெருமையும் சுப்பிரமணியப் பிள்ளைக்கு நிலையான புகழைத் தந்தன.

சுப்பிரமணியப் பிள்ளையின் மறைவுக்குப் பிறகு சண்முகம் பிள்ளையும் செங்கல்வராயப் பிள்ளையும் திருப்புகழ், சிவஸ்தல மஞ்சரி இவற்றின் மறுபதிப்புக்களில் ஈடுபட்டனர். மூன்றாம் தலைமுறையாகச் சண்முகம் பிள்ளையின் மகன் வ. சு. மயிலேறும் பெருமாள் தம் சிறிய தகப்பனாருக்கு உதவியாயிருந்ததுடன் சிவஸ்தலமஞ்சரியில் தலங்களை வரைபடங்களுடன் வெளியிடவும் வழி செய்தார்.

இதற்கிடையில் சைவப்பன்னிரு திருமுறைகளைப்போல முருகன் புகழ் நூல்களையும் பன்னிரண்டாக அமைத்து வெளியிடும் எண்ணம் செங்கல்வராயப் பிள்ளைக்கு ஏற்பட்டது.

ஒன்று முதல் ஏழு திருமுறைகள் : ஆறுபடை வீட்டுப் பாக்களுடன் பிற திருப்பதிகளின் திருப்புகழ்

எட்டாம் திருமுறை : கந்தர் அலங்காரமும் கந்தர் அந்தாதியும்

ஒன்பதாம் திருமுறை : திருவகுப்பு

பத்தாம் திருமுறை : கந்தர் அனுபூதி

இவை பத்தும் அருணகிரிநாதர் பாடியவை.

பதினோராம் திருமுறை : பழைய முருகனடியார்கள் பாடியவற்றினின்றும் திரட்டப் பெற்றன.

பன்னிரண்டாம் திருமுறை : அண்மைக்காலத்து வரகவி சொக்கலிங்கம் பிள்ளை முருகன் அடியார்களைப் பற்றிப் பாடியவை

முருகவேள் பன்னிரு திருமுறையின் முதல் பதிப்பை வெளியிட்டவர்கள், திரு. கல்யாண சுந்தரம் ஐயரும் அவர் மனைவி மீனாட்சி அம்மையாரும் ஆவர்.

பாடல் பெற்ற 275 தலங்களுள் பதினெட்டைத் தவிர 257 தலங்களைச் சண்முகம் பிள்ளை அவர்கள் நேரில் தரிசித்து, 'சிவஸ்தலமஞ்சரி' மறுபதிப்பினைத் தம் இளவலுடன் செய்தனர்.

நான்காம் தலைமுறையாகச் சுப்பிரமணியப் பிள்ளையின் மூத்த பிள்ளையின் மகன் மயிலேறும் பெருமாள் அவர்களின் மகளிர் பார்வதி வேலையாவும், மகேஸ்வரி கிருஷ்ணனும், தொண்டை நாட்டுச் சிவத்தலங்கள் மட்டும் ஒரு பகுதியாக வெளியிட்டு, காஞ்சி பரமாச்சாரிய சுவாமிகளிடம் சமர்ப்பித்தனர்.

செங்கல்வராயப் பிள்ளையின் சிறந்த பணியைப் பாராட்டி அவருக்குத் தணிகைமணி என்னும் பட்டம் பழநியில் 1943ஆம் ஆண்டில் திருப்புகழ் மாநாட்டில் அளிக்கப் பெற்றது. பிள்ளை அவர்கள் சைவத் திருமுறைகளில் ஒன்பதுக்கு ஒளிநெறி என்னும் தலைப்பில் சொல்லடைவும் (Concordance) ஒளிநெறிக் கட்டுரை என்னும் தலைப்பில் திருமுறைக் கருத்துக்களைத் தொகுத்தும் வெளியிட்டதைப் பாராட்டி மதுரை-காமராஜர் பல்கலைக்கழகம் அவருக்கு Doctor of Literature என்னும் கௌரவப் பட்டம் அளித்தது.

1992 நவம்பர் முதல் தேதியன்று தணிகைமணி அவர்களின் மூத்த மகள் ஞானபூரணியும் மருமகன் டாக்டர் மத்வநாத்தும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்குப் பண உதவி தந்து கழகத்தாரும் இதில் பங்குக் கொண்டு முருகவேள் பன்னிரு திருமுறையின் மறுபதிப்பு நான்குப் பகுதிகளாக வெளியிடப் பெற்றது. பிள்ளை அவர்களின் இளைய மகள் டாக்டர் சசிவல்லபியும் மகன் தணிகை நாயகனும் மறுபதிப்பு வெளிவரப் பெரிதும் உதவினர்.

கண்கவர் அச்சில் மூலம் ஒருபுறமும், உரையுடன் அடிக்குறிப்புக்களும் சேர்ந்து மறுபுறமும் வெளியிட்டிருப்பது நூற்பதிப்புக் கழகத்தின் அச்சுக் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. கழகத் தலைவர் முத்துக்குமாரசாமி அவர்கள் பாராட்டுக்கு உரியவர்.

பிற விவரங்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

செய்திகள்

முனைவர் ந. சஞ்சீவி அவர்களின் மணிவிழா நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு 1991-1992

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக் கருத்தரங்க அறையில் திரு. மா. சு. சம்பந்தன் அவர்கள் 12-4-1993 பிற்பகல் 3 மணிக்கு ''தமிழக வரலாற்றில் இதழ்களின் பங்கு'' என்றும் 13-4-1993 பகல் 11 மணிக்கு ''இதழ்களால் ஏற்பட்டுள்ள இலக்கியப் பங்களிப்பு'' என்றும் 15-4-1993 இதழ்களால் கலை பண்பாட்டு வளர்ச்சி'' என்றும் பேசினார். முனைவர் பொற்கோ அவர்கள் மூன்று பேச்சுக்கும் தலைமை தாங்கினார்.

மணப்பாறையில் திருக்குறள் முழுநிலவுத் திருவிழா

மணப்பாறை திருக்குறள் பயிற்றகத்தின் சார்பில் திருக்குறள் முழுநிலவுத் திருவிழா மணமகிழ் மன்றவளாகத்தில் நடைபெற்றது. திருக்குறள் இசைப் பாடலைச் சென்னை பொன். தமிழண்ணல் பாடினார்.

திருக்குறள் பயிற்றக நிறுவனர் திருக்குறள் நாவை சிவம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

வாழ்த்து மேடை நிகழ்ச்சிக்கு மனமகிழ் மன்றத் தலைவர் இ. வெ. அரங்கசாமி தலைமையேற்றார். உள்ளூர் அரசியல் இயக்கப் பொறுப்பாளர்கள் முன்னிலை ஏற்றனர். வ. பார்த்தசாரதி, து. வெள்ளமுத்து, முகமது ஈசாக் வாழ்த்துரை வழங்கினர்.

திருக்குறள் கவனக மேடை நிகழ்ச்சிக்குக் குழித்தலை தமிழ்ப் பெரியார் இளமுருகு பொற்செல்வி தலைமையேற்றார். துறையூர் ஞானச்செல்வன், நான்கு வயது சிறுவன் த. திருமூலநாதன் திருக்குறள் நினைவுத் திறம் காட்டினார். புலவர் திருநாவுக்கரசு, மருத்துவர் முகமது சுல்தான், ஆசிரியர் முருக சடாட்சரம், தாமரை முத்துராமன்

முதலியோரும், பார்வையாளர்களில் சிலரும் கேட்ட வினாக்களுக்கு விடை கூறி மகிழ்வூட்டினார்.

முழுநிலவுத் திருக்குறள் பொழிவு மேடைக்கு ஈரோடு குறளாயப் புலவர் மீ. தங்கவேலன் தலைமையேற்றார். மதுரை இலக்கியச் செம்மல் இரா. இளங்குமரனார் திருக்குறள் சிறப்புரைத்தார். திருச்சி பேராசிரியர் அ. கோபிநாதன் நாட்டுப்புறப் பாடல் இசை நயம் உரைத்தார். தாமரை இளவழகன் அறிமுகம் செய்ய திரு. இராசகோபாலன் நன்றி கூறினார்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. வி. குமாரசாமி அவர்கள், ரியூனியன் தீவு.	10 00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர், ஓய்வு)	5 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
திரு. A. T. A, ஈஸ்வர அடிகளார்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா.	25 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79.	5 00
திரு. ஆ. தி. ஆ. ஈசுவரனார் (மகன் திருமணத்திற்காக)	25 00
திரு. திருவள்ளுவர் பச்சையப்பன்	5 00
திரு. G. S. சுந்தரம் அவர்கள், கோலாலம்பூர்	50 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிட்.

கழகப் புதிய வெளியீடுகள்

தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும்

கோயிற் கலைச்செல்வர் தி. இராசமாணிக்கம் 25 00

சிவனும், முருகனும், தேவியும் மட்டுமன்று; ஐயப்பனும், சித்திரகுப்தரும், சகலகலாவல்லியும், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரும் இவர் கண்களிலிருந்து தப்பவில்லை. போசளர் (கோசலர்), சாளுக்கியர் கட்டிய கோயிற் கலைச் செல்வங்களும், தூங்கானை மாடம், கரக்கோயில்களின் அமைப்புகளும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் போன்ற பகுதிகளும் படிக்கத்தகுந்தவை. பின்பகுதி சிறப்பாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தமிழகக் கோயில்கள், பின்னிணைப்பு போன்ற பகுதிகள் கோயிற்கலையை அறிய உதவுகின்றன. கோயிற்கலையையும், தெய்வங்களின் பெருமைகளையும் இதைவிடச் சிறந்த நூல் விளக்கமாக வெளிவரவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் 40 00

ஆரியம் கலவாத தமிழ்ப் பண்பாடு இருக்கின்றதா? என்று தமிழ் மக்களே வினவத் தொடங்கிய காலத்தில், அத்தகையதொரு சிறந்த பண்பாடு சிறந்தோங்கி வளர்ந்துள்ளது என்பதைச் சான்றுகளுடன் நாகரிகம், சமயம், கலைகள், பொழுதுபோக்கு என்ற தலைப்புகளில் எழுதியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூலை வரவேற்றுத் தம் பெருமையை பெருமிதத்துடன் படித்துப் பயனடைய உதவுகின்ற இந்நூலை எல்லோரும் வரவேற்க வேண்டும். சிறந்த தூயதமிழ் நடையையும் பாராட்டிப் பயன்பெறுவார்கள் என்பதும் எங்கள் எண்ணமாகும்.

தேசிய இலக்கியம் பெரியபுராணம்

அ. ச. ஞானசம்பந்தன் 30 00

பதினான்கு பகுதிகளாக இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொன்றும் சிந்தனைக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. எடுத்துக்கொண்ட தலைப்புக்கு ஏற்பச் சேக்கிழார் காப்பியப் புலவராகும் தகுதியையும், பரந்துபட்ட மனப்பாங்குடைய தமிழ்த் தேசியத்தைப் பாராட்டியும், இலக்கிய மாண்புகளையும், பெரியபுராண பாத்திர மாண்புகளையும், குறிப்பாக ஞானசம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசரின் குணநலன்களை விளக்கும் திறமும் படித்து இன்புறத் தகுந்தவை. ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டிய நூல் என்பதை இந்நூலைப் படித்தவர்கள் சொல்லாமலே புரிந்துகொள்வார்கள்.

பதிவு எண் : M / 4899 MAY 1993

Asian Educational Services

(C-2-15, SDA, New Delhi-110016.)

Branch : No. 6, Sripuram First Street, Royapettah, Madras-600 014

Phone No. 866040

A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M.		165	00
English Tamil Dictionary —WINSLOW		165	00
Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature — SINGARAVELU MUDALIAR		165	00
Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS	GB	50	00
	HB	35	00
	PB	20	00
Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI		165	00
A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI		145	00
Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN		195	00

Books can be had of :

The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, Ltd.

154, T. T. K. Road, Madras-18.

Branches :

79, Prakasam Salai (Broadway), Madras-108.

Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1.

Kumbakonam-1 Trichirappalli-2. Salem-1.

அப்பர் அச்சகம், சென்னை-108

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-௬௭ பரல்-௧௦ ஜூன் 1993

திருவள்ளுவர் ஆண்டு-௨௦௨௪ வைகாசி



"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் **வ. சுப்பையா பிள்ளை**

இதழாசிரியர் குழு

முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிட்.,

உள்ளுறை

	பக்கம்
இலக்கிய நாட்டம்	௲௬௧
பக்தி இலக்கியக்கொள்கை - வளர்ச்சி நிலைகள்	௲௬௫
பரத்(ந்)த...ஓர் ஆய்வு	௲௬௬
"சேரர் தலைநகர் வஞ்சி கொங்கு நாட்டுக் கரூரே"	௲௭௰
இலக்கியத் திறனாய்வும் இந்திய மொழிகள் இலக்கியங்களும்	௲௭௭
மாமயில் ஊர்பவன் சுடர்மதி அணிந்தோன்	௲௮௫
அறிகரியாளர்	௲௮௮
உலக மொழிகளில் மாட்டின் பெயர்கள்	௲௯௰
செய்திகள்	௲௯௬
ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள் மறைவு	௲௯௮

முருகவேள் பன்னிரு திருமுறை

—டாக்டர் தணிகைமணி

வ. சு. செங்கல்வராயப் பிள்ளை 940 00

அருணகிரிநாதப் பெருமான் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதும், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் மற்றும் திருமுருகாற்றுப் படை, சேய்த்தொண்டர் புராணம் முதலியவைகளை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய முறையில் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை உரை வகுத்துள்ளார்கள்.

திருப்புகழ் மணத்தைப் பரப்புவதற்காக அனைத்துத் தொகுதிகளும் கணிப்பொறி மூலம் தொகுக்கப்பெற்று ஒருங்கே கிடைக்கக் கழகவழி வெளிவந்துள்ளன.

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு ௨௦௨௪ - வைகாசி

ஜூன் - 1993

சிலம்பு-௬௭, பரல்-௧௦

29 ஜூன் 1993
சென்னை-600 008.

இலக்கிய நாட்டம்

மூவாயிரம் ஆண்டுகளாயும் மூவாது விளங்கும் தமிழ் இலக்கியம் இன்று பயில்வார் குறைந்து பெருமை சிதைந்து விளங்குகிறது. அச்சுக் கலையின் பயனாய் அச்சில் ஏறாது ஏட்டில் உறங்கிக் கிடந்த பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அச்சுப் பொறி ஏறித் தமிழ் மக்களை மட்டும் அல்லாது உலக அறிஞர்களையும் வியக்க வைத்தன.

ஆனால் இந்த நூற்றாண்டின் இறுதியில், தமிழ் இலக்கியம் அச்சுத்தேர் ஏறி 200 ஆண்டுகளில், தமிழ் மக்களிடையே திகட்ட வைத்து விட்டது. கடை விரித்தோம்; இங்குக் கொள்வாரில்லையென்று கூறுமளவிற்குப் பழந்தமிழ் நூல்கள் மக்களிடையே பெற்று வந்த வரவேற்பு குறைந்து வருகின்றது.

சென்ற நூற்றாண்டில் தமிழ் நூல்கள் அச்சாகத் தொடங்கினும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெரு, ஐஞ்சிறு காப்பியங்கள், தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள், பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் முதலான அனைத்தும் அச்சாயின. இந்த நூற்றாண்டின் இடையில், நாடு விடுதலையடைவதற்குச் சற்று முன்னும் பின்னும் குறிப்பாக 1930 முதல் 1960 வரையிலான முப்பதாண்டுக் காலம் தமிழ்ப் பெரு நூல்கள் நல்வரவேற்பைப் பெற்றன. தமிழ் மக்கள் அனைவரும் பழந்தமிழ் இலக்கியங்களில் தோய்ந்து இன்பமடைந்தனர்; அதற்குப் பின் தமிழார்வம் குறைந்து இன்று மிகத் தாழ்ந்த நிலைக்கு வந்துள்ளது; இந்த நூற்றாண்டு

கழிந்து செல்ல இன்னும் ஏழாண்டுகள் உள்ளன. 21ஆம் நூற்றாண்டின் தொடக்கம் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம் போல இருக்குமோ என்ற அச்சம் தலை தூக்கியுள்ளது.

இடைப்பட்ட நாற்பதாண்டுகள் தமிழிலக்கியம் தலை தூக்கியிருந்ததற்குக் காரணம் தலைசிறந்த தமிழறிஞர்கள் நம்மிடையே வாழ்ந்துவந்ததே எனலாம். ஆறுமுக நாவலர், தாமோதரனார், உ. வே. சா., மறைத்திரு மறைமலையடிகளார், திரு. வி. க., பாட்டுக்கொரு புலவனான பாரதியார், பண்டிதமணி, நாட்டார், கா. சு. பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீ., ஏ. சி. செட்டியார், பாவேந்தர் பாரதிதாசன், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்ற பேரறிஞர்கள் நம்மிடையே வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்களிடையே தமிழுணர்வும் தமிழ்ப் பற்றும் தலைதூக்கியிருந்த காலம். இலக்கியச் செல்வங்களை மக்கள் விரும்பிப் படித்த காலம்.

சங்க இலக்கியங்கள் அனைத்தும் புதிய பதிப்புகளும் புத்துரைகளும் பெற்றன. தொல்காப்பியத்தின் பழைய உரைகள் அனைத்தும் வெளியாயின. திருக்குறள் பழைய உரைகளையும் புதிய உரைகளையும் பெற்றது. மக்கள் விரும்பிப் படித்த கம்பராமாயணம், வில்லிபாரதம் போன்றவை விளக்கமான உரையுடன் வெளிப்போந்தன. சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம் சிவக்கவிமணியவர்களால் மிக விரிவான உரை பெற்றது. தரமான சிற்றிலக்கியங்களான பரணி, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், போன்ற அனைத்தும் உரையுடன் உலா வந்தன. இந்த இலக்கியங்களைப் பரப்ப இலக்கிய மாநாடுகள் எழுச்சியுடன் நடைபெற்றன. அக்கால நிலைக்கேற்ப நூல்கள் விலை வைக்கப் பெற்றிருந்தன. மக்கள் விலை கொடுத்து வாங்கிப் படித்து இலக்கியங்களைக் காப்பாற்றினர்.

ஆனால் இன்று ஒரு சிறந்த நூலை வெளியிடுவதற்குப் பெரிய திட்டம் தேவைப்படுகின்றது. தாள் விலையின் கட்டுப்பாடற்ற ஏற்றம்; அச்சுக் கூலி உயர்வு போன்றவற்றால் ஒரு நூலை அச்சிடுவதற்கு ஏராளமான பொருள் தேவைப்படுகின்றது. பெரு முதலீடு செய்து அச்சிட்டாலும் வாங்குவாரில்லை. நூல்களை வரவேற்றுப் படிப்பாருமில்லை. தமிழ்ப் புலமையுடன் வறுமை என்றென்றும்

இணைந்தேயிருக்கிறது. சங்க கால முதல் இந்தக் காலம் வரை புலவர்களும் வறுமையும் இணை பிரியாதுள்ள நிலை.

பொருள் வசதியிருப்பவர்க்குத் தமிழ் நூல்களின்மேல் நாட்டமில்லை. தமிழ் நூல்களைப் படிக்க வேண்டுமென்ற விருப்பமுடையவர்களிடம் கூடுதலான விலை கொடுத்து நூல்களை வாங்கப் பொருள் வசதியில்லை. இன்றுள்ள தமிழாசிரியர்களை இவர்களுடன் இணைக்கக்கூடாது. வறுமை வந்து ஒட்டிக் கொள்ளுமோ என்று அவர்கள் தங்களிடையே புலமையை நெருங்க விடுவதில்லை. தமிழகத்தில் நூறு புலவர்கள் இருந்த காலத்தில் 1000 படிகளைத் துணிந்து அச்சிட இன்று பல்லாயிரக்கணக்கான பல்கலைக்கழக, கல்லூரி, பள்ளித் தமிழாசிரியர்கள் அனைவரும் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள். மிக வசதியான மாத ஊதியம் பெற்று வாழ்கின்ற சூழலில் 'பெரிய புராணம்' போன்ற நூல் வெளியீட்டுத் திட்டத்திற்கு நூறு படிகள் கூட முன்பதிவுத் திட்டத்தில் சேராத நிலை. பதிந்துள்ள நூறு பேரில் தமிழ் ஆசிரியர்கள் என்பது பத்துப் பேர் கூட இல்லை. தமிழால், தமிழுக்காக, தமிழாகவே வாழும் தமிழாசிரியர்கள், ஏன், தமிழிலிருந்து இவ்வளவு தொலைவு தள்ளி நிற்கிறார்கள் என்பது யாருக்கும் விளங்காத நிலை.

எல்லாம் எனக்குத் தெரிய வேண்டும் என்றிருந்த தமிழ்ப் புலவர்கள் வேறு. வறுமையிலும் கூடத் தங்களுக்கென்று நூலகம் வைத்திராத புலவர்கள் இல்லை. குறைந்தது திருக்குறள், தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற நூல்களையாவது வைத்திருந்தனர். அடுத்தவேளை உணவுச் செலவுக்கு அஞ்சல்காரர் பணவிடை ஏதாவது கொண்டு வருவாரா என்று காத்துக் கிடந்த மறைமலையடிகளார் கூட ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அரிய நூல்களைத் தொகுத்து வைத்திருந்தார். இன்றோ மாதந்தோறும் மன நிறைவான ஊதியம் பெறும் நம் தமிழன்பர்கள் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கவே அஞ்சுகின்றனர், கூசுகின்றனர்.

தமிழ் மக்களிடையேயும் ஆர்வமும் தமிழ் உணர்வும் மிகமிகக் குறைந்து வருகின்றன. ஐந்து பேர் சேர்ந்து சிற்றுண்டி சாலைக்குச் சென்றால் நூற்றுக்கு மேல் செலவு, அவர்களே திரைப்படம் சென்றால் நூறுக்குமேல் செலவு, பட்டுப் புடவையென்று வாங்கினால் மூவாயிரம் செலவு. இவையெல்லாம் விலை கூடுதல் என்று தவிர்க்கப்பட

-வில்லையே: தமிழ் நூல்கள் மட்டும் தவிர்க்கப்படுகின்ற சூழல் ஏன்?

விலை கொடுத்து வாங்காவிட்டாலும் நூலகங்களுக்குச் சென்று இந்த நூல்கள் வேண்டுமென்று கேட்டுப் படித்தாலும் பரவாயில்லை. கேட்பாரில்லை; கொள்வாரில்லை; சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஐயா அவர்கள் அடிக்கடி கூறுவது போல 'சங்க நூல்கள் அனைத்தும் கற்புக் கெடாத நூல்கள். அவற்றை யாரும் தொட்டதேயில்லை,

பொதுமக்களும் வாங்குவதில்லை. தனியார் நூலகமும் வாங்குவதில்லை. யாரை நம்பி இந்த நூல்களை வெளியிடுவது? பழந்தமிழ் இலக்கியங்களைத் தமிழர்கட்குக் காப்பாற்றித் தந்த தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் பதிப்பகம் மூடப் பெற்று விட்டது: கம்பனையும் வில்லியையும் காத்துத் தந்த வை. மு. கோ. பதிப்பகம் மூடப் பெற்று விட்டது. பார் முழுவதும் 'பார்'கள் திறந்து வைக்கப் பெறுகின்றன. திறக்க ஆணை பிறப்பித்த அரசே அவற்றை மூட வேண்டுமென்று ஆணையிட்டாலும் 'கூடாது; அவை தொடர்ந்து நடைபெற புது உரிமங்களை வழங்கவும்' என்று உயர்நீதி மன்றமே ஆணையிடுகிறது.

அமெரிக்காவில் வாழும் மகன் தாயகம் வருகிறார்; தந்தையிடம் என்ன வாங்கிவர வேண்டுமென்று கேட்கிறார்: ஒன்றும் வேண்டாம். ஒரே ஒரு 'பொத்தல்' மட்டும் போதும் என்கிறார், அந்த ஒரு பொத்தலின் விலை ரூ. 4000. அப்படிக் கேட்பவர் தமிழறிஞர்தாம், அப்படிக் கேட்கக் காரணமென்ன? தம்மிடமிருந்த பொருளையெல்லாம் தரமான தமிழ் நூல்களை அச்சிட்டுப் பொருளை இழந்த காரணத்தால் அந்தக் கவலையைப் போக்க அந்தக் 'கவலையில்லாத மனிதர்' கேட்கிறார்; தமிழுக்கு இந்த நிலை தேவையா?

இச்சூழலில் பழந்தமிழ் நூல்களை எப்படி அச்சிடுவது? இரண்டு இலக்க ரூபாயில் ஒரு பொது நிறுவனமே புத்தக வெளியீட்டுக்கென்று தொடங்கியது அந்தக் காலம், ஒரு நூலை வெளியிடுவதற்கே மூன்று இலக்க ரூபாய் தேவைப்படுவது இந்தக் காலம். எப்படி தமிழ் வளரும்? இலக்கிய நாட்டம் எவ்வாறு ஏற்படும்? யாரோ ஒரு பேதை எதுவோ சொன்னானென்று வெகுண்டெழுந்த பாரதியே! நீ இல்லையே இன்றுள்ள நிலையைக் காண! அந்தப் பேதை சொன்னது ஒருவேளை உண்மையாகி விடுமோ?

பக்தி இலக்கியக் கொள்கை—வளர்ச்சி நிலைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

(முன்னிதழ் கூஉஅ ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிகமுறையின் பரிணாமம்:

பதிகம் எனும் அமைப்பு முறையானது பதிற்றுப்பத்தில் தான் முதற்கண் காணப்படுகிறது. பத்துப் பாக்களின் தொகுதியைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளும் வகையில் இப்பதிகம் அமையவில்லை; ஒவ்வொரு பத்துப் பாடல்களுக்கும் தொகுப்புப் பின்னுரையாக இப்பதிகம் அமைந்துள்ளது; இப்பதிகத்தின் முதற்பகுதி செய்யுளிலும், பிற்பகுதி உரைநடையிலும் அமைந்துள்ளது. இப்பதிக அமைப்பைப் பின்பற்றியே சோழ மன்னர்கள் தங்கள் கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தியைச் சேர்த்தனர் எனலாம்;

இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை இவற்றில் காணப்பெறும் பதிகங்கள் முகவுரை, பாயிரம் என்ற பொருளில் தொடக்கத்தில் அமைந்துள்ளன. பாடல்களின் தொகுப்புப் பின்னுரையாக அமைந்த பதிற்றுப் பத்து மரபு இரட்டைக் காப்பியங்களில் தொகுப்பு முன்னுரையாக மாற்றம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பத்துப் பாக்களால் பக்தி அடிப்படையில் அமைந்தவற்றைப் பதிகம் எனக் கூறும் இலக்கிய வழக்கு காரைக்காலம்மையார் காலம் முதலாகத் தமிழில் நிலைபெற்றிருத்தல் வேண்டும் எனக் கருத முடிகின்றது. காரைக்காலம்மையார் 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்' என்ற பெயரில் இரு பதிகங்கள் பாடியுள்ளார். பயன் கூறும் பாடலான திருக்கடைக்காப்புச் செய்யுளை நீக்கிவிட்டால், எஞ்சியுள்ள பத்துப் பாடல்களே இங்குப் 'பதிகம்' என்ற இலக்கிய வகையாகக் குறிக்கப்படுகின்றன. மூவர் அருளிய தேவாரத்தில் பத்துப் பாக்கள் கொண்ட பா அமைப்பு 'பதிகம்' என்று அழைக்கப்பட்டது. எனினும், பத்துப் பாக்களில்கூடச் சில பாக்கள் குறைந்தும், சில பாக்கள்

மேற்பட்டும் காணப்படுகின்றன; அவையும் 'பதிகம்' என்றே வழங்கப்படுகின்றன; எனவே பத்துப்பாடல்கள் கொண்ட ஓர் அமைப்பு முறையானது இலக்கியங்களில் பதிகமாகப் பயிலப்பட்டு வந்தது. இதுவே பின்னர் ஒரு இலக்கிய வகையாக மாறி வளர்ந்ததற்கு ஓர் அடித்தளமாய் இருந்தது. இப் 'பதிகம்' என்பதே பின்னர்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுப் பல பதிக இலக்கியங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது எனலாம்; பத்து என்ற எண் அடிப்படையில் பதிகம் அமைந்த போதிலும் பின்னர் எண்ணிக்கையை விட்டுவிட்டுப் பக்தி தொடர்பாக, பாடல்கள் தொகுப்பாக வருமாயின் அவையும் பதிகம் எனப்பட்டன. நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் பதிகம் என்பது இறைவனைப் போற்றிப் பாடிய பத்துப் பாக்களின் தொகுதியாக வழங்கியது;

பதிகம் என்னும் இலக்கிய வடிவம் பிற்காலத்து வந்த குமரகுருபரர், சிவப்பிரகாசர், தாயுமானவர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், சுந்தப்ப தேசிகர், வடலூர் இராமலிங்க வள்ளலார், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பாம்பன் சுவாமிகள் முதலிய பெரியோர் படைப்புக்களிலும் பெரிதும் இடம் பெறக் காணலாம்;

பாசுரம், பதிகம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்று சிலர் கொள்வர். ஆயின் பாசுரம் என்பது செய்யுட்கும், பதிகம் என்பது அச் செய்யுள் பத்துக் கொண்ட ஓர் தொகுதிக்கும் பெயராதல் வேண்டும்.

"நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும் பரவு பீசனை யேத்துபாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்"

என்பர் திருஞானசம்பந்தர் (தேவாரம் 8; 54, 22); இப் 'பதிகம்' என்பதே பக்தி இலக்கியங்களுக்கு உரியதாகப் பிற்காலத்தில் வழங்கப்பட்டது. எனவே, 'பதிகம்' என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம். இறைவன்மீது பக்தி அடிப்படையில் பாடப்பெற்றிருத்தல் வேண்டும்; பாடல் எண்ணிக்கைக்கு அளவில்லை; பதிகப்பலன் கூறும் 'திருக்கடைக் காப்புப் பாடல் இருக்கவேண்டுமென்ற விதி தேவையில்லை; ஆயினும், இறுதியில் திருக்கடைக் காப்புக் கூறலாகிய பாயிரம் உரைத்தலால் 'பதிகம்' எனப் பெயர்

பெற்றதாகக் கருதுவாரும் உளர்; இக்கருத்து 'பத்து' என்ற தமிழ் முறைக்கு ஏற்றதன்று; இந்திய கணிதத் துறையில் பத்துப்பத்தாக எண்ணும் முறை கி. பி. 3இல் தோன்றியதாகும்; கி. பி. 3க்கு முன்பே இந்த எண்ணுமுறை தென்னிந்தியாவில் வேரூன்றியிருந்தது! அது பக்தியக்கக் காலத்தில் பெருவாழ்வு பெற்றிருந்தது என்பதற்குப் பதிக இலக்கிய வகை சான்றாகும்;

விருத்த யாப்பை மிகத் திறமையாகப் பக்தியியக்கக் கவிஞர்கள் கையாண்டனர் என்பதைப் பதிகப்பா நிலை காட்டுகிறது. விருத்தத்திலே எத்தனை வகை! ஆறு, ஏழு, எட்டு சீர்கள் வரை கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், மற்றும் கலித்தாழிசை, கலிநிலைத்துறை, வெண்டுறை, வெண் செந்துறை, ஆசிரியத் துறை, கொச்சக ஒருபோகு, வஞ்சித்துறை, குறளடி வஞ்சித்துறை, தாண்டகம் எனப் பக்தியியக்கக் கவிஞர்கள் கையாளாத யாப்பு வகையே இல்லை எனலாம். பொருளுக்கும், இடத்திற்கும், உணர்ச்சிக்கும் ஏற்ப யாப்பு மாறுபாடுகள் நிகழ்ந்தன. இடைக்காலத்தே பொலிவற்றிருந்த தமிழ் மொழியை மீண்டும் அரியணை ஏற்றிப் பழைய இலக்கண, இலக்கிய மரபுகட்கு உயிரூட்டிப் பொலிவு பெறச் செய்தனர் பக்தியியக்கக் கவிஞர்கள்;

துணை நூற்பட்டியல்

1. அறவாணன், க. ப., கவிதையின் உயிர் உள்ளம் உடல், சென்னை பாரி நிலையம், 1976.
2. அறிவுடைநம்பி, ம. சா., திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள் மதுரை, கருமணி பதிப்பகம், 1986.
3. கைலாசபதி, க., இலக்கியமும் திறனாய்வும், சென்னை, சென்னை புக் ஹவுஸ், 1981.
4. சிவத்தம்பி கார்த்திகேசு, தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1983.
5. சுப்பிரமணியன், ச. வே., இளங்கோவின் இலக்கிய உத்திகள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984.

6. சுப்பிரமணியன், க. நா., இலக்கியத்துக்கு ஒரு இயக்கம். இலக்கியத்தில் கருத்தும் உருவமும், பெங்களூர், காவ்யா, 1985.

7. சுவாமிநாத பண்டிதர், (பதி), தேவாரத்திருமுறை, சென்னை சைவ வித்தியாநு பாலன யந்திர சாலை, 1911.

8. 'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன், ஒளவையார் புறப்பாடல்களில் வடிவமைப்பும் நடைத்திறனும், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வெளியீடு, 1979.

9. 'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன், சங்க இலக்கிய ஒப்பீடு; இலக்கிய வகைகள், மதுரை, சோலை நூலகம், 1973.

10. 'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன், ஒப்பிலக்கிய அறிமுகம், மதுரை, சோலை நூலகம், 1977.

11. வெல்லாக் ரெனின் அண்டு ஆஸ்டின் வாரன், குளோறியா சுந்தரமதி (மொ. ப). இலக்கியக் கொள்கை, சென்னை, பாரி நிலையம், 1966.

12. வேங்கடசாமி ரெட்டியார், கி (பதி), நாலாயிர திவ்வியப் பிரபந்தம், சென்னை, திருவேங் கடத்தான் திருமன்றம், 1981.

13. முத்து செந்துறை, தமிழின் வடிவங்கள், சென்னை திருமகள் நிலையம், 1980.

14. ஃப்ரை நார்த்ராப், க. பஞ்சாங்கம் (மொ. ப), இலக்கியத்தில் தொல் படிவங்கள், சிவகங்கை, அன்னம் (பி) லிட்., 1988.

15. Howman, A. E., The Name and Nature of Poetry, 1933.

16. Winchester, C. T., Principles of Literary Criticism, New York, Macmillan, 1959.

பரத்(ந்)த...ஓர் ஆய்வு

ஆய்வுச் செல்வர் பி. கோ. கோவிந்தராசன், க.மு., கல்.மு., சென்னை.

(முன் இதழ் ௩௪௧ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வினாவிற்கு மு. ச. சி. அவர்கள் ''ஒரு பேச்சுக்காக, ஊடலுக்காகத் தலைவி தலைவனைப் ''பரத்த'' என விளிக்கிறாள். அதாவது பரத்தன் அல்லாத ஒருவனை ஒரு பேச்சுக்காக, ஊடலுக்காகத் தலைவி தலைவனைப் ''பரத்த'' என விளிக்கிறாள்'' என்று கூறுகின்றார்.

பி. கோ. கோ.:

ஒரு பேச்சுக்காகவும் ஊடலுக்காகவும் சொல்ல அல்லது விளிக்க வேறு சொல் கிடைக்கவில்லையா? ''பரத்த'' என்னும் - தலைவனின் ஒழுக்கத்தைக் குறைக்கும் சொல்லா கிடைத்தது?

சங்க இலக்கியத்தின் தலைவன் பரத்தை நலம் துய்த்து வந்ததாகக் காணப்படுகிறான். அது தலைவிக்கும் தெரியும், அப்படி இருந்தும் எந்தத் தலைவியாவது தலைவனை முன்னிலைப் படுத்தி, ''பரத்த'' என்ற சொல்லைப் பயன் படுத்தியுள்ளாளா? என்ற வினாவிற்கு விடையாக மு. ச. சி. அவர்கள் ''கலித்தொகைத் தலைவி, ''சிறுபட்டி'' என்று தலைவனை விளிக்கிறாள்'' என்று கூறுகிறார். ''பட்டி'' என்னும் சொல்லிற்குப் பரத்தன் என்ற பொருள் உண்டா? என்றால் இல்லை என்பதே விடையாகும்.

சங்க இலக்கியத் தலைவி, தலைவனைக் கள்வன் என்றும் பட்டி என்றும் விளித்தாளே அன்றிப் பரத்தன் என்று விளித்தாளல்லள். அப்படி இருக்க வள்ளுவத் தலைவி மட்டும் பரத்த என்று விளித்திருப்பாளா? விளித்திருக்க மாட்டாள் என்பது சொ. சி. அவர்களின் வாதம்.

மு. ச. சி. அவர்கள், ''காதலர்க்குள் கிண்டல், கேலி, ஊடல், பிணக்கு உண்டாதல் உலக இயல்பு. அவ்வுலக இயல்பிற்கு ஏற்ப வள்ளுவரின் தலைவி கிண்டலாக, கேலியாக, ஊடலாக, பிணக்குக்காகப் பரத்த என

விளித்தாள் என்கிறார்; அவர் குறிப்பிடும், ''காதலர்க்குள்'' என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்; தலைவியும் கிண்டலாகப் பேசலாம்; தலைவனும் கிண்டலாகப் பேசலாம் என்றார்.

''ஒரு வாதத்திற்காகச் சொல்லுகின்றேன். தலைவன் தலைவியை ஒரு பேச்சுக்காக - ஒரு விளையாட்டுக்காக - ஒரு கிண்டலுக்காக - ஒரு கேலிக்காக - ஓர் ஊடலுக்காக - ஒரு பிணக்குக்காக ''பரத்தை'' என்று விளித்தால், நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்; அப்படி விளித்திருந்தால் மு. ச. சி. ஒத்துக் கொள்வாரா?

4. காமத்துப் பாலில் பரத்தை உண்டா?:-

''காமத்துப் பாலில் தலைவன் மட்டும் குற்றம் குறையில்லாதவனாயிருக்க வேண்டும் என்று சொ. சி. அவர்கள் கருதுகின்றார்; பெண்கள் குறையுடையவராய் இருந்தால் அது பற்றி இவர் கவலைப்படவில்லை''—என்று மு. ச. சி. அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

பி. கோ. கோ. :-

காமத்துப் பாலில் தலைவன், தலைவி, தோழி என்னும் மாந்தரே காணப்படுகின்றார்களே அன்றிப் பரத்தையர் காணப்பட்டாரல்லர். காணப்படாத பரத்தையர்களைப் பற்றி எவ்வாறு கவலைப்பட முடியும்? காமத்துப்பாலில் பெண்கள் குறையுடையவராய்க் கூறப்படவில்லை. அவ்வாறு குறையுடையவராய்க் கூறியிருந்தால் சொ. சி. அவர்கள் கவலைப்பட்டிருப்பார்.

காமத்துப் பாலில் பரத்தை உண்டா? என்றால் இல்லை. பரத்தை என்ற சொல் இல்லை. பெண்ணியலார் என்ற சொல் உண்டு. பரத்தை என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் பெண்ணியலார் என்று பயன்படுத்தியது போலப் பரத்தன் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் வேறு சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாமன்றோ?

காமத்துப் பாலில் தலைவியின் கூற்றுப்படிப் பரத்தையர் இருந்தனர். பரத்தரும் இருந்திருக்கலாம். ஆனால் அதற்கு அகச் சான்று தர முடியுமா மு. ச. சி. அவர்களால்?

பரத்தரும் இருந்திருக்கலாமேயன்றி வள்ளுவத் தலைவன் பரத்தனா? என்பதுதான் வினா.

''தலைவன் பரத்தமை குற்றம் இல்லாதவன். அவனைப் பார்த்துத் தலைவி ''பரத்த'' என்று கூறியிருப்பாளா? கூறியிருக்க மாட்டாள். அப்படி என்றால் ''பரத்த'' என்ற சொல் குறளில் தலைவி கூற்றாக வந்துள்ளதே என்ற வினா எழுவது இயல்பு.

5. பரந்த :-

''பரந்த நின் மார்பு'' என்பது ''பரத்த நின் மார்பு'' என்று வலித்தல் விகாரமாய் இருக்கலாம் என்பது சொ. சி. அவர்களின் கருத்து.

இதனை மறுத்து மு. ச. சி. அவர்கள் ''வலித்தல், மெலித்தல் முதலிய விகாரங்கள் செய்யுளில் எதுகைக்காகவே தோன்றும். சொ. சி. அவர்கள் கருதுவது போலப் ''பரந்த நின் மார்பு'' என்று வள்ளுவரே கூறியிருக்கலாம். எதுகை வரவேண்டிய இடத்தில் இச் சொல் வரவில்லை. பரந்த நின் மார்பு என்று கூறினாலும் தளை கெடவில்லை. ஏதாவதொரு தக்க காரணமின்றி விகாரத்தைப் புகுத்துவது தகாது'', என்று இந்த அளவில் எழுதியிருந்தாலும் மு. ச. சி. அவர்களைப் பாராட்டியிருக்கலாம். அதற்கு மேலாக என்ன கூறுகிறார்?

''கட்டுரை ஆசிரியரின் (சொ. சி.) மனத்தில் தான் விகாரம் தோன்றி விட்டது போலும்'' என்கிறார். இதுவே கூடப் பரவாயில்லை. வேறோர் இடத்தில்,

''தெலுங்கில் குதிரைக்குக் ''குர்ரமு'' என்றால் அவ்வாறே ஆனைக்கு ''அர்ரமு'' என்று கூறலாகாது'' என்று கூறிக் கிண்டல் பேசுவது முனைவர் மு. ச. சிவம் அவர்களுக்கு அழகன்று என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (விரிவஞ்சி விட்டு விடுகிறேன்)

''வலித்தல் முதலிய செய்யுள் விகாரங்கள் எதுகைக் காகவே தோன்றும்'' என்று மு. ச. சி. கூறியுள்ளார்.

''வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தல் வரும்செய்யுள் வேண்டுழி''
—நன்னூல் 155

இதற்கு உரை எழுதிய - காண்டிகை உரை எழுதிய ஆறுமுக நாவலர் அவர்களும் விருத்தியுரை எழுதிய சங்கர நமச்சிவாயப் புலவரும், ''செய்யுளகத்து அடி, தொடை முதலிய நோக்கி விகாரங்கள் அமைக்க வேண்டுமிடத்து வருவனவாம்'' என்று கூறியுள்ளனர். அதன் அடிப்படையில் நோக்குங்கால்,

''குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்'' —1095

என்ற குறட்பாவில் சிறங்கணித்தாள் எனற்பாலது சிறக்கணித்தாள் என வலித்தல் விகாரம் ஆயிற்று. ஆகவே இது ''அடி எதுகை'' ஆகும். எனவே இது எதுகை நோக்கி வந்த வலித்தல் விகாரமாகும்.

இவ்வாறே குறளில் ஒரூஉ எதுகையும் வந்துள்ளது. (விரிவஞ்சி விடுகிறேன்) அதன்படி மு. ச. சி. குறிப்பிட்டுள்ளார்.

சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் நூற்பா 155இன் விளக்கவுரையின் பிற்பகுதியில், ''இன்னது நோக்கி என வரைந்து கூறாராயினார்'' என்று கூறியுள்ளார்.

அதாவது வலித்தல் முதலிய விகாரங்கள் அடி, தொடை நோக்கி வருமேயாயினும் இன்னது நோக்கி வரும் என்று நன்னூல் அறுதியிட்டு உறுதியாகக் கூறவில்லை என்று சங்கர நமச்சிவாயப் புலவர் கூறுகின்றார்.

முற்பகுதியின்படி முனைவர் மு. ச. சி. அவர்கள் கூறுகின்றார். பிற்பகுதியின்படி முனைவர் சொ. சி. அவர்கள் கூறுகின்றார்.

இன்னது நோக்கி வலித்தல் விகாரம் வரும் என்று நன்னூலார் கூறாததினால் ''பரந்த நின் மார்பு'' என்பது ''பரத்த நின் மார்பு'' என்று ஏன் வலித்தல் விகாரமாக இருக்கக் கூடாது? என்று முனைவர். சொ. சி. வாதாடுகின்றார். இதில் தவறேதும் இல்லை.

''பரத்த நின் மார்பு'', ''பரந்த நின் மார்பு'' - இவ்விரண்டில் எது பொருந்துமாறு இருக்கும் என்பதைத் தான் ஆய்ந்துணர வேண்டும்.

(தொடரும்)

தமிழ்நாடு நாணயவியல் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு மாநாட்டில் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரை
இடம்: கரூர். நாள் : 13, 14 பிப்ரவரி 1993

''சேரர் தலைநகர் வஞ்சி கொங்கு நாட்டுக் கரூரே''

திரு. பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

(முன்னிதழ் ஙஙகூ ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்க நூல்களில் காவிரிப் பேரியாறு, பெண்ணையம் பேரியாறு, கங்கையம் பேரியாறு என்று, பெரிய ஆற்றின் பெயர்களில் 'பேர்' என்ற அடைமொழியுடன் வழங்குவதைக் காணலாம். இதே வழக்கு தெலுங்கிலும் ஆற்றுப் பெயர்களில் இருப்பதையும் காணலாம். பேராறு என்பதைப் 'பேரேறு' என்று தெலுங்கில் வழங்குகின்றனர். பேராறு என்பது எல்லாப் பெரிய ஆறுகளுக்கும், பேர் என்ற முன்னொட்டு அடைமொழியுடன் பொதுப் பெயராக வழங்கியதையும், அதே சமயம் சிறப்புப் பெயராக, கேரளாவில் பொன்னானிக்கு மட்டும் சங்க நூல்களில் பேராறு என்று வழங்கப்பட்டதையும் காணலாம். கொடுங்கோளூருக்கு அருகில், இன்று பாயும் பெரியாறு கொங்கு நாட்டுக் கரூர் அருகில் பாயும் 'ஆன்பொருநை' பெயர் பெற்றிருக்க முடியாது. ஆன்பொருநை பேராறு அன்று. இன்று அமராவதி என்று கரூருக்கு அருகே ஓடும் ஆறு பெரிய ஆறு இல்லை. அதனால் அது சங்ககால முசிறிக்கு அருகில் இக்கால கொடுங்கோளூருக்கு அருகில் பாயும் பேரியாறாக, பேராறாக இருக்க முடியாது. சங்க நூல்களில் முசிறிக்கு அருகில் பாயும் ஆறு ''சுள்ளியம் பேராறு'' என்று அகநானூறு 149ஆம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள ''சுள்ளியம் பேராறு'' என்று சங்கப்பாடல் கூறியதையே வால்மீகி இராமாயணத்தில் சுள்ளியை 'சூர்ணி' என்று ஒருவாறு பொருள் தோன்ற மொழி பெயர்த்தது. அந்த ஆறு கடலில் கலக்குமிடத்தில் விளைந்த முத்தை, 'சௌர்னேயா' என்று கௌடில்யரும் அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று மு. இராகவய்யங்கார் தாம் எழுதிய அரிய நூலான ஆராய்ச்சித் தொகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

கொடுங்கோளூர் அருகில் பாயும் ஆறு, பதிற்றுப்பத்தில் பேராறு என்ற சிறப்புப் பெயரால் கூறப்பட்ட ஆறு அன்று: அது இக்காலத்தில் பொன்னானி என்ற ஆறேயாகும். இந்த இரு ஆறுகளுமே புறநானூற்றில் பண்டைச் சேரரின் தலைநகரான கரூர் நகரின் கோட்டைச் சுவரைச் சுற்றிப் பாய்ந்து, அரணாக விளங்கிய ஆறுகள் அன்று என்பது தெளிவாகும்.

இனித் தாவர நூற்படி, சுள்ளியம் பேராற்றங்கரையில் தோன்றிய முசிறியும் வஞ்சி மரம் இருக்கும் ஆற்றங்கரையில் உள்ள வஞ்சி என்ற கருரும் ஒரே ஊராக இருந்திருக்க முடியுமா என்பதை ஆராய வேண்டும். சுள்ளி என்ற பெயர் இக்காலத்தில் மரஞ்செடிகளின் ஒடிந்த, காய்ந்த கொம்பு களைக் குறித்தாலும், சங்க நூல்களில் அப் பொருள் உடையது அன்று, ஒரு குறுஞ்செடியை, அழகிய பூக்கள் தரும் செடியைச் சுள்ளி என்ற பெயர் குறித்தது. இந்தப் பெயருக்குப் பிற்கால நிகண்டுகள், தவறுதலாக மரமென்று கூறியிருப்பதை இராகவய்யங்கார் பின்பற்றி எழுதியிருப் பினும், ஓரளவு, இக்காலப் பெயர் வழக்குகளிலிருந்தும், சங்க நூற் சுள்ளி எது என்பதை, தாவர நூல் அறிந்திருந்தால் தெரிந்து சொள்ளலாம். தற்காலத்தில் 'வயல் சுள்ளி' என்று வழங்கும் பெயர், விளைவயலில் காணப்படும் முள்ளிச் செடியையும், கடல் சுள்ளி என்ற பெயர், கடலருகில் காணும் கடல் முள்ளியையும் குறிக்கும். ஆனால் மலையாள மொழியில் இன்று வழங்கும் 'கடல் சுள்ளி' என்ற செடியே, அகநானூற்றில் கூறப்பட்ட சுள்ளிச் செடியாகும். இதைத் தாவர நூலில் Barberin Cristata என்றழைப்பர். இந்தச் சுள்ளி என்ற பெயர் இதே செடிக்குக் கன்னடத்திலும் வழங்குகின்றது. இந்தக் குறுஞ்செடிக்கு அழகிய நீல நிறப் பூ உண்டு. முதலாம் இராசேந்திர சோழன் வெற்றி கொண்ட ஊர்களாகக் கூறப்பட்டவைகளில், 'சுள்ளிசூழ் கொள்ளிப் பாகையும்' கூறப்பட்டுள்ளதைக் காணலாம். சுள்ளி என்ற பெயருக்குப் பிற்கால நிகண்டுகள் தவறுதலாக மரமென்று பொருள் கூறினும், அது ஒரு குறுஞ்செடியேயாகும்.

நற்றிணை 215ஆம் பாடலைப் பாடிய புலவர் 'சுள்ளம் போதனார்' என்றழைக்கப்பட்டுள்ளார். இவர் இந்தச் செடியின் அழகிய நிறப்பூவைப் பாடியவராக இருக்கலாம்.

'சுள்ளம்போது' என்ற பெயர் கூறிய இவர் பாடல் மறைந்து போனதால், இவர் பெயர் சங்க நூல் மரபுப்படி வழங்கப் பட்டதாகத் தெரிகின்றது. சுள்ளி சங்க நூற்படி, நெய்தல் திணைத் தாவரமாகும். ஆனால் வஞ்சி மென்புலத்தது: மருதத்திணைக்குரியது என்று சங்க நூல்கள் கூறுவதால், நெய்தல் திணைக்குரிய கொடுங்கோளூர்ப் பகுதியில் இருந் திருக்க முடியாது. வஞ்சிமரம் தாவர நூல்படி Trewila undiflora இது நன்னீர் ஆற்றங்கரையில், தானாகவே வளருவதாகும் 'வரிமணற்புனை பாவைக்குக் குலவுச் சினைப் பூக்கொய்து, தண்பொருநைப் புனல் பாயும் விண்பொரு புகழ் விறல் வஞ்சி' என்று வஞ்சி மாநகர் புறநானூற்றில் (புறம். 11) வருணிக்கப் பட்டுள்ளது. வஞ்சியும் காஞ்சியும் தாவர நூற்படி நன்கு கிளைகளை வளைந்து கொடுக்கும் மரங்களாகும். இதனால் willow என்றும் weeping tree என்றும் கூறுவர். 'குலவுச் சினைப் பூக்கொய்து' என்று புறநானூற்றுப் பாடல் வரியும் இந்த மரத்தின் தன்மையைக் குறிக்கும். இதிலிருந்து வஞ்சி ஒரு மரமென்பது தெளிவாகும்.

புறநானூறு 32ஆம் பாடல் 'பூவாவஞ்சி' என்று வஞ்சி மரத்தின் பெயரால் வந்த ஊரைக் குறித்துள்ளதைக் காணலாம். செல்வக் கடுங்கோ வாழியாதன் தலைநகராக, புறநானூறு 387ஆம் பாடலில் கூறப்பட்டுள்ள வஞ்சி நகரம், 'புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்லென் பொருநை' என்று குறிப்பிடப்பட்டதோடு அதன் மணல் பரப்பைச் சுற்றி, பல்லூர் சுற்றிய கழனி கூறப்பட்டிருப்பதாலும், அந்த நகர் கொடுங்கோளூரைப் பற்றியதாகவும் சுற்றியதாகவும் இருக்க முடியாது. ஏனென்றால், கொடுங்கோளூரைச் சுற்றிய நிலம் இன்றும் உப்பு நிலம். புறநானூறு 373ஆம் பாடல் 'கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே' என்று கொங்கு நாட்டுச் சேரனைக் குறித்தும் அதே பாட்டில் 'வஞ்சி முற்றம் வயக்களனாக' என்று வஞ்சியாற்று முற்றம் கூறப்பட்டிருப்ப தாலும் வஞ்சி கொங்கு நாட்டுக் கருரே என்பது தெரிகின்றது.

சங்க நூல் பாடல் மரபுப்படி, கடற்கரையில் சேரும் ஆற்றுக்கு ''முற்றம்'' கூறுவது மரபு அன்று. உள்நாட்டு ஆற்றுக்கே முற்றம் கூறுவது மரபாகும். வஞ்சி முற்றம், காஞ்சி முற்றம் சங்கப் பாடல்களில் பயின்றுள்ளன. புறநானூற்று 384ஆம் பாடல் 'மென்பாலானுடனணை இ,

வஞ்சிக் கோட்டுறங்கு நாரை, அறைக்கரும்பின் பூ அருந்தும் என்று கூறியிருப்பதால், வஞ்சிமரம் மருதத்திணையில் வளர்ந்த மரமென்பதுவும், அதற்குக் கிளையுடையதால் அது ஒரு மரமென்பதுவும் தெளிவாகும். ஆனால் மணிமேகலையில் புராண மனப்பான்மை புகுந்ததால் வஞ்சியைப் 'பொற்கொடி பெயர்படும் பொன்னகர்' என்று அழைக்கப்பட்டது. பொற்கொடி என்ற பெயர் அழகிய பெண்மணியைக் குறித்தது. வஞ்சி என்ற பெயர் அழகிய பெண்மணியைக் குறித்தது; வடமொழிப்பெயர் மரபால் என்று தெரிகின்றது. சென்னைப் பல்கலைக் கழக அகராதி 'வஞ்சுளா' என்ற வடமொழி கொடிப்பெயராக வஞ்சி என்ற பெயர் தோன்றியிருக்கலாம் என்றும் ஊகித்ததைக் காணலாம்.

ஆதலின் தாவர நூல் அறிவியல்படி, சேரர் வஞ்சி கொடுங்கோளூராக இருந்திருக்கவே முடியாது. கருவூர் என்ற பெயரே உள்ளூர் என்ற அடிப்படைப் பொருள் பெற்றுள்ளதை ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். முதற்பொருள், கருப்பொருள், திணைப்பாகுபாடுகளில் கருப்பொருள் 'உள்பொருள்' என்ற பொருளில் வழங்கியதோடு சுவை தரும் "இறைச்சிப் பொருளைக் குறித்ததும் கரு என்ற சொல் 'உள்' என்ற பொருளில் வழங்கப்பட்டது தெரிகின்றது. ஆதலால் கரூர் என்ற பெயர் உள்நாட்டு ஊரையே குறித்தது. கருவூர் என்ற பெயர் தொன்முதிர்ச் சங்க நூற்பெயர் மரபு தழுவியது என்பது உறுதியானதாகும்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் செங்குன்றம் கொடுங்கோளூர் அருகில் இருந்ததாகக் கூறினார். ஆனால் சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் தனது தேவியுடன் செங்குன்றூர் சென்று அதே நாளில் வஞ்சிக்குத் திரும்பிய தாகக் கூறப்பட்டதால் செங்குன்று திருச்செங்கோடாகவே இருக்கும். ஏனென்றால் திருச்செங்கோடு கரூருக்கு அருகில் அறுபது மைல் தூரத்தில்தான் உள்ளது.

இலக்கியத் திறனாய்வும் இந்திய மொழிகள் இலக்கியங்களும்

திரு. தி. சு. திருமலைவேலு,
ஆங்கில விரிவுரையாளர் (தே. நி.),
அரசு கலைக்கல்லூரி, கரூர்-5.

(முன்னிதழ், ௩௩௪ஆம் பக்கத் தொடர்ச்சி)

அஸ்ஸாம் மொழி இலக்கியத்தின் வழிகாட்டியான வங்காள மொழி இலக்கியத்தில், திறனாய்வுக் கலை என்பது, மக்கள் இலக்கியம், மொழிப் பழைமை அல்லது மதப் பழைமை இவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இல்லை. இம்மொழியில் திறனாய்வுக்கலை என்பது சமஸ்கிருத மற்றும் ஆங்கில மொழி இலக்கியக் கொள்கைகளின் ஒப்பீடேயாகும். இதுவும் பங்கிம் சந்திரருக்கு முன்னுள்ள காலம் (1865 வரை), பங்கிம் சந்திரர் காலம் (1865-1901), தாகூர் காலம் (1941 வரை) மற்றும் தாகூருக்குப் பின்னுள்ள காலம் எனப் பகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

19 ஆம் நூற்றாண்டில் ஈஸ்வர சந்திர குப்தா (1812-1859), காளி பிரசன்ன சின்ஹா (1840-1870), மற்றும் ராஜநாராயணன் போஸ் (1826-1899) போன்றோர் வங்காள மொழி இலக்கியத் திறனாய்வுக்குப் பெருந்தொண்டாற்றி உள்ளனர். தாகூர் தமது சமகாலப் படைப்பாளர்களுடன் இணைந்து, 1) இதிகாசப் புராணப் பழைமையின் பெருமைகளை விளக்குவது, 2) உலகியல் அழகினைக் கவிஞன் உள்ளுணர்வுகளின் மூலம் வெளிக்கொணர்தல் போன்ற சித்தாந்தங்களை உருவாக்கினார். இவரது அடிச்சுவட்டில் புத்த தேவ போஸ் (1908-1974) ஒப்பியல் இலக்கியத்திற்கு அடித்தளமிட்டார். புத்த தேவ போஸ் தனது "மகா பாரதர் கதா" என்ற நூலின் மூலம் திறனாய்வில் உளவியலைப் புகுத்திப் புரட்சி செய்துள்ளார். பொதுவாக வங்காள மொழி இலக்கியத்தில், திறனாய்வாளர்கள் என்பதனை விடப் படைப்பாளர்—திறனாய்வாளர்களே அதிகம் என்று கூறலாம்.

குஜராத்தி மொழி இலக்கியத்திற்கு, இலக்கியப் பாரம்பரியம் அல்லது இலக்கியப் பழைமை என்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. 19ஆம் நூற்றாண்டில், ஆங்கில இலக்கியத் தாக்கத்தினால், அவ்விலக்கியத் திறனாய்வுக்கலை உத்திகளைப் பின்பற்றி நர்மத் (1833—1886), நாவல்ராம் பாண்ட்ய (1836-1888) போன்றோரும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கோவர்த்தன் ராம் திரிபாதி (1855-1907) மற்றும் ஆனந்த சங்கர் துருவா (1869-1942) போன்றோரும் இலக்கியத் திறனாய்வு செய்துள்ளனர். 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ராம நாராயண், வி, பதக் (1887-1955) மற்றும் மங்கல்லால் ஜாவேரி (1907-1981) போன்றோர் இப்பணியைத் தொடர்ந்துள்ளனர். இளைய தலைமுறையினரில் ராம்லால் மோடி, கே. பி. வியாஸ் போன்றோர் திறனாய்வில் புதுக் கருத்துக்களைப் புகுத்தி ஆய்வு செய்து வருகின்றனர்.

குஜராத்தி மொழி இலக்கியம் போன்றே இலக்கியப் பழைமையற்ற காஷ்மீர மொழி இலக்கியம், 19, 20ஆம் நூற்றாண்டுகளில், திறனாய்வில் மேலை இலக்கியத் திறனாய்வு நிலைகளையே பின்பற்றி வந்துள்ளது. சுதந்திரத்திற்கு முன் நந்தலால் அம்பர்தர் (பி. 1915) மற்றும் ரஹ்மான் ராஹி (பி. 1925) போன்றோரும், சுதந்திரத்திற்குப் பின் ஜியா லால் கவுல் மற்றும் மொஹி-உத்தீன் கஜினி (பி. 1916) போன்றோரும். செய்யுள் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதிப் பணிபுரிந்தனர். மிக நவீன காலத்தில் குலாம் நபிஃபிரக் எழுதியுள்ள "காஷ்மீரி இலக்கியத் திறனாய்வு" என்னும் நூல் இலக்கியத் திறனாய்வுக் கலைக்கு ஒரு முன்னோடியாகும்.

சமஸ்கிருத மொழி அடிச்சுவட்டில் வளர்ந்த மராத்தி மொழி இலக்கியத்தின் பழைமை, 13ஆம் நூற்றாண்டாகும். இம்மொழி இலக்கியத்தில் 1874க்கு முன்பு வரையுள்ள திறனாய்வுக்கலை வளர்ச்சிக்கு ஸ்ரீதர் வியங்கடேஸ் கேட்கர் (1884-1937) முழு வடிவம் கொடுத்தார். 1874க்குப் பின் விஷ்ணு சாஸ்திரி சிப்லுங்கன், கோபால் கணேஷ் அகர்கர் மற்றும் டபுள்யு. பி. பட்வர்த்தன் (1870-1921) போன்றோர் இலக்கியத் திறனாய்வினை முறைப்படுத்தினார்கள். 20ஆம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கியத் தாக்கத்தினால் ஸ்ரீபாத கிருஷ்ண கோல்கர், வி. எம். ஜோஷி மற்றும் வி. எஸ்.

காண்டேகர் போன்ற மூத்த தலைமுறையினரும் டபுள்யு. எல். குல்கர்னி, கங்காதர் காட்கில் மற்றும் டி. ஜி. கோட்சே போன்ற இளைய தலைமுறையினரும் மார்க்ஸீயத் திறனாய்வுக் கருத்துக்களைப் புகுத்திப் புரட்சி செய்துள்ளனர்.

18ஆம் நூற்றாண்டின் இறுதிவரை சமஸ்கிருத மொழி இலக்கியத்தின் ரீதி, த்வனி, மற்றும் ரசனை என்ற இலக்கியக் கோட்பாடுகளின் அடிச்சுவட்டில் வளர்ந்தது ஒரிய மொழி இலக்கியம். அர்த்த பல்லவ மொகந்தி (1887-1963) என்பவர், பழைய ஒரிய மொழி இலக்கியங்களை அச்சிட்டு வெளியிட்டபோது, அது இலக்கிய உலகில் பிரபலமடைந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், ஆங்கில இலக்கியத்தின் "கற்பனைச் சுதந்திரப் பாரம்பரியம் (Romantic Tradition) இம்மொழி இலக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவே, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பண்டிட் கோபிநாத் நந்தா (1869 - 1924) பண்டிட் ம்ருத்யுஞ் செய் ரேத், நந்தகிஷோர் பால் போன்றோரும், 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பண்டிட் நீலகண்டதாஸ் (1884-1967), மாயாதார் மான்ஸிங்ஹா (1906-1973) போன்றோரும் சமஸ்கிருத மொழி இலக்கியப் பாரம்பரியத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, ஒரிய மொழி இலக்கியத் திறனாய்வுக்குப் புதிய வடிவம் கொடுத்தனர், இவர்கள் தங்கள் மொழியில் சமஸ்கிருத மொழி திறனாய்வுக் கலைத் தாக்கத்தினை மறு ஆய்வு செய்யவும் தவறவில்லை. இம் முயற்சி ஒரிய மொழி இலக்கியத்தை தேசிய மனோபாவத்தில் பீடுநடை போட வைத்ததோடல்லாமல், சமீப காலத்தில், சிக்கந்த மகாபத்ர ராமகந்தராத் மற்றும் தாரிணி சந்திரதாஸ் போன்ற படைப்பாளர் திறனாய்வாளர்களையும் உருவாக்கித் தந்திட உதவியது.

ஆதிக்கிரந்தத்திலிருந்து குருநானக் தேவ் (1469 - 1539) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட குர்மத் செய்யுளே (பக்திப் பாடல்கள்) பஞ்சாப் மொழியில் இலக்கியப் பழைமையாகும். சமஸ்கிருத மொழி இலக்கியத்தின் திறனாய்வுக் கலை பஞ்சாபி மொழியில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. பாவாபுத்சிங் (...) என்பவரே பஞ்சாபி மொழி இலக்கியத் திறனாய்வுக்கு வித்திட்டவர். இவரைப் பின்பற்றி மௌலா பக்ஸ் குஸ்த (1876-1955) என்பவர்

164895
சென்னை-600 008.

பஞ்சாபி மொழி செய்யுள் இலக்கியத்தை முதன் முறையாகத் திறனாய்வு செய்தார். தேஜ்சிங் (1883 - 1958) என்பவர் சமகால பஞ்சாபி மொழி இலக்கியங்களை நவீன நோக்கோடு ஆய்வு செய்தார். மோகன் சிங் திவானா (பி. 1889) வரலாற்றுத் திறனாய்வில் சிறந்து விளக்கினார். அஹ்லுவாலியா (பி. 1935) படைப்பாற்றல் திறனாய்வாளர்களைப் பற்றி ஆய்வு செய்தார். ஹர்பஜன் சிங் (பி. 1920) பஞ்சாபி மொழி இலக்கியத்தை மேலை இலக்கிய நிலைகளுடன் ஒப்பிட்டு ''அறிவியல் சார் இலக்கியம்'' (Science Oriented Literature) என்ற புதுக்கோட்பாட்டில் ''சிந்தனை அமைப்பு'' (System Thinking) மற்றும் ''மாதிரி நினைவாற்றல்'' (Model Conscience) போன்ற உளவியல் கூறுகள் அடிச்சுவட்டில் ஆய்வு செய்தார். இவ்வாய்வு, இலக்கியக் கொள்கைகளுக்கும், இலக்கியத் திறனாய்வுக்கும் உள்ள வேறுபாட்டை வெளிக்கொணருவதாக அமைந்தது. இந்நிலை, பஞ்சாபி மொழி இலக்கியத் திறனாய்வாளர்களின் முறையான ஆய்வுத் திறமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சிந்து நதி பாயும் சிந்து நாடு இன்று பாகிஸ்தானில் இருந்தாலும், சிந்தியர்கள் இந்தியாவிலும் இருப்பதால் சிந்தி மொழி, இந்திய மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. கிறிஸ்து பிறப்புக்கு முன் கிரேக்கர் படையெடுப்பினால் கிரேக்க மொழிக் கலப்பும், கி. பி. 712க்குப் பின் ஆரியப் படையெடுப்பினால் சமஸ்கிருத மொழிக்கலப்பும், கி. பி. 1058லிருந்து 1737 வரை துருக்கியர் மற்றும் முகமதியர் படையெடுப்பினால் உருது பாரசீக மற்றும் அராபிய மொழிகள் கலப்பும், 1737க்குப் பின் பஞ்சாபி மொழிக் கலப்பும் இம் மொழியில் உண்டு. எனினும், மொஹஞ்சோதாரோ கலாச்சாரக் காலமே சிந்தி மொழியின் பழமையாகும். புத்த மதமும், ஜைன மதமும் இம் மொழியை வளர்த்தன.

முகம்மது ரேசா தத்தவி, பாரசீக மொழியில் எழுதி பெயான்-அல்-ஆரிபின் (1628) என்ற நூலே சிந்தி மொழி இலக்கியத்தில் முதல் திறனாய்வு நூலாகும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தயாராம் கிடுமல் (1857-1927) சிந்தி மொழியில் முதல் திறனாய்வுக் கலை நூலை எழுதினார். இவர் தமது நூலில் மதத்திற்கும், கவிதைக்கும் இடையேயான

தொடர்பினை ஆய்வு செய்தார். இவருக்குப் பின் லால் சந்த் அமர்தி நொமல் (1885-1954) மற்றும் ஜெத்மல் பரசுராம் (1886-1948) போன்றோர் சிந்தி மொழியில் புதிய இலக்கியச் சிந்தனைகளை உருவாக்கினார். சுதந்திரத் திற்குப் பின் ஜே. கே. பாவா நானி (பி. 1903) எழுதிய ''இந்தியன் யாப்பிலக்கண அமைப்பு, (Indian system of Prosody) 1953 என்னும் நூல் திறனாய்வுக் கலைக்கு ஒரு சிறந்த முன்னோடியாகும்.

திராவிட மொழிகளுள் ஒன்றான தெலுங்கு மொழி, உலகிலேயே அதிக மக்களால் பேசப்படும் மொழிகளில் 15ஆவது மொழியாகவும், இந்தியாவில் அதிக மக்களால் பேசப்படும் மொழிகளில் இரண்டாவதாகவும் திகழ்கிறது.

இம்மொழி தனது இலக்கிய வளர்ச்சியில் 19ஆம் நூற்றாண்டு வரை சமஸ்கிருத மொழி இலக்கியத் தாக்கத்தையும், 19ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஆங்கில மொழி இலக்கியத் தாக்கத்தையும் பெற்றுள்ளது. மேலும் தெலுங்கு நாட்டின் தெலுங்கு மொழி இலக்கிய வரலாறு எழுதியும், ஆங்கில இலக்கியத் திறனாய்வுக் கலையைத் தெலுங்கு மொழியில் புகுத்தியும் புரட்சி செய்தவர், சி. பி. பிரவுன் (C. P. Brown) என்ற ஆங்கிலேயரே ஆவார். இதன் விளைவாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தெலுங்கு மொழி இலக்கியம் ''பாரம்பரிய இலக்கியம்'' மற்றும் ''நவீன இலக்கியம்'' என இரு கூறுகளாகப் பிரிந்து இயங்கத் தொடங்கிற்று.

திறனாய்வுக் கலையைப் பொறுத்த மட்டில் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிங்களி சூர்ணா (1520-1580) என்பவரே தெலுங்கு மொழி இலக்கியத்தின் முதல் விமர்சகர் ஆவார். அதன்பின் சமஸ்கிருதத்திலிருந்து தெலுங்கில் மொழியாக்கம் செய்யப்பட்ட ''அலங்காரம்'' என்ற நூல் தெலுங்கு மொழி இலக்கியத்தில் போதிய திறனாய்வுக் கலையை வளர்க்க உதவியது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேதல வேங்கடாச்சார்யலு (1900-1968) எழுதிய ''த்வன்ய லோகம்'' என்னும் நூல் முதல் திறனாய்வுக்கலை நூல் என்பதோடு மட்டுமல்லாமல், திறனாய்வுக்கலையின் இலக்கை இலக்கியவாதிகளுக்குச் சுட்டிக் காட்டவும் செய்தது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கவிஞர் விஸ்வநாத சத்திய நாராயணராவ் (1895-1976) ஒரு சிறந்த திறனாய்வாளராகத் திகழ்ந்தார். இவரது அடிச்சுவட்டில் டி. வேங்கடவதனி, பண்டரு தம்மையா மற்றும் சேசேந்திர சர்மா போன்றோர் தெலுங்கு மொழி இலக்கியத் திறனாய்வுக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர்.

பதினான்காம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட ''லீலா திலகம்'' என்ற நூலே செய்யுளியல் (Poetics) தொடர்பாக மலையாள மொழியில் எழுதப்பட்ட முதல் இலக்கியமாகக் கருதப்படுகிறது. மலையாள மொழி இலக்கிய உரைகள் (Commentaries) அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன என்பதனைக் காணும் போது, சமஸ்கிருத மொழி எந்தளு மேலாண்மைத் திறனை, மலையாள மொழி இலக்கியத்தில் ஏற்படுத்தியுள்ளது என்பதனை அறியலாம். ஆனால் 1903 வாக்கில் ஏ. ஆர். ராஜராஜவர்மாவால் எழுதப்பட்ட ''பாஷா பூஷணம்'' என்ற நூலும், 1905இல் அவரால் எழுதப்பட்ட ''காந்தார தர்க்கம்'' என்ற நூலும் திறனாய்வுக் கலைக்கு முன்னோடிகளாகத் திகழ்கின்றன. இவையும் ஆங்கில மற்றும் சமஸ்கிருத மொழி இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கேரள வர்மா வளியக் கோவில் தம்புரான் (1845-1914) மற்றும் சி. பி. அச்சுதமேனன் (1863-1933) போன்றோர் நவீன உரைநடைக்கு வித்திட்டனர். இதே காலத்தில் வள்ளத் தோல் நாராயண மேனன் (1818 - 1958) உள்ளூர் பரமேஸ்வரன் நாயர் (1879-1949) பி. கே. நாராயண பிள்ளை மற்றும் குமரன் ஆசான் போன்றோர் மேலை இலக்கியத் திறனாய்வுக்கலை நுணுக்கங்களைக் கையாண்டு திறனாய்வு செய்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கே. எம். பணிக்கர் (1894-1963), ஜோசப் முண்டசேரி (1903-1977), கே. பாஸ்கரன் நாயர் (1913-1982) மற்றும் எழுத்தச்சன் போன்றோர் இப்பணியைத் தொடர்ந்துள்ளனர்.

ஒன்பது மற்றும் பத்தாம் நூற்றாண்டுகளில் திருபதுங்கன் மற்றும் நாகவர்மன் இவர்களால் எழுதப்பட்ட ''கவிராஜ

மார்க்கம்'' என்னும் நூலே கன்னட மொழியில் பழைமையான திறனாய்வுக்கலை நூலாகும். கன்னட மொழி இலக்கியம் 12ஆம் நூற்றாண்டில் இரண்டாம் நாகவர்மராலும், 13ஆம் நூற்றாண்டில் கவி காமதேவராலும் வளர்க்கப்பட்டாலும், முறையான திறனாய்வுக்கலை என்பது இருபதாம் நூற்றாண்டிலேயே தோன்றியுள்ளது என்பதுதான் உண்மை.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பி. எம். ஸ்ரீ காந்தையாவால் எழுதப்பட்ட ''ஒரு கன்னட மொழியின் விளக்க நூல்'' என்னும் நூலே கன்னட மொழி இலக்கியப் பண்புகளை வெளிபுலகுக்கு அறிமுகம் செய்த முதல் நூலாகும். இவ்வாசிரியர் பிறமொழித் திறனாய்வுப் பண்பு களையும் ஒப்பாய்வு செய்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இவரைப் பின்பற்றி இவரது மாணவர் ஏ. ஆர். கிருஷ்ணா சாஸ்திரி (1890-1968)யும் மற்றும் டி. என். ஸ்ரீ காந்தையா, கே. வி. புட்டப்பா, மஸ்தி வேங்கடேச ஐயங்கார், வி. சீதாராமையா (1899-1983) போன்றோரும் கன்னட மொழியில் திறனாய்வுக் கலையை வளர்க்கக் காரணம் ஆயினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏ. என். கிருஷ்ண ராம் போன்ற ''வளர்நிலை எழுத்தாளர்'' (Progressive Writers) வி. கே. கோகக் (பி. 1909) போன்ற மறுமலர்ச்சி (Revivalist) எழுத்தாளர்களும், யு. ஆர். ஆனந்தமூர்த்தி (பி. 1932) மற்றும் சந்திரசேகர பாட்டீல் போன்ற மிக நவீன வளர்ந்து வரும் எழுத்தாளர்களும் கன்னட மொழி இலக்கியத் திறனாய்வில் பல புதுமைகளையும், புரட்சிக் கருத்துக்களையும் புகுத்தி வந்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய மொழிகள் இலக்கியங்களில் மேற்கொண்ட இத்தகு திறனாய்வுக் கலை ஆய்விலிருந்து காண்பது என்ன வென்றால், தமிழ் மொழி இலக்கியம் தவிர்த்த ஏனைய இந்திய மொழிகள் இலக்கியங்கள் அனைத்திலும், இலக்கியத் திறனாய்வுக் கலையின் தோற்றம் அல்லது வளர்ச்சி என்பது, 19ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை சமஸ்கிருத மொழி அல்லது வேற்று மொழி இலக்கியத் திறனாய்வுக் கலைத் தாக்கமாக இருந்து வந்துள்ளது என்பதாகும். 19ஆம் நூற்றாண்டுக்குப் பின் இன்றுவரை அது ஆங்கில இலக்கியம்

அல்லது மேலை நாடுகள் இலக்கியங்களின் திறனாய்வுக் கொள்கைகள் அடிச்சுவட்டிலேயே உருவாக்கப்பட்டு வந்துள்ளது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

எனினும், இன்று இந்திய மொழிகளின் இலக்கிய வல்லுநர்கள், தங்கள் தங்கள் இலக்கிய நிலைகளை தேசிய அல்லது உலக இலக்கிய நிலைகளில் உயர்த்திக் கொள்ள, தங்களது இலக்கியங்களின் பாரம்பரியப் பழைமையினை ஆராயப் புகுந்திருப்பதோடு, ஒப்பியல் ஆய்வுகள் மூலம் புதுக்கருத்துக்களை அல்லது புது இலக்கியக் கோட்பாடுகளை உருவாக்கவும் முயன்று வருகின்றனர். இந்நிலை இந்திய தேசிய இலக்கியப் பாரம்பரியம், உலக இலக்கிய அரங்கில் ஒளிர்ந்திடும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதைத் தெளிவாக உணர்த்துவதாக உள்ளது.

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும்
பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும்
பாரென்று காட்டிநின் றான் பரமன் தானே. 962

தனிப்பாடல் திரட்டு முதற்பகுதி
—இராமச்சந்திரக் கவிராயர்

"மாமயில் ஊர்பவன் சுடர்மதி அணிந்தோன்"

(இலிங்கபுராணம்)

தமிழகக் கோயிற் கலைச்செல்வர்
தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத்,
கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (ஓய்வு)
பொள்ளாச்சி.

சூரபன்மன் ஆகியோரால் துன்பங்கள் பல அடைந்த இமையவர்கள் இறைவனை அணுகி,

"ஓர்குமரன் தன்னை
நீ தரல்வேண்டும் நின்பால் நின்னையே நிகராக்க
என்றார்"
(கந்தபுராணம் 1-11-42)

தன்னை ஒப்பதோர் ஒரு திருக்குமரனை அருள வேண்டி,

"ஐந்து முகத்தோடு அதோமுகமும்—தந்து
திருமுகங்கள் ஆறாகி" (கந்தர் கலிவெண்பா 76-77)

அமைந்த அறுமுகவனைத் தோற்றுவித்தான்.

கச்சியப்ப சிவாசாரியார் தம் கந்தபுராணத்தில் திருமுகங்கள் ஆறினையும்

"அறிஞராயோர்
சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறு"
(1-11-43)

எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திருமுகங்கள் ஆறும் புதுமையாகத் தோற்றுவித்தன அல்ல; அறிஞர் சிந்திக்கும் பழமையானவை என்பது தெரிய வருகிறது.

சிவபெருமானின் சதாசிவத் திருவுருவிற்கு வாமதேவம், தத்புருடம், ஈசானம், சத்யோஜாதம், அமகாரம் என்ற ஐந்து முகங்கள் உண்டு. இறைவியின் முகமாகிய அதோமுகத்துடன் சேர்ந்து ஆறுமுகங்களாயின.

முருகப்பெருமான் மாங்கனிக்காக உலகை ஒரு நொடியில் வந்தமைக்குச் சிவபெருமான் எங்கும் நீக்கமற நிறைந்த தன்மையை உணர்த்தியதன் மூலம் தான் வேறு சிவபெருமான் வேறு அன்று; ஒருவனே என்பதுதான் உள்ளுறைப் பொருள் எனச் சொல்லப்படுகிறது. இதைத்தான் "கைபொத்து வாழும்" என்று தொடங்கும் திருப்புகழில்,

"வையத்தை யோடி ஐந்துலையற்று வீசு தந்தை
மெய்யொத்த நீதிகண்ட பெரியோனே"

என்பர் அருணகிரி வள்ளல்;

இவை யாவும் சிவபெருமான் வேறு, முருகப்பெருமான் வேறு அல்லன்; ஒருவனே என்பதை உணர்த்துவதாக ஆன்றோர் கூறுவர்; "ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றும்" என இதே கருத்தைத் திருமூல நாயனார் தம் திருமந்திரத்தில் வலியுறுத்துகிறார்; "தனக்குத் தானே மகனாகிய தத்துவன்" என்பது தணிகைப் புராணம்.

இவ்வாறு ஐந்து முகங்கள் கொண்ட சிவபெருமானும், ஆறுமுகங்கள் உடைய முருகப் பெருமானும் ஒருவனே எனப் படுவதால், இரண்டு திருவுருவங்களையும் ஒருங்கு இணைத்துத் தம் கற்பனையை ஓட்டுகிறார் ஒரு சிற்பக் கலைஞர். அதன் விளைவுதான் பதினொரு முகங்கள் இருபத்திரண்டு கைகள் உடைய முருகனது திருவுருவம்.

இத்தகைய வடிவம் ஒன்று மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கோபுரத்தில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது; அதன் அடிப்படையில் குற்றாலத்திற்கு அருகில் உள்ள இலஞ்சிக் கோயிலில் இந்த வடிவை அமைத்துள்ளனர்;

கண்களுக்கு இன்பம் அளிக்கும் இயற்கையின் இனிய சூழ்நிலையில் இலஞ்சி அமைந்துள்ளது;

"சோலை வளைந்து சாலி விளைந்து
சூழும் இலஞ்சி"

என்பர் அருணகிரிநாதர். அவர் இத்தலத்தைப்பற்றி நான்கு திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். இங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானை

"இலஞ்சியில் வந்த இலஞ்சியம் என்று
இலஞ்சி அமர்ந்த பெருமானே"

எனக் கவி நயம் ததும்பப் பாடியுள்ளார்;

இங்குள்ள திருக்கோயிலின் முகப்பில் பதினொரு தலைகள், இருபத்திரண்டு கைகள் கொண்ட முருகப் பெருமான் நின்ற திருக்கோலத்தில் சுதை வடிவில் அமைக்கப் பட்டுள்ளான். அவனது இருபது திருக்கரங்களில் வேல், வாள், சூலம் போன்ற படைக்கலங்கள் காணப்படுகின்றன. அவனது முன் வலக்கை அபய முத்திரையிலும் முன் இடக்கை வரத முத்திரையிலும் உள்ளன. அவனுக்குப் பின்னால் அவனது ஊர்தியான மயில் தென் முகமாக அமைந்துள்ளது;

ஆகமங்களில் விதிக்கப்படாவிடினும், அருளாளர்களின் திருவாக்குகளையொட்டி உருவாக்கப்பெற்ற அரிய திருவுருவம் இது.

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25.00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

அறிகரியாளர்

க. குழந்தைவேலன், க. மு.

உலகிலேயே மிக அதிகக் கல்வெட்டுக்கள் உள்ள நாடு இந்தியா. இந்தியாவிலேயே அதிகக் கல்வெட்டுக்கள் உள்ள நாடு (அதாவது மாநிலம்) தமிழ்நாடு என்பது ஒரு செய்தி. கோயில்களில் மட்டுமல்லாது காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் செம்பிலும் பொறித்துத் தள்ளிவிட்டனர். அவை பல ஆயிரங்கள். நாமும் நம் கடமைக்குத் திருப்பணி என்ற பெயரால் பாதியை அழித்துவிட்ட செய்தியையும் நாம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்.

இக் கல்வெட்டுக்களில் நம்முடைய அரசர்களின் வரலாறுகள் எழுதப்பட்டிருப்பதாகப் பலர் நம்பிக் கொண்டுள்ளனர். கல்வெட்டுக்களில் நூற்றுக்கு 95 விழுக்காட்டுக்கு மேல் கோவில்களுக்கும் பிராமணர்களுக்கும் கொடுக்கப்பட்ட கொடைகளைக் குறிப்பனவே. அந்தக் கொடைகளைக் கொடுக்கும்போது அன்றாள் கோவும் காலமும் ஊரும் பேரும் சொல்லதியிருந்தே வரலாறு படிக்கப்படுகிறது. சிறப்பாக நிலக் கொடை அல்லது நில விற்பனை மிகுதி.

நிலக்கொடை அல்லது நில விற்பனை பதியுமிடங்களாகக் கோயில் அமைந்ததெனக் கூறினும் மிகையாகாது. இன்றுள்ளவாறே அன்றும் ஆவணங்கள் (பத்திரங்கள்) எழுதப்பட்டன. ஆனால் நல்ல தமிழில் ஆவணம் எழுதினால் இன்று அதனை உறுதி செய்வதற்குச் சிலர் 'சாக்ஷிக்' கையெழுத்துப் போட வேண்டும். போட்டால் தான் பதிய முடியும். செல்லும் கடன் ஆவணங்களும் அத்தகையனவே. இந்த 'சாக்ஷி'களுக்குத் தமிழில் சொல்லே கிடையாதா? உண்டு! உண்டு! நாம் தான் அதை உண்டு ஏப்பமிட்டு விட்டோம்.

எந்த ஒரு சொல்லுக்கும் இலக்கிய வழக்கையும் மக்கள் வழக்கையும் தேடி ஏற்ற சொல் காணல் நலம் பயக்கும். சாக்ஷி அல்லது சான்று எனப் பொருள்படும், "அறிகரி" என்ற சொல் சிலப்பதிகாரத்திலும் குறுந்தொகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொய்ச்சான்று கூறுவோரைப் "'பொய்க்கரியாளர்'" என்று அதே சிலம்பு கூறுகிறது.

தொல்காப்பிய உரைகாரரால் "அங்கியங்கடவுள் அறிகரியாக" என எடுத்துக் காட்டும் தொடரிலும், திருவள்ளுவர் "இந்திரனே சாலுங்கரி" எனக் கூறும் குறளிலும் கரி என்பது சான்று அல்லது எடுத்துக்காட்டு என்ற பொருளே மிகுத்துத் தோன்றுகின்றது. இந்தக் கரி என்ற சொல் நாம் இன்று பயன்படுத்தும் சாக்ஷிகள் என்ற சொல்லுக்குச் சாலப் பொருந்துமா என்பது ஆய்வுக்குரியது.

இனி, இதற்காகவே பயன்படுத்தப்பட்ட சொல் மக்கள் வழக்கில் உண்டா என அறிதல் சிறப்பு. இக்காலத் தமிழாக இருக்க வேண்டும் என்பதற்காக எழுத்து மாற்றம் செய்து 'சாட்சி' என்று வழங்குகிறோம். இப்படிச் செய்வதால் அது சாயத் தொட்டியில் வீழ்ந்த நரி போலப் போலியாகுமேயன்றி உண்மைத் தமிழாகாது.

சாக்ஷிக் கையெழுத்துப் போடுவோர் பணி என்ன? கடன் நிலம் விற்றதையோ அல்லது வாங்கியதையோ, நேரடியாகக் கொடுத்ததையோ அல்லது பெற்றதையோ கண்டு அறிந்தவர்கள், இதில் போலிமை, பொய்மை இல்லை; நான்கு பேர் அறிந்து செய்யப்பட்டது என்பதை அறிந்தவராக, 'நான் அறிவேன் (எனக்குத் தெரியும்)' என உறுதி கூற வேண்டும். அசையும், அசையாச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல்களை அறிந்த இவர்களை "அறிகரியாளர் அறிவர்" என்று கூறலாகுமே. இது சரிதானா? எதற்கும் கரி அதாவது சான்று வேண்டுமன்றோ?

கல்வெட்டுக்களில் மேற்கூறிய ஆவணங்கள் எழுதப்படும் பொழுது அதன் இறுதியில் இப்படிக்கு அறிவேன் இன்னார் எனப் பலர் ஒப்பமிட்டிருப்பர். எடுத்துக்காட்டாக

"......இந் நிலம் இரண்டு மாவில் என்னொபாதி விற்றுக் கொடுத்து என்னொபாதி காசு நூற்று நாற்பதுங் கைக் கொண்டேன் வங்கிப்புறத்து திருவிசலூரடிகள் பட்டனேன் இவை என் எழுத்து. இப்படி அறிவேன் கிராஞ்சி சபாபதிப் பட்டனென்" என வரும் திருவிசலூர்க் கல்வெட்டையும் காட்டலாம். இது போன்ற எண்ணிறந்த கல்வெட்டுக்களையும் காட்டலாம்.

இப்படி அறிவேன் எனச் சான்று கூறுவோரை அறிகரியாளர் என இனியேனும் கூறலாமே; இன்னும் 'சாட்சி' வேண்டுமா?

உலக மொழிகளில் மாட்டின் பெயர்கள்

முனைவர் பேராசிரியர் இரா. மதிவாணன்

உலக மொழிகளில் உள்ள மாட்டின் பெயர்களைத் தொகுத்துப் பார்க்கும் ஆசை தோன்றியது. அதற்குமுன் தமிழிலுள்ள மாட்டின் பெயர்கள் பன்னிரண்டு கிடைத்தன. பசு என்னும் வடசொல் தமிழ்நாட்டின் அறிமுகமாதற்கு முன் தமிழிலிருந்த மாட்டைக் குறித்த பெயர்களாவன :

1. கறவை
2. கற்றா
3. பெற்றம்
4. சுரபி

} பால் கறப்பதால் பெற்ற பெயர்கள்.
கற்றா - கன்றையுடைய ஆன்.
பெற்றம் - கன்றை ஈன்றது (பெற்றது).
சுரபி - பால் சுரப்பது.
கறவை - பால் கறப்பது.

5. ஆன், ஆ, ஆவு
6. மாடு

} விலங்கு. { அம்மா - மா, மா - மாடு }
(அவ்வை - ஆவு) தாய் போன்றது.

7. உண்ணி, வளசு
8. துழவு, தூடு
9. புருவை
10. நாகு
11. மூடு

} இளமை குறித்த பெயர்கள்.
இளங்கன்றைக் குறித்த பெயர்களே வளர்ந்த ஆனிரைகளுக்கும் பெயராயின.

12. துறு - மந்தையாகக் கூடி வாழ்வது.

1. கறவை

கன்றீன்ற ஆவைக் கறவை என்று இன்றும் வழங்குகின்றனர். பறப்பது பறவை என்பது போலக் கறக்கும் மாடு கறவையாயிற்று. கோவிந்தன் குழலெடுத்து ஊதியபோது காடு வெட்டிச் சாய்த்தாற்போல கறவைகளெல்லாம் கால் பரப்பித் தரையில் கிடந்து செவியாட்டவும் முடியாமல் மெய்ம்மறந்து இருந்ததாக ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்.

இந்தக் கறவை என்னும் சொல் உலகமொழிகள் பெரும்பாலானவற்றில் வழங்கி வருவது வியப்பளிக்கிறது. மக்கள்

தொகையில் முக்கால் பகுதி மக்களின் நாவில் ஆன், கறவை என்னும் இரண்டே தமிழ்ச் சொற்கள் மாட்டைக் குறிக்கும் சொற்களாக வழங்கி வருகின்றன என்னும் புள்ளி விவரம் மேலும் வியப்பூட்டுகிறது.

தெலுங்கில் பருப்பு - பப்பு, நெருப்பு - நிப்பு என இடையிலுள்ள ரகரம் மறைந்து திரிவதை அறிவோம். இந்த எழுத்துத் திரிபு கறவையையும் தாக்கியது. கறவையிலுள்ள றகரம் மறைந்து கறவை - கவ் (Cow) எனத் திரிந்து ஐரோப்பிய மொழிகளில் தொன்றுதொட்டு வழக்கூன்றி விட்டது. வடமொழியில் கோ, கோமாதா என்றும் வட இந்திய மொழிகளில் காய் (gay) என்றும் திரிந்துவிட்டது.

இதைவிடப் பெரிய புதுமை என்னவென்றால் சோவியத்து நாட்டு மொழிகளில் சிறப்பாக உருசிய மொழியில் உருமாறாமல் கறவ (Korova-a cow with a calf) என்றே இன்றளவும் வழங்கி வருகிறது. ஐயப்படுபவர்கள் இன்றே உருசிய மொழி அகராதியைப் புரட்டிப் பாருங்கள்.

சையாம் நாட்டு தலனி மொழியில் காவ் என்றும், ஆத்திரேலியப் பழங்குடிகளின் மொழியில் கறக் என்றும் வழங்கி வருகிறது.

2. கற்றா

கன்றீன்ற ஆவைக் கற்றா என்பர். இச்சொல் ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழியில் ஒரு பிரிவாரிடை கற்று என்றும் நிக்கோபார் மொழியில் கப்போ என்றும் வழங்கி வருகிறது.

3. பெற்றம்

இச்சொல் இமயமலைச்சாரல் மொழிகளிலும், திபெத் மொழிகளிலும், பித்மா, பிக்மா, பித், பி, பன், பலன் என்றும், துளு மொழியில் பையத்த, பெத்த என்றும், குடகுமொழியில் பய்யூ என்றும், அரபி மொழியில் பக்ரத் என்றும், பருசாகி மொழியில் புவா என்றும், காரன் மொழியில் பொமு என்றும் வழங்கி வருகின்றது. பாசுக் மொழியில் பெய் என்றும், திபெத் மொழியில் பா, பசுக் என்றும், சமற்கிருத மொழியில் பசு என்றும் நேப்பாள மொழியில் பசு இடவலமாகத் திரிந்து சுப - சும என்றும் வழங்கி வருகின்றது.

4. சுரபி (சுரை ஆ)

பால் சுரப்பதால் மாட்டுக்குச் சுரபி என்றும் பெயர் வழங்கியது. சுரை ஆ (சுரையா) என்றும் பெயருண்டு.

இமயமலைச் சாரலிலுள்ள பழங்குடிகளின் மொழியில் செரத், செராத் என்றும் ரகரம் லகரமாகத் திரிந்து சலத், சல், சலவு என்றும் திரிந்து வழங்குகிறது.

5. ஆன், ஆ, ஆவு

ஆறு கோடி தெலுங்கரும், மூன்று கோடி கன்னடியரும். இரண்டு கோடி மலையாளிகளும் ஐந்து கோடி தமிழரும். கோத்தர், குறவர் கைக்கடை மக்களும் ஆ, ஆவு, ஆக்களு என்னும் சொற்களால் மாடுகளைக் குறிப்பிடுகின்றனர். கொரியா மொழியில் ஆம்சோ என்று வழங்குகிறது. நூறு கோடி மக்கள் மொழியான சீனத்தில் ஆன் என்னும் சொல் தசை - சதை என்றாற் போன்று எழுத்துகள் இடவலமாகத் திரிந்து (இலக்கணப்போலி) நியா, நியு என வழங்கி வருகிறது. பர்மிய மொழியில் நுவ, நவ் என வழங்கி வருகிறது. நேப்பாளத்தில் ஒரு பிரிவினரிடை மியாவ் என்றும் திபெத்தில் மியோ - ஓமி எனத் திரிந்தும் வழங்குகிறது. முண்டா மொழியில் ஒரே என வழங்கி வருகிறது.

6. மாடு

அம்மா எனக் கத்துவதால் மா என்றும் மாடு என்றும் பெயர் பெற்றது. பாரசீக மொழியில் மாடுகய், காய் எனவும், சப்பானிய மொழியில் மிசியு என்றும், நேப்பாளத்தில் மா, மே என்றும், உம்மபி, உம்மபிக் என்றும் வழங்கி வருகிறது. கிழக்காசிய பலங்வா மொழியில் மோக்மா, மைமா என்றும், அசாம் நாகர் மொழிகளில் மாசிமோ என்றும், அங்காமி மொழியில் மிடோ, மெடு என்றும், ஆதொம், மாதொம் என்றும் வழங்கி வருகின்றது.

7. உண்ணி, வளசு

மலையாளத்தில் குழந்தையை உண்ணி என்பர். வளரும் பருவத்துச் சிறுவரை வளசு என்பர். (ஒ. நோ. இள - இளசு) இந்த இளமைப் பெயர் கன்றுகளுக்கும் பெயராயின. மங்கோலிய மொழியில் உனியன் உன்னிவன் என்றும், துருக்கி

மொழியில் உயினக், உயினாக் என்றும், மஞ்சு, துங்குசில் உஞியன் என்றும், சமற்கிருதத்தில் வத்ச என்றும், இலத்தீனத்தில் வச்ச என்றும், பிரஞ்சு மொழியில் வச்செ என்றும் மாட்டைக் குறிக்கும் சொற்கள் வழங்கி வருகின்றன. வளசு - லெசு எனத் திரிந்தும் லெஹ்மா எனத் திரிந்தும் பின்னிசு மொழியிலும், மலேயா ஜாவா மொழிகளில் லெம்பு, லம்பு என்றும் வழங்குகிறது. வளசு தமிழில் வாலை (வாலைக் குமரி) வாலியன் (வாலிபன்) எனத் திரிந்திருத்தல் நோக்குக.

8. துழவு, தூடு

மழவு, குழவி (குழவு) துழவு (தூடு) என்பன இளமை குறித்த பெயர்கள். கன்றுக்குட்டியைத் தெலுங்கு மொழியில் தூட என்பர். இச்சொல் மேலையாரிய மொழிகளில் daughter என்றும், சமற்கிருதத்தில் துஹித்தர் என்றும் திரிந்து மகளைக் குறிக்கும் சொற்களாகிவிட்டன.

ஒரோவான் மொழியில் துழவு - தலி, தங்லி எனத் திரிந்துள்ளது. கன்னடத்தில் தலி - தன எனத் திரிந்துள்ளது. நகோசகத்தானி மொழிகளில் தன கன்றுகளைக் குறிக்கிறது. பிராகுவி மொழியில் தகி என்றும் சவரர் மொழியில் தன் என்றும் வழங்கி வருகின்றது.

9. புருவை

விலங்குகளில் பெண்ணாக இருப்பனவற்றைப் புருவை என்பது மரபு. ஆசியத்து சார்ச்சியன் மொழியில் புரி என்னும் சொல் மாட்டைக் குறிக்கிறது.

10. நாகு

ஆடு எருமை ஆகியவற்றில் பெண்ணாக இருப்பவற்றை நாகு என்பது தொல்காப்பியர் காலத்து வழக்கம். ஆயின் ஆப்பிரிக்க மொழிகளில் நாகு என்பதன் திரிபான நக் என்னும் சொல் மாட்டைக் குறிக்கிறது.

11. மூடு

பெண் ஆட்டை மூடு என்பது தொல்காப்பியர் காலத்து வழக்கம். பெண் ஆடுகளை மூடு என்று குறிப்பிடும் வழக்கம் இன்றும் சேலம் மாவட்டத்து வேளாளர்களிடை நிலவுகிறது.

சிறு பெண்களை மூடி என்றழைக்கும் பழக்கம் குடகு மக்களிடம் உண்டு. நடுத் திராவிட மொழிகளில் மாட்டினை மூடி முட, உடு என்னும் சொற்கள் குறித்திருக்கின்றன.

12. துறு

மந்தையாக மேயும் மாடுகள் துறு எனப்படும். அரபி மொழியில் தொர் என்றும் எகுபதிய மொழியில் ஹர் என்றும் இச்சொல் வழங்கி வருகிறது. நகோஜகத்தாலி மொழிகளிலும் ஜர் (zar) என வழங்குகிறது.

மேற்கண்ட பன்னிரண்டு சொற்களில் ஆன் என்பது தென்னிந்தியாவிலும், பர்மா சீன மொழிகளிலும் பெருகி வழங்குகிறது. ஐரோப்பிய வடக்காசிய மொழிகள் 1500 மொழிகளிலும், இந்தியாவில் பாரசீகம் முதல் பர்மிய எல்லை தொட்டு சிங்கள மொழியாளர் உட்பட சற்றொப்ப 518 மொழிகளிலும் கறவை என்னும் சொல் கவ், காவ், காய் எனப் பல்வகையில் மருவியும் கறவ, கறவை என இயல்பாய் நின்றும் பெருமளவில் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

உலக மொழிகளிலுள்ள கால்நடைப் பெயர்களை இவ்வாறு ஆராய்ந்தால் எந்தெந்த மக்கள் கூட்டம் எந்தக் காலக் கட்டத்தில் வெவ்வேறு நாடுகளுக்குப் பிரிந்து சென்றார்கள் என்பதை எளிதில் கண்டறிய முடியும்.

மாடில்லாத ஊர்க்காரர்கள் மாட்டுப்பட்டிகளில் அல்லது சந்தைகளில் கன்றுகளை விலைக்கு வாங்கிச் சென்று வளர்ப்பது வழக்கம். ஆதலால், கன்றுகளுக்குரிய இளமைப் பெயர்களே அவ்வம் மொழிகளில் மாடுகளின் பெயர்களாகி விட்டன.

வீட்டு விலங்குகளுக்கு மக்களின் பெயர்களையே இட்டுச் சாத்தன் சாத்தி என அழைக்கும் வழக்கம் பழந்தமிழ் நாட்டில் நிலவியது. இதைத் தொல்காப்பியரும் விரவுப்பெயர் என்று குறிப்பிட்டிருக்கிறார், இன்றும் மொகஞ்சதாரோ பகுதியில் வாழும் சிந்திகள் தாம் வளர்க்கும் எருமைகளுக்கு மக்கள் பெயரிட்டு அழைக்கின்றனர். வீட்டு விலங்குகளிடம் மக்கள் வைத்திருந்த பேரன்பை இது விளக்கிக் காட்டுகிறது.

பாலூட்டிக் குழந்தைகளை வளர்க்கும் மாடுகளைத் தமிழ் மக்கள் தாயாகவே கருதி அம்மா, மா, என்று அழைத்த சொல்லே மாடு என்று திரிந்தது. அம்மா — அம்மை — அவ்வை என்றும் திரிவதால், அவ்வை என்னும் தாயைக் குறித்த சொல்லே 'ஆவு' என்று தெலுங்கிலும் ஆய் (ஆயா) - ஆ - ஆன் என்று தமிழிலும் வழங்கி வருகிறது. ஆ(வு) ஆய் - (தாய்)ஆ - ஆன் (தாய் போன்றது) [ஒ. நோ: மா - மான் (அழகுடையது)] உலகில் மூன்றிலொரு பகுதி மக்கள் வழங்கிய சொல் இது. மாட்டைத் தாயாகக் கருதாத மூன்றில் இருபகுதி நாகரிகத்தார் வேறு காரணங்களால் பெயரிட்டுக் கொண்டனர். எப்படியிருப்பினும் உலகிலுள்ள மாடுகளுக்கு எல்லாம் தமிழ்ப் பெயர்களாகவே இருப்பது அறியத்தக்கது.

மொழி என்பது :

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல்; அவள் முதலில் அடையும் மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு ஒத்து வளர்வது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது; மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

பலர் சேர்ந்து ஓர் சமுதாயமாய் ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. பலர் ஓர் இனமாய் வாழ்கின்றவர் என்பதற்கு அவர்கள் பேசும் மொழியே உண்மையான அறிகுறி எனலாம். சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருவது மொழி எனலாம்.

—மொழி வரலாறு, மு. வ. பக். 1.

செய்திகள்

மூதறிஞர் மா. சு. சம்பந்தம் முத்து விழா

தமிழாய்வாளரும் தமிழ் உணர்வாளரும் புகழ் பெற்ற எழுத்தாளருமான மா. சு. சம்பந்தம் அவர்களின் முத்து விழா சென்னை பெரியார் திடலில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. விழாவிற்குத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்கள் தலைமை தாங்கினார்கள். விழாக் குழுவின் சார்பில் மணிவாசகர் நூலக உரிமையாளர் பேராசிரியர் டாக்டர். ச. மெய்யப்பன் அவர்களால் அறிஞர்க்கு 'மூதறிஞர்' விருதும் கேடயமும் வழங்கப் பெற்றன. கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் அறிஞர்க்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். கவிஞர் புரட்சிதாசன் அவர்கள் விழாக்குழுவின் சார்பில் பாராட்டிதழ் வாசித்தளித்தார்.

"எழுத்தாளர் அறிஞர் மா. சு. சம்பந்தம் அவர்கள் தனித் தமிழியக்கத்தில் தொடக்கமுதல் தொடர்புடையவர். சம்பந்தம் என்ற பெயரைத் 'தொடர்பன்' என்று மாற்றிக் கொண்டவர். முன்பே சிறிய இலக்கிய இதழ்களை நடத்திய இதழாசிரியர். தமிழ் தொடர்பான கூட்டங்கள் எங்கு நடந்தாலும் அங்குச் சென்று, தமிழுக்கு மாறான செய்திகளை யார் சொன்னாலும் எழுந்து நின்று தக்க வினாக்களை எழுப்பி உடனுக்குடன் மறுப்புரை கூறுவார். தமிழுக்கு ஆக்கமான எல்லா முயற்சிகளிலும் துணை நிற்பார். அண்மையில் நடைபெற்ற தமிழ் எழுச்சிக்கான நடைப் பயணத்தில் குமரிமுனையிலிருந்து சென்னை வரை நடந்தவர். அத்துடன் தமிழ் வளர்ச்சிக்கு அரசு ஆவன செய்யவில்லை எனக் கண்டித்துத் தமிழகப் புலவர் குழு நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டு கைதானவர். இவ்வளவு தமிழுணர்வு மிக்க தமிழறிஞர்க்கு 'மூதறிஞர் விருது வழங்குவது சாலப் பொருத்தமானதாகும்' என்று முனைவர் இரா. இளவரசு தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

பொன்னாடை போர்த்திச் சிறப்பித்த திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் மூதறிஞரின் சிறப்பைப்

பாராட்டிப் பேசுகையில் "டாக்டர் பட்ட ஆய்வாளர்களை விட, ஆய்வு செய்யும் துறையில் திரு. மா. சு. சம்பந்தம் பல வழிகளில் உயர்ந்தவர். அவர் வெளியிட்டுள்ள அச்சுக் கலை, அச்சும் பதிப்பும், தமிழ் இதழ்களின் வரலாறு போன்ற ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு டாக்டர் பட்ட ஆய்வேட்டுக்குச் சமமாகும். எந்தச் செய்தியையும் சான்றில்லாமல் எழுத மாட்டார். ஒரு நூலை எழுத நூற்றுக்கணக்கான நூல்களை ஆண்டுக்கணக்கில் படித்துக் குறிப்பெடுத்து, அதன் பின்னரே எழுதுவார். இதை நோக்குகையில் ஒவ்வொரு நூலுக்கும் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்க வேண்டும்" என்று புகழ்ந்துரைத்தார்.

கடந்த ஐம்பதாண்டுகட்கு மேலாக அவருடன் நெருங்கிப் பழகி வரும் ஆய்வாளர், எழுத்தாளர், ஊ. ஜெயராமன் அவர்களும், பெரும்புலவர் திரு. கி. த. பச்சையப்பன், திரு. கோ. தேவராசன், திரு. த. சுந்தரராசன், பேராசிரியர் மா. ரா. அரசு போன்ற பல்துறைப் பெருமக்களும் பாராட்டிப் பேசினார். பாண்டியன் பாசறை, தலைநகர்த் தமிழ்ச் சங்கம் போன்ற பல்வேறு அமைப்புகளின் சார்பில் மூதறிஞர்க்குப் பொன்னாடைகள் போர்த்தப் பெற்றன. தொடக்கத்தில் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் வரவேற்புரை வழங்கினார். விருதுபெற்ற ஆய்வுப் பேரறிஞர் ஏற்புரை வழங்கினார்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களிடமிருந்தும், குமரி மாவட்ட அறிஞர் அண்ணா கல்லூரி நிறுவனர் திரு. எம். சங்கரலிங்கம், எம். ஏ. அவர்களிடமிருந்தும், பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்களிடமிருந்தும் வந்த வாழ்த்துரைகளைத் திரு. செயசந்திரன் படித்தார். புலவர் வெற்றியழகன் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிந்தது.

முத்து விழாவில் பாராட்டி வழங்கிய வாழ்த்து

"பெரியார் திடலில் பெருங்கவிக்கோ ஏற்பில்
உரியார் இளவரசர் ஊற்றுரையில் சம்பந்தர்
முத்துக் குமரர் முடிமன்னர் மெய்யப்பர்
வெற்றியில் முத்து விழா".

அச்சும் பதிப்பும் அதற்குச் சிறப்பாக
மெச்சத் தகுந்த மிகுவலிமைப் பச்சைத்
தமிழும் அதன்பிடிப்பும் சம்பந்தர் வேட்கை
தமது விழிப்பின் நரம்பு.''

—டாக்டர். புரட்சிதாசன், டி.லிட்.
பாண்டியன் பாசறை, சென்னை-17.

திரு. ஆ. சுப்பையா பிள்ளை மறைவு

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக முன்னாள் மேலாளர் திரு. ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள் 2-6-1993 புதன் கிழமை இரவு சுமார் 7 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர்கள் வாழ்க்கை வரலாறு

திரு. ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள் பாளையங் கோட்டையில் திருவாளர் ஆண்டியப்பபிள்ளை அவர்கட்கும் திருவாட்டி சங்கரவடிவு அம்மையாருக்கும் 11-11-1914இல் நான்காவது மகனாகப் பிறந்தார்.



இவர் பாளையங்கோட்டையில் கல்வி பயின்றார். அதன்பின் தூத்துக்குடி சென்று வாழ்ந்து வந்தார். 1933இல் தூத்துக்குடியிலிருந்து சென்னை வந்து சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் எழுத்தராக 1933 முதல் 1941 வரை பணிபுரிந்து வந்தார்கள். பின்னர் கழகத்திலிருந்து விலகி (The Coop. Fire and General Ins. Co. Ltd) கூட்டுறவு நெருப்புக் காப்பீட்டுக் கழகத்தில் சுமார் இருபத்திரண்டு ஆண்டுகள் எழுத்தாளராகவும், தலைமை எழுத்தாளராகவும் பணியாற்றினார்கள். இவர் கூட்டுறவு காப்பீட்டுக் கழகத்தி

லிருந்து விலகிச் சைவசித்தாந்தக் கழகத்தில் மேலாளராக 1962இல் பொறுப்பேற்று மீண்டும் கழக வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார்கள். கழக மேலாளராக சுமார் 29 ஆண்டுகள் வேலை பார்த்து 1-2-1991இல் உடல்நலம் சரியில்லாததால் கழகப் பணியிலிருந்து தானே ஓய்வு வேண்டிப் பெற்றார்கள்.

இவருக்கு இரண்டு மகனும், இரண்டு மகளும் உள்ளனர். மூத்த மகன் திரு. பழநியப்பன் வீட்டு வசதி வாரியத்தில் பணியாற்றி வருகிறார். இரண்டாவது மகன் திரு. கணபதி மாக்மில்லன் நூல் விற்பனை நிலையத்தில் பணி செய்கின்றார். இவர் தம் மக்கள் எல்லோருக்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து நல்ல நிலையில் இருக்கிறார்கள். இவருடைய பேரன் ஒருவர் தம் தகுதியினாலேயே மருத்துவக் கல்விக்கு இடங்கிடைத்து, பயின்று, மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவருக்குத் தெய்வபக்தி அதிகம். முருகப் பெருமானிடம் நிறைந்த பக்தி. இவருடைய வீட்டிற்கு "முருகனடிமை" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இவர் ஒவ்வொரு பிறந்த நாளன்றும் முருகப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு செய்து அன்பர்கள் எல்லோருக்கும் "கந்தர் சஷ்டிக் கவசம்" என்ற நூலை அன்பளிப்பாக வழங்கி வந்தார். இவர் எப்போதும்

"நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்".

"கடமையைச் செய் பலன் தரும்".

"எல்லோரிடமும் அன்பாகப் பழகுதல் வேண்டும்".

என்று சொல்லி வருவார். இவர் ஓராண்டுக்கு மேல் உடல் நலமில்லாமல் இருந்தார். இவர்கள் ஆருயிர் முருகப் பெருமான் திருவடியில் இன்ப அன்புற்றமர்கவென வாழ்த்தி வணங்குவோம்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. வி. குமாரசாமி அவர்கள், ரியூனியன் தீவு.	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00

திரு. A. T. A, ஈஸ்வர அடிகளார்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா.	25 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79.	5 00

மறைமலையடிகள் நூல் நிலையத்தில் படிக்கும் பகுதியில் உள்ள கதவுகளை 23-5-93இல் பழுது பார்த்துக் கொடுத்தவர்கள்.

திருமதி. கஸ்தூரி, படாளம், சென்னை-12.

திரு. உ. சுப்பிரமணியன், சென்னை-18.

மறைமலையடிகள் நூல் நிலையத்திற்குப் பின்வரும் அன்பர்கள் மனம் உவர்ந்து ரூ. 325 விலை மதிப்புள்ள தண்ணீர் வடிகட்டி (Water Filter) அன்பளிப்பாக 25-5-93 வழங்கியுள்ளனர்.

திரு. வேலாயுதம் (சோதிடர்) பெரியமேடு, சென்னை-3.	100 00
திருமதி. Pagmar Hellmann, 22, Woleselely Road, London.	100 00
செல்வி. ஷீலா, University of Kerala, Kariyavattam.	75 00
திரு. S. ஜெயராஜ், வேப்பேரி, சென்னை-7.	50 00

இவர்களுக்கு நூலகம் இனிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிட்.

164895
சென்னை-600

கழகப் புதிய வெளியீடுகள்

தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும்

கோயிற் கலைச்செல்வர் தி. இராசமாணிக்கம் 25 00

சிவனும், முருகனும், தேவியும் மட்டுமன்று; ஐயப்பனும், சித்திரகுப்தரும், சகலகலாவல்லியும், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரும் இவர் கண்களிலிருந்து தப்பவில்லை. போசளர் (கோசலர்), சாளுக்கியர் கட்டிய கோயிற் கலைச் செல்வங்களும், தூங்கானை மாடம், கரக்கோயில்களின் அமைப்புகளும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் போன்ற பகுதிகளும் படிக்கத்தகுந்தவை. பின்பகுதி சிறப்பாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தமிழகக் கோயில்கள், பின்னிணைப்பு போன்ற பகுதிகள் கோயிற்கலையை அறிய உதவுகின்றன. கோயிற்கலையையும், தெய்வங்களின் பெருமைகளையும் இதைவிடச் சிறந்த நூல் விளக்கமாக வெளிவரவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் 40 00

ஆரியம் கலவாத தமிழ்ப் பண்பாடு இருக்கின்றதா? என்று தமிழ் மக்களே வினவத் தொடங்கிய காலத்தில், அத்தகையதொரு சிறந்த பண்பாடு சிறந்தோங்கி வளர்ந்துள்ளது என்பதைச் சான்றுகளுடன் நாகரிகம், சமயம், கலைகள், பொழுதுபோக்கு என்ற தலைப்புகளில் எழுதியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூலை வரவேற்றுத் தம் பெருமையை பெருமிதத்துடன் படித்துப் பயனடைய உதவுகின்ற இந்நூலை எல்லோரும் வரவேற்க வேண்டும். சிறந்த தூயதமிழ் நடையையும் பாராட்டிப் பயன்பெறுவார்கள் என்பதும் எங்கள் எண்ணமாகும்.

தேசிய இலக்கியம் பெரியபுராணம்

அ. ச. ஞானசம்பந்தன் 30 00

பதினான்கு பகுதிகளாக இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொன்றும் சிந்தனைக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. எடுத்துக்கொண்ட தலைப்புக்கு ஏற்பச் சேக்கிழார் காப்பியப் புலவராகும் தகுதியையும், பரந்துபட்ட மனப்பாங்குடைய தமிழ்த் தேசியத்தைப் பாராட்டியும், இலக்கிய மாண்புகளையும், பெரியபுராண பாத்திர மாண்புகளையும், குறிப்பாக ஞானசம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசரின் குணநலன்களை விளக்கும் திறமும் படித்து இன்புறத் தகுந்தவை. ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டிய நூல் என்பதை இந்நூலைப் படித்தவர்கள் சொல்லாமலே புரிந்துகொள்வார்கள்.